# சோழர் காலத்திய ஆவணப் பதிவுமுறைகள்

இடைக்காலத் தமிழ்நாட்டில் பலவகை ஆவணங்கள வழக்கிலிருந்தன. தனியார் இருவரிடையே ஏற்படும் பரிவர்த்தனைகள், விற்பனைகள், உடன்பாடுகள்; சபை, ஊர் ஆகியவை எடுத்த முடிவுகள், தீர்மானங்கள், அளித்த சலுகைகள்; அரசு அளித்த ஆணைகள், சலுகைகள்; தொடர்ந்து நடைபெற வேண்டிய தர்மங்கள், நியதிகள் ஆகியவை ஆவணங்களாகப் பதிவு செய்யப்பட்டன. ஓலையிலோ, கல்லிலோ அல்லது செம்பிலோ இவை பதிவாயின.

தர்மசாஸ்திரம் போன்ற நீதிநூல்கள் ஆவணங்கள் எப்படி அமைய வேண்டும் என்பதற்கு வரன்முறைகள் வகுத்துள்ளன. வியாசர், பிரஜாபதி போன்றோர் ஆவணங்களை (பத்திரங்களை) உபகதபத்ரம் (ரசீது, ஒப்புச்சீட்டு), கிரயபத்ரம் (விலை), ஆத்ஹி பத்ரம் (அடைமானம்), சந்திபத்ரம் (உடன்படிக்கை), ஸ்திதிபத்ரம் (நிலையான நடைமுறை), விபாக பத்ரம் (பாகப்பிரிவினை), தாநபத்ரம் (கொடை), தாசபத்ரம் (அடிமை) என்று வகைப்படுத்தியுள்ளனர்.

சோழர் காலத்தில் ஆவணங்களின் வகைகளும் அவை எழுதப்பட்ட முறைகளும் நிறையக் காணப்படுகின்றன. தன்மையில் கல்வெட்டுகள், தாமே ஆவணங்கள் என்றாலும், அவை மேலும் பலவகையான ஆவண வகை, முறைகளைக் காட்டி நிற்கின்றன. இவ்வகை முறைகள் ஒரு விரிந்த தலைப்பின்கீழ் சொல்லப்படவேண்டிய ஒன்று. இங்கு பெரும்பாலானவற்றை மேலோட்டமாகவே விளக்க முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

Scanned with CamScanner

**ஆவணம் :** [illegible] நிலவிலை ஆவணம், பங்குவிலை ஆவணம் என்ற வகை வகையான ஆவணங்கள் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. ஆவணங்களைப் பரிமாற்றிக்கொள்ள ஆவணக் களங்கள் இருந்தனபோல் தெரிகிறது. இன்று பதிவாளர் முன்னிலையில் விலைக்குண்டான தொகையைக் கொடுத்து வாங்குவது போலவே அன்றும் ஆவணக்களத்தில் தொகை கொடுத்து வாங்கப்பட்டது எனக் குறிப்புகள் உள்ளன. எனினும் இது தொடர்பான ஆவணக்களம், ஆவணக்களி, ஆவணக்களரி போன்ற சொற்களுக்கான பொருள்கள் மேலும் ஆராயப்படவேண்டியவையாகும்.

**பிரமாணம் :** விலைப் பிரமாணம், நிலவிலைப் பிரமாணம், பூமி பிரமாணம், இறைகாவல் பிரமாணம், ஆசிரியப் பிரமாணம், பிரியப் பிரமாணம், சண்டேச்வரப் பிரமாணம் என்று பிரமாணம் என்ற சொல் பாட்சி சோழர்கள் காலக் கல்வெட்டுக்களில் பழகி வருகிறது. ஆள்விலைப் பிரமாணம் கீழே தனியாக விவரிக்கப்பட்டுள்ளது. ஆசிரயப் பிரமாணம் என்பது அஞ்சியவர்களுக்கு அடைக்கலமளிப்பது தொடர்பானது. இறைகாவல் பிரமாணம் என்பது வரியைக் கட்டுவதற்கு விலக்களிப்பது தொடர்பானது.

**தீட்டு :** திட்டு என்பது எழுதப்பட்டது என்று பொருள்படும். கைத்திட்டு, ஒட்டிசைவுத் தீட்டு, நிலைமைத் தீட்டு, அடையோலைத் தீட்டு, ஏவல் தீட்டு, விலைப் பிரமாணத்திட்டு, உபயத்திட்டு, இசைவுத்திட்டு, அந்நிய நாமகரணத் தீட்டு, ஆள்விலைப் பிரமாணத் தீட்டு என்று சோழர் காலக் கல்வெட்டுகள் பல வகைத் திட்டுகளைக் காட்டுகின்றன. இசைவுத்திட்டு என்பது இருவர் நடைமுறைகள், விலை முறைகள் இவற்றை ஏற்று எழுதிக் கொள்வது.

**ஓலை :** அறையோலை, இறையோலை, இறை காவல் ஒட்டோலை, பொருள் மாவறுதிப் பொருட்செலவோலை, சிலவோலை, அடையோலை, செம்போலை, ஆளோலை, அறுதிப் பரிவர்த்தனை ஒலை, விலையாவணவோலை, கையெழுத்து ஒலை என்று பல வகைகள் உள்ளன. மன்னன் கொடையாக நிலங்களைக் கொடுத்தது பற்றிய ஆணை நாட்டாரிடம் வரும்போது நாட்டார் ஆணையைத் தலைமீது ஏற்று நிலங்களின் எல்லை காட்டி அறவோலை செய்து கொடுத்தனர் என்று செப்பேடுகள் பலவற்றிலும் காணப்படுகிறது. இறையோலை என்பது வரிவிலக்கு தொடர்பானது. இறைகாவல் ஒட்டோலை என்பது ஒரு கொடை நிலத்தின் வருங்கால வரிகளுக்காக முன்னதாகவே காசு அல்லது பொன் போன்றவை கொடுத்து எழுதும் ஆவணமாகும். விலைக்காகப் பேசும்போது ஏற்படும் பல செலவினங்களையும் ஏற்றுக் குறிப்பிட்டு உறுதி செய்து எழுதும் ஒலை பொருள்மாவறுதிப் பொருட்செலவோலையாகும்.

**பிறவகைகள் :** மேற்கண்ட வகைகளைத்தவிர மேலும் அறுதிப்பரிவர்த்தனை, நிலவழிப் பரிவர்த்தனை, விலைசிராவணை, இறையிலி சிராவணை, கைத்தடி, கையெழுத்து, கையடை, பரிசு, ஒழுகு, தெரிப்பு, வியவஸ்தை, முறி, நியோகம் போன்ற வேறுபட்ட வகைகளும் சோழர்காலக் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. பல இடங்களில் ஆவணங்களை நேரடியாகக் கல்வெட்டுகளாகவே பொறித்தும் அக் கல்வெட்டுகளையே ஆவணங்களாக மேற்கோள் காட்டப்பட்டும் உள்ளன.

**ஆள் ஓலை :** மனிதனை விலைபேசி விற்று அதற்காக எழுதிப்பதிவு செய்யும் ஆவணம் ஆள்ஒலை அல்லது ஆள்விலைப் பிரமாணம் என்று வழங்கப்பட்டது. வேதாரண்யத்தில் 3ஆம் ராஜராஜன் காலத்தில் ஆள் விலைப் பிரமாணத்திட்டு ஒன்று எழுதப்பட்டுள்ளது (தெஇக. 17:541). இறைவனுக்கு அரியான் பிச்சன் என்பவனால் 10 பேர் 1000 காசுக்கு விற்கப்பட்டுள்ளனர். 10 பேரில் ஐவர் இவனது முன்னோரால் ஏற்கனவே விற்கப்பட்டவர்கள் ஆவர். கல்வெட்டு இவர்களை அடியார்கள் என்றும், சதையாண்டிக் கூட்டத்தவர் என்றும் விற்பனை இவர்களது வழிவழியினரையும் உள்ளடக்கியது என்றும் குறிக்கின்றது. அடிமை வாழ்வு கூட்டம் கூட்டமாகவும், வழிவழியாகவும் விலைப் பொருளாகவும் இருந்ததைக் கல்வெட்டு நன்குணர்த்துகிறது.

Scanned with CamScanner

ஆள்விற்பனை ஆவணமாகப் பதிவு செய்யப்பட்டுக் கல்வெட்டாகப் பொறிக்கப்பட்டதைக் காணும் போது அடிமை வாழ்வு அன்றைய தமிழ்ச் சமுதாயம் ஏற்றுக்கொண்ட மரபு என்று சொல்ல வேண்டியுள்ளது.

தோற்ற மன்னர்கள் வென்ற மன்னர்களின் அடிமைகள். அது கூட ஆள் ஓலையாக எழுதப்பட்டதை ஒரு பாடல்கல்வெட்டு காட்டுகின்றது. மூன்றாம் குலோத்துங்கனின் கீழ் இருந்த வாண மன்னனின் இக்கல்வெட்டு தென்னார்க்காடு மாவட்டம் திருப்பாலைப்பந்தலில் உள்ளது (தெஇக 17:177).

> ''தாரு முடியு முரசுந் தமக்குரிய
> பாரு முடன்பெறுவர் பார்வேந்தர் – வீரப்
> பெருமான் மகதேசன் பேரெழுதித் தத்தந்
> திருமார்பில் ஆளோலை செய்து''

பெரியபுராணத்தில் தடுத்தாட்கொண்ட புராணம் நம்பியாரூரை இறைவனுக்கு அடிமை என்று பேசும். இறைவன்

> ''அக்காலம் உன் தந்தை தன்தந்தை ஆள் ஓலை ஈதால்
> இக்காரியத்தை நீ இன்று சிரித்ததென் ஏட''

என்று அடிமையை ஏட என்று அடக்குகின்றார். மேலும்

> ''இசைவினால் எழுதும் ஓலை காட்டினான் ஆகில் இன்று
> விசையினால் வலிய வாங்கிக் கிழிப்பது வெற்றி ஆமோ''

என்று இறைவன் கூறும் சொற்களால் ஆள்ஓலை இசைவோடு எழுதப்பட்டது என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது. அவ்வோலையில் எழுதப்பட்ட வாசகத்தைச் சேக்கிழார் நல்ல முழு ஆவணமாகவே பாடலில் தருகின்றார்.

கல்வெட்டுகளில் மட்டுமில்லாது சோழர் கால இலக்கியத்திலும் ஆவண முறை தெளிவாகக் காட்டப்படுவது சோழர் காலத்தில் ஆவண அமைப்புகள் வழக்கில் மலிந்திருந்தமைக்கு எடுத்துக்காட்டாகும்.



**நிலைமைத்தீட்டு :** எதிர்காலத்தில் இப்படி இப்படி நடக்க வேண்டுமென குறுநில மன்னர் அல்லது தலைவர் தமக்குள் எழுதிக்கொடுக்கும் உடன்படிக்கை நிலைமைத் தீட்டாகும். சோழர்களுக்குக் கீழ்ப்பட்ட சிற்றரசர்கள் இப்படி எழுதிக்கொண்ட நிலைமைத்தீட்டு செங்கத்தில் (வடார்க்காடு மாவட்டம்) கல்வெட்டாகவுள்ளது. விக்கிரம சோழ சம்புவராயர், கரிகாலச்சோழ ஆடையூர் நாடாழ்வார் ஆகிய இருவர்க்கு விடுகாதழகிய பெருமாளான இராஜராஜ அதிகமான் எழுதித்தந்த நிலைமைத் தீட்டின் சில பகுதிகள் :

> ''இவர்கள் எநக்கு ஒரு காலமும் தப்பாதிருக்க,
> நானும் இவர்களுக்கு ஒருகாலமும் தப்பாதிருக்க கடவேனாகவும்
> இவர்களுக்கு இன்னார் எனக்கின்னாராகவும், எனக்கின்னாதார்
> இவர்களுக்கின்னாதார்களாகவும், இவர்கள் பகை
> என்பகையாகவும், என்பகை இவர்கள் பகையாகவும்;

> ''யாதவராயர் பக்கலும் செய்யகங்கர் பக்கலும்
> குலோத்துங்கசோழ சம்புவராயர் பிள்ளைகள் பக்கலும்
> ஆளும் ஓலையும் போகக் காட்டுதல் உறவு பண்ணுதல்
> செய்யாதேனாகவும்; நாடு முன்பு இராஜராஜதேவர் போது
> நின்றபடியே எங்களில் எல்லை கொல்லைகள் நிற்பதாகவும்;
> இருபத்தொன்றாவது ஆவணி மாதத்து செய்த நிலைமை
> த்தீட்டின்படியே மற்றுள்ள காரியங்களும் ஒருகாலமும்
> தப்பாதேயிருக்கக் கடவேனாகவும் இப்படி சம்மதித்தேந்
> விடுகாதழகிய பெருமாளேன்''

**அந்நிய நாமகரணத் தீட்டு :** கோயிலுக்கு வழிபாட்டிற்காக நிலங்கள் கொடுக்கும்போது இறைவன் பெயரிலேயே அதாவது திருநாமத்திலேயே ஆவணங்கள் எழுதுவது மரபு. இப்படி எழுதிக் கொடுக்கப்படும் நிலங்கள் திருநாமத்துக்காணி என்றழைக்கப்பட்டன. கொடையாளர் செய்ய நினைத்த தர்மத்திற்கு (விளக்கு, அமுதுபடி முதலியன) உண்டான செலவுகளுக்கும் அதிகமாக அந்நிலத்தால் வரும் அதிகப்படி வருவாய் கோயிலுக்கே சேர்ந்துவிடும். இந்த அதிகப்படி வருவாயைப் பிறர் ஒருவருக்கு வழி திருப்பிக் கொடுக்க

Scanned with CamScanner

ஆவணமே அந்நியநாமகரணத் தட்டாகும்.

இத்திட்டு கொடையாளருக்கும் ''அந்நியநாமகரணத்துக்குப்'' பெயர்தந்தவருக்கும் இடையில் எழுதப்படுவதாகும். கொடையாளர் தானே காசு கொடுத்து வாங்கிய நிலமான போதிலும் தன்பேரிலோ, திருநாமத்திலோ (இறைவன் பெயரிலோ) இல்லாமல் பிறிதொருவர் பெயரில் நிலத்தை வாங்கும் வழக்கினை பல 12-13ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகள் நமக்குக் காட்டுகின்றன.

**ஆவண வழக்காறுகள்**

**எழுத்து :** ஆவணம் எழுதிக் கொடுப்பவர்கள் இறுதியில் கையொப்பமிடுவது என்ற மரபு சோழர் காலத்தில் மிக அவசியமானதாக இருந்தது. ''இவை என் எழுத்து'' என்று பெயர்களுடன் ஆவணத்திற்கு கையொப்பங்கள் உயிர்கொடுத்து விளங்கின.

**அறிவேன் :** ஆவணங்களில் சாட்சிக் கையெழுத்து இடுவது என்பது சோழர் காலத்தில் பரந்து காணப்படுகிறது. சாட்சிக்கையொப்பமிடுபவர்கள் 'இப்படி அறிவேன்' என்று தங்கள் பெயர்களுடன் ஒப்பமிட்டு 'இது என் எழுத்து' என்று முடித்தனர். ஓர் ஆவணத்தில் பல சாட்சிக்கையொப்பங்கள் சோழர் காலக் கல்வெட்டுக்களில் பொதுவாகக் காணப்படுவதாகும்.

**ஸயிஞ்ஞை, தற்குறி :** கையொப்பமிடத் தெரியாதவர்கள் ஆவணங்களில் எழுத்தாணியால் சிறிது கீறுவர். இந்தக் கீறல் அல்லது குறி தற்குறி அல்லது ஸயிஞ்ஞை எனப்பட்டது. 'இவை என் எழுத்து' என்பதற்குப் பதிலாக 'இது (பாரதாயன் கேசுவன் அறிவரியான்) ஸயிஞ்ஞை (அல்லது தற்குறி) என்று குறிப்பிட்டனர்.

**மாட்டறிதல் :** ஸயிஞ்ஞை என்றும் தற்குறி என்றும் குறிப்பிட்டவரது குறி கையொப்பமிடத்தெரிந்த ஒருவரால் மாட்டறிந்து (சரி என்று சொல்லப்பட்டு) கையொப்பமிடும் பழக்கம் சோழர் காலத்தில் இருந்தது. இவர்கள் 'தற்குறி மாட்டறிந்தேன்', 'ஸயிஞ்ஞை மாட்டறிந்தேன்' என்று குறிப்பிட்டு இது என் எழுத்து என்று தங்கள் கையொப்பமிட்டனர். இன்று கைரேகை வைக்கும்போது 'இன்னாருடைய இடதுகைப் பெருவிரல் கீறல்' என்று மற்றொருவர் கையொப்பமிடும் பழக்கம் இது போன்றதே.

**முதுகண் :** ஒருவருக்கு மற்றொருவர் பிரதிநிதியாக இருந்து ஆவணங்களை எழுதும் மரபும் அன்று இருந்தன. அவ்வழக்குகளில் 'முதுகண்ணாக உடைய' என்று பெயரெழுதிக் கையொப்பமிட்டனர். குழந்தைகளுக்குத் தாயும் தாய்க்குக் குழந்தைகளும் முதுகண்ணாக இருந்தமை கல்வெட்டுகளால் தெரிய வருகிறது. 'முதுகண்ணாகக் கொண்டு விலைப் பிரமாணம் பண்ணிக் கொடுத்த பரிசாவது', 'முதுகண்ணாக உடைய செல்லப்பெண் ஞானியேன்' (தெஇக. 6:51). 'எங்களம்மை காடன் சிங்கத்துக்கு முதுகண்ணாய் விற்று விலையாவணஞ் செய்து குடுத்தேன்' (தெஇக. 11:405).

**புணை :** ஒருவர் ஒரு தர்மச் செயலை செய்ய ஒப்புக்கொண்டார் எனினும் அவருக்கு மற்றொருவர் புணை (அல்லது பிணை) கொடுக்கும் மரபு சோழர் காலத்தில் இருந்தது. இது இன்றைய பாதுகாப்பு (செக்யூரிட்டி) கொடுக்கும் முறையை ஒத்தது. 'சேந்தனை புணையாகக் கொடுத்து' போன்ற கல்வெட்டு வரிகளை இங்குக் குறிப்பிடலாம். புணைபட்டவர்கள் புணை கொடுத்தவர்களது தவறுகளுக்குப் பொறுப்புடையவர்கள். ஒருமுறை புணை கொடுத்த ஒருவர் தண்டம் கட்ட வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால் அவர் அந்த தண்டத்தொகையைக் கட்டவில்லை. எனவே புணைபட்டவரிடம் வசூலிக்க முற்பட்டனர். புணைபட்டவரும் கையில் காசில்லாதிருந்ததால் அவருடைய நிலத்தை விற்றுப் பணம் வசூலிக்கப்பட்டது (தெஇக. 19:260). வரி கட்டுவதற்காக புணைகொடுக்கும் வழக்கு 'இறைப்புணை' என்ற கல்வெட்டுச் சொல்லால் (தெஇக. 19:278) அறியக் கிடக்கின்றது.

**திரிவிட்டுக் கொடுத்தல் :** ஒருவர் பெயரில் உள்ள ஆவணத்தை அல்லது அவ்வாவணத்தில் குறிப்பிட்டுள்ள செயற்பாடுகளை மற்றொருவர் பெயருக்கு மாற்றிக் கொடுத்தல் 'திரிவிட்டுக் கொடுத்தல்' என்று வழங்கியது (தெஇக. 17:564).

Scanned with CamScanner

**ஒட்டிக் கொடுத்தல் :** ஒரு செயலை ஒப்புக் கொள்வதும் ஏற்று நடத்துவதாகச் சம்மதம் கொடுப்பதும், ஏற்றுக் கொள்வதுமாக ஒருவர் ஆவணத்தில் கையொப்பமிடுவது 'ஒட்டிக்கொடுத்தல்' என்று வழங்கியது. (தெஇக. 17:326) 'இப்படி ஒட்டி இட்டுக்குடுத்தோம்'; 'இக்கையெழுத்து கண்டிலாமையால் கண்டபொழுது சாவாக ஒட்டிக் குடுத்தேன்; விஜயமங்கலமுடைய பரமஸாமிக்கு ஒட்டி; 'இறை காவல் லொட்டோலை இட்டுக்குடுத்தேன்'; 'தண்டமிட வொட்டிக் குடுத்தேன்'.

**அடுத்துக்குடுத்தல் :** கொடையாகக் கோயிலுக்கு கொடுக்கப்பட்ட ஆடு, நிலம் போன்றவை பராமரிப்புக்காக மற்றொருவருக்கு கோயிலைச் சேர்ந்தவர்கள் கொடுப்பது 'அடுத்துக் குடுத்தல்' என்று வழங்கியது. 'இவ்வாடு அறுபதும் இடையற்கு அடுத்துக் குடுத்து' 'ஒலோகமாதேவியார் கந்மிகளுக்கு நிலம் அடுத்துக் குடுத்தோம் ஆழ்வார் கந்மிகளோம்' போன்ற கல்வெட்டு வரிகள் இதை விளக்கும்.

**ஆவணம் எழுதியவர்கள் :** ஆவணங்களை எழுதியவர்கள் ஊர்க்கணக்கர், மத்யஸ்தர் போன்றவர்கள். ஆவணங்களை எழுதியவர்கள் தங்கள் கையொப்பத்தை ஆவணங்களில் இட்டார்கள். 'எழுதினேன் வேட்கோவன்' இக்கோயில் முதல் கணக்கு திருவாரூருடையான் கூளி கணவதி எழுத்து' (தெஇக. 17:601) போன்ற சொற்றொடர்கள் இதனை விளக்கும்.

**முடிவுரை :** சோழர் காலத்தில் நல்ல நீர்ப்பாசன வசதிகள் ஏற்பட்டு நிறைய நிலங்கள் பயிரேற்றப்பட்டன. சமுதாயத்தின் முதுகெலும்பாக விவசாயம் மாறியது. சோழர் சமுதாயத்தில், வாழ்வின் மையப்பொருளாக, செல்வமாக நிலங்கள் விளங்கின. எனவே நிறைய நிலப்பரிமாற்றங்கள் ஏற்பட்டு எண்ணற்ற ஆவணங்கள் சோழர் காலத்தில் நிலவின. சோழர் காலத்தில் கற்கோயில்கள் ஏராளமாக எடுக்கப்பட்டமையால் கல்வெட்டுகள் நிறைய வெட்டப்பட்டன. எனவே மேற்சொன்னவை மட்டுமல்லாது இன்னும் பல்வேறு வகையான ஆவணச்சிக்கல்கள் தோன்றி ஆவண முறைகளும் வகைகளும் மலிந்தன.

Scanned with CamScanner

## சில அரிய சொற்கள்

தமிழ்க் கல்வெட்டுக்களில் பயிலும் பல கலைச்சொற்கள் இடைக்காலத் தமிழ்நாட்டில் நிலவுடைமை, அமைப்பு, அரசு வருவாய், நீர்ப்பாசனம் போன்ற பொருள்களைப் பற்றி விளக்குவனவாக உள்ளன. இக்கலைச் சொற்கள் பல இன்று வழக்கில் இல்லை. சில பொருள் மாறிவிட்டன. சில சொற்கள் பழைய இலக்கியங்களிலோ நிகண்டுகளிலோ கூட இடம் பெறவில்லை. சில சொற்கள் உரையாசிரியர் மட்டும் கையாண்டுள்ளனர். ஆகவே கல்வெட்டுக் கலைச்சொற்களின் உண்மைப் பொருளை விளங்கிக்கொள்வது அவ்வளவு எளிதல்ல. கீழே சில சொற்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள விளக்கம் கடந்த நூற்றாண்டுகளாகப் பல கல்வெட்டாய்வாளர், வரலாற்றாசிரியர் முயற்சியில் சிறுகச் சிறுக வளர்ந்து குவிந்த கல்வெட்டியல் அறிவை அடிப்படையாக வைத்துச் செய்யப்பட்டது என்பதை முதலில் வலியுறுத்தவேண்டும். சில சொற்களுக்குப் புதிய விளக்கம் காண முயன்றிருப்பது முன்னோர்தம் விளக்கங்களில் குறைகாணும் எண்ணத்திலல்ல; வரலாற்றறிவை மேலும் வளர்க்கவேண்டும் என்பதே இதற்கு முக்கிய நோக்கம்.

ஒரு கலைச்சொல்லை விளக்குவதற்கு முன் அது எந்தெந்த சூழ்நிலைகளில் கையாளப்பட்டுள்ளது என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும். பெரும்பாலும் கையாளப்படும் இடத்தை வைத்தே சொற்கள் தமக்குரிய பொருள்களைப் பெறுகின்றன என்பது அகராதியியலார் அறிந்தது. காலந்தோறும் பொருள் மாறுவதும் எல்லா மொழிகளிலும் உள்ள இயல்பு. கல்வெட்டுச்

சொற்களைப் பொறுத்தவரை கையாளப்படும் இடங்களை மிகவும் முயன்றுதான் தொகுக்கமுடியும். கல்வெட்டுக்களை காலவாரியாகவும் இடவாரியாகவும் பிரித்து, சொற்கள் பயிலும் இடத்தைக் குறித்துக் கணக்கிடல் பின்னால் அச்சொற்களின் பொருள்களை விளக்க உதவியாக இருக்கும். கீழே சில அரிய சொற்கள் மட்டும் இவ்வகையில் தொகுக்கப்பட்டு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

**வதி :** இச்சொல் பிரமதேய ஊர்களில் (அதாவது பிராமண ஊர்களில்) பெரும்பாலும் வழங்கப்படுகின்றன. இச்சொல்லை இதுவரை வழி அல்லது சாலை என்று பொருள் தருவதாகக் கருதப்பட்டு வந்தது. உத்தரமேரூர்க் கல்வெட்டுக்களை விரிவாக ஆராய்ந்த நீலகண்டசாஸ்திரி இக்கருத்துக்கு உரமூட்டியதாகத் தெரிகிறது. இதே கருத்தை கே.வி.சுப்பிரமணிய அய்யரும் கொண்டிருக்கிறார். இருவரும் உத்தரமேரு சதுர்வேதிமங்கலத்தில் அவ்வூர்ச் சபையால் 922இல் புதுப்பிக்கப்பட்ட பரமேசுவரவதி என்ற ஒன்றை சாலை எனக் கொள்கின்றனர். ஆயினும் கல்வெட்டில் அச்சொல் வரும் இடத்தைப் பார்த்தால் இது ஒரு நீர்க்கால் என்பது தெளிவாகும். ஏனெனில் இவ்வதியில் நீரோடிக் கொண்டிருந்தது என்று ஒரு வரி உள்ளது. இப்பொழுது அவ்வதி தூர்ந்து (சேறாகி) விட்டதன் காரணமாக ஆடு மாடுகள் செல்வது கூட கடினமாகி விட்டது என்றும் அதனால் அதனைத் தூர் எடுத்து ஆழப்படுத்த வேண்டும் என்றும் சபையினர் முடிவு செய்கின்றனர். இதில் தூர்ந்துவிட்டது என்பது 'நிராயிட்டு' என்று குறிக்கப்பட்டுள்ளது. ஆனால் இச்சொல்லை நீராயிட்டு என்ற வினைச் சொல்லாகக் கொண்டு 'சாலை முழுவதும் நீர் நிறைந்து தேங்கிவிட்டது' என்று பொருள் கொண்டனர். அது தவறு.

வதி என்பதைச் சாலை எனக் கொண்டால் உத்தரமேரூரிலும் மற்ற ஊர்களிலும் வயலெல்லாம் சாலைகளே மலிந்திருக்கும். ஏனென்றால் கல்வெட்டுக்கள் வயல்களூடே பல வதிகளைச் சுட்டுகின்றன. நன்செய் நிலங்களினூடே மிக அரிதாகத் தான் சாலைகளைப் பார்க்கலாம் என்பது தஞ்சைப் பகுதியிலிருப்பவருக்கு நன்கு தெரியும்.



வதிகளும் வாய்க்கால்களும் எப்பொழுதும் ஒரு சேரக் குறிப்பிடப்படுகின்றன. வாய்க்கால் நீரோடும்கால் என்பதில் எந்த ஐயமும் இருக்கமுடியாது. ஆயினும் வாய்க்கால் ஓடும் திசைக்குக் குறுக்காக வதிகள் செல்கின்றன என்பதைக் கல்வெட்டுக்களை ஊன்றிப்பார்த்தால் புரியும். வாய்க்கால் கீழ்மேல் திசைகளில் போனால் வதி தென்வடல்திசையில் போகும்.

''வீர நாராயணவதிக்கு கிழக்கு மான வல்ல வாய்க்காலுக்கு வடக்கு 4ஆங் கண்ணாற்று மூன்றாஞ் சதுரத்து ஆதனூர் பாரதாயன் நாராயணச்சோமாசியார் உள்ளிட்ட அட்டகத்துக்குப்பட்ட கீழை அறுமாவில் ... ... கீழ்பிடாகை கோதண்டராமவதிக்கு மேற்கு கணபதி வாய்க்காலுக்கு தெற்க்கு ஆறாங்கண்ணாற்று நாலாஞ்சதுரத்து .... .... தசபுரியனுள்ளிட்ட அட்டகத்துக்குப் பட்ட அறுமாவில் ....'' (தெஇக. 13:146).

இதிலிருந்து வதி வாய்க்காலின் கிளைக்காலாகக் கருதலாம். உத்தரமேரூர் கல்வெட்டு ஒன்று இதனை நிருபிக்கும் வகையில் விலக்கு வாய்க்காலான விக்ரமசோழ வதி என்று குறிப்பிடுகிறது. வடிகால் நிலையில் வதி பயன்பட்டிருக்கும் என்றும் சொல்லலாம். வதி என்பது வடிகாலைக்குறிக்கும் என்று நடனகாசிநாதனும் ஒரு கட்டுரையில் விளக்கியுள்ளார்.[1]

வதிகளும் வாய்க்கால்களும் இப்படி குறுக்கும் நெடுக்குமாக ஒரு ஒழுங்குமுறையில் அமைக்கப்பட்டதற்கு என்ன காரணம்? பெரும்பாலும் பிராமண ஊர்களில் நிலங்கள் சதுரசதுரமாக கூறுபடுத்தப்பட்டன என்பதை மேல் சுட்டப்பட்ட கல்வெட்டுப்பகுதி உணர்த்தும். வதி, வாய்க்கால், கண்ணாறு, சதுரம் ஆகியன செயற்கையாக உண்டாக்கப்பட்ட ஓர் இணைந்த அமைப்பு என்பதற்குப் பல கல்வெட்டுக்கள் சான்று தருகின்றன. பிராமண ஊர்கள் (அரசனால்) உண்டாக்கப்படும் பொழுது அங்குப் புதிதாகக் குடியேற்றப்பட்ட ஒவ்வொரு பிராமணக் குடும்பத்துக்கும் ஒரே சீரான நிலக்கூறுகளை (பெரும்பாலும் ஒரு

வேலி) கொடுக்க வேண்டிய கட்டாயமிருந்தது. இதுவே மேற்குறிப்பிட்ட சதுர அமைப்புக்குக் காரணம். சில குறிப்பிட்ட ஊர்களின் வாய்க்கால், வதிகளை நேரடியாகப் பார்த்து ஆராய்ந்தால் மேலும் விளக்கம் கிடைக்கும்.

**குடும்பு**

பிராமண ஊர் நிலஉடமை அமைப்புத் தொடர்பான இன்னொரு சொல் குடும்பு ஆகும். முதன்முதல் உத்தரமேரூர் கல்வெட்டுக்களை வெளியிட்ட வெங்கையா இச்சொல் ஊரிருக்கையின் உட்பிரிவு என்ற பொருள்படும் வார்டு (ward) என ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். இந்த வார்டு என்ற பொருளை பின் வந்த நீலகண்ட சாஸ்திரியும் பிற வரலாற்றாசிரியரும், கல்வெட்டாய்வாளரும் பின்பற்றி யுள்ளனர். ஆனால் கே.வி. சுப்பிரமணிய அய்யர் மட்டும் குடும்பை குலம் என்ற சொல்லுக்கு இணைச் சொல்லாகக் கொண்டு 'குடும்பங்களின் கூட்டு' என்று கொண்டார். இது ஓரளவு குடும்பின் உண்மைப் பொருளுக்கு இட்டுச் செல்கிறது எனலாம். எனினும் குடும்பு பயிலும் இடங்களைக் கவனித்துப்பார்த்தால் சிறிது மாறுபட்ட பொருள் தரலாம். உத்தரமேருசதுர்வேதிமங்கலம் பன்னிரண்டு சேரிகளாகவும், 30 குடும்புகளாவும் பிரிக்கப்பட்டிருந்தது. அவ்வூர்ச்சபை பல வாரியங்கள் அல்லது உட்குழுக்களைக் கொண்டிருந்தது. வாரியங்களிலிருந்து உறுப்பினர் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் போது முப்பது குடும்புகளுக்கு பிரதிநிதித்துவம் கிடைக்குமாறு விதிகள் செய்யப்பட்டன. ஆயினும் வாரியங்களின் மொத்த உறுப்பினர் 12 அல்லது 6 என்று சேரிகளின் எண்ணிக்கை விழுக்காட்டில் முடிவு செய்யப்பட்டன.

சேரிகளின் பெயர்கள் பொதுவாக அரசனின் பெயர் கொண்டு இடப்பட்டன, எ.கா., பராந்தகச்சேரி. ஆனால் குடும்புகள் முதற்குடும்பு, இரண்டாம் குடும்பு என்று எண்பெயரே யிடப்பட்டன. சில பிரம்மதேய ஊர்களில் முப்பதுக்கு மேற்பட்ட குடும்புகளும் இருந்தன. காட்டாக, தஞ்சாவூர் மாவட்டத்தில் சந்திரலேகை சதுர்வேதி மங்கலத்தில் 53ஆம் குடும்பு கூட இருந்தது (தெஇக. 6:12). இப்படிச்



சுட்டப்படும் எந்தக் குடும்பின் சார்பாகவும் ஆள்பெயர்கள் வரவில்லை. அதாவது இந்தக் குடும்பில் இன்னார் வசித்தார் என்ற செய்தியில்லை. மாறாகக் குடும்பையொட்டி விளை நிலங்கள் பேசப்படுகின்றன.

> 46ஆம் குடும்பில் இரண்டாம் பாடகத்தில் நிலம் 1/8
> முதல் குடும்பில் நான்காம் பாடகத்தில் 240 குழி.

இதைக்கொண்டு குடும்புகள் விளைநிலப் பங்கீட்டு முறையோடு ஏதோ ஒருவகையில் தொடர்புடையது என்று சொல்லலாம்.

இந்த ஊகத்தை உறுதிசெய்யும் வகையில் சில வெளிப்படையான சான்றுகளும் உள்ளன. சிதம்பரம் வட்டம் உடையார்குடியில் உள்ள ஒரு கல்வெட்டு கோயிலுக்கு அவ்வூர்ச்சபை கொடுத்திருந்த அர்ச்சனா போக நிலத்துக்கு மாறாக (சிறிது காலம் கழித்து) வேறு நிலம் கொடுக்க முடிவு செய்யப்பட்டது; ஏனெனில் முன்பு கொடுக்கப்பட்ட நிலம் ஒரு புதுக்குடும்பில் சேர்க்கப்பட்டதால் இந்த புது ஏற்பாடு செய்யவேண்டியிருந்தது என்கிறது. 947இல் பொறிக்கப்பட்ட இன்னொரு கூரம் கல்வெட்டு இன்னும் தெளிவான செய்தியைக் கொடுக்கிறது. அந்த ஆண்டிலிருந்து அவ்வூர் விளை நிலங்கள் ஆறுதரங்களாகப் பிரிக்கப்பட்டன என்றும், ஆகவே இனிமேல் ஒவ்வொரு வயலுக்கும் பாசன நீர் அக்குடும்புகள் வழியே கொடுக்கப்பட வேண்டும் என்றும், மேலும் ஊர் வாரியங்களும் அப்படியே குடும்புகள் வழியே அமைக்கப்படவேண்டும் எனவும் ஏற்பாடு செய்யப்பட்டது. இக்கல்வெட்டு சில முக்கிய இடங்களில் சிதைந்திருந்தாலும் குடும்பு விளைநிலங்களை அடிப்படையாகச் செய்யப்பட்ட ஓர் அமைப்பு என்பதைத் தெளிவாக்குகிறது. ஒவ்வொரு பிராமணக்குடும்பமும் துய்த்து வந்த பங்குகளைச் சேர்ந்த நிலங்கள் ஒரே சீராக இருக்கவேண்டும் என்பதே இக்குடும்புகள் செய்யப்பட்டதன் நோக்கமாகும். சோழர் காலத்திலும் பிற்காலத்திலும் வேறு சில ஊர்களில் வழங்கிவந்த 'கரையீடு' வழக்கத்தை இது ஒத்தது என்று சொல்லலாம்.

Scanned with CamScanner

பத்தாம் நூற்றாண்டுக்கு மேல் குடும்பு என்ற சொல் கல்வெட்டுக்களில் காண்பது அரிது. பிரமதேயங்களைக் காட்டிலும் தேவதான ஊர்கள் வலுவடைந்தது இதற்கு ஒரு காரணமாகலாம். ஆனால் 'குடும்பு' வழக்கம் மறைந்துவிட்டது எனச் சொல்லமுடியாது. பின்னால் இச்சொல்லுக்கு மாறாகக் கட்டளை என்ற சொல்லாட்சி இருந்தது எனத் தெரிகிறது. கட்டளையும் முதற்கட்டளை, இரண்டாம் கட்டளை என எண்பெயர் பெற்றது (தெஇக. 13:384). தலைச்சங்காடு என்ற பிரமதேயத்தில் 10 கட்டளைகள் இருந்தன. 1239ஐச் சேர்ந்த சில மன்னார்குடிக் கல்வெட்டுக்கள் குடும்பு, கட்டளை ஆகிய இரண்டையுமே மாறி மாறி வழங்குகின்றன (தெஇக. 6:50, 58). இருப்பினும் 11, 12ஆம் நூற்றாண்டுகளில் நிலஉடமை அமைப்பில் பல மாற்றங்கள் ஏற்பட்டு வந்ததால் குடும்பும் கட்டளையும் எல்லாவகையிலும் ஒத்திருந்தன என்று அழுத்தமாகக் கூறமுடியாது.

**வெட்டப்பேறு**

ஊர்களை மொத்தமாகத் தானம் செய்யும் பொழுது தேவதானம், கணிமுற்றூட்டு, வெட்டப்பேறு என்ற சிறப்பு நிலஉடைமை வகைகளில் ஒன்றாக வெட்டப்பேறு குறிக்கப்படுகிறது. இச்சிறப்புவகைகள் பொதுவாக இறையிலி அல்லது மானிய நிலங்களாகும். முதல் இராஜேந்திரன் திருவாலங்காட்டுச் செப்புப்பட்டயத்தைப் பதிப்பித்த கிருஷ்ண சாஸ்திரி இச்சொல்லை வெட்டிப்பேறு எனத்திருத்தி பணிசெய் மக்களுக்குக் கொடுத்த ஒரு இனாம் நிலம் என்று கொண்டார் (தெஇக. 3:ப.389). மேற்கொண்டு எதுவும் அவர் விளக்கவில்லை. ஆயினும் 'வெட்டி' ஊழியர்களுக்கு கொடுத்த நிலம் அது என்று அவர் கருதியிருப்பதாகத் தெரிகிறது. தி.நா.சுப்பிரமணியம் இதை வேட்டப்பேறு எனப்படித்து அது வேட்டல்பேறு எனக் கொள்ளவேண்டும் என்ற கருத்துத் தெரிவித்துள்ளார். அதாவது வேத வேள்விகள் செய்தமைக்காக அளிக்கப்பட்ட மானிய நிலம் என அவர் கொண்டார். கரந்தைச் செப்பேட்டுப் பட்டயத்தைப் பதிப்பித்த கே.ஜி. கிருஷ்ணன் காடுகளை வெட்டுவது தொடர்பான மானிய நிலம் என்று கருத்துத்



தெரிவித்தார். இக்கருத்துக்களில் கிருஷ்ணசாஸ்திரியின் கருத்தே உண்மைப் பொருளுக்கு அருகில் செல்கிறது. வெட்டி என்ற சொல் விஷ்டி என்ற சமஸ்கிருதச் சொல்லின் தமிழ் வடிவம்; ஊதியமில்லா கட்டாய உழைப்பை அது இந்தியா முழுவதும் குறித்தது. தமிழ்க் கல்வெட்டுக்களில் தலைவாயர் அல்லது வாய்த்தலைச் சான்றோர், இளமையார் என்ற சொற்களும் வெட்டிக்கு இணையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. தலைவாயர் வாய்க்கால் மதகுகளைப் பேணிப் பராமரிப்பவர். திருச்சி மாவட்டக் கல்வெட்டுக்கள் இரண்டு வெளிப்படையாக தலைவாயருக்கு ஒதுக்கப்பட்ட நிலத்தை வெட்டப்பேறு நிலம் என்றே குறிக்கின்றன (தெஇக, 8:689, 13:240). கரந்தைப் பட்டயத்திலும் உள்ளூர்ப் பெரிய ஏரியைச் சேர்ந்த அரையர்களின் நிலமே வெட்டப்பேறு நிலம் எனப்படுகிறது. இங்கு அரையர் என்ற சொல் தலைவாயரைக் குறிக்கிறது என்பதில் ஐயமில்லை. ஆகவே ஏரி, கால்கள், மதகு இவற்றைப் பேணுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட மானிய நிலமே வெட்டப்பேறாகும்.

முதலில் நிலஉடமைச் சமுதாயம் வளராத நிலையில் நிலத்தைப் பயிர்செய்பவரே மேற்படி பணிகளுக்காக ஊதியமில்லா உழைப்பு கொடுக்க வேண்டியிருந்தது. நிலஉடமை வளர வளர பயிர்செய்குடிகள் தங்கள் உழைப்புக்கு மாறாக பொருள் அல்லது பணத்தைக் கொடுத்துவிடும் நிலை இருந்தது. அந்த நிலையில் பயிர் செய்குடிகளுக்குக் கீழ்ப்பட்ட வெட்டிக்குடிகள் தோன்றும் நிலை ஏற்பட்டது. வெட்டப்பேறு இந்தக் காலகட்டத்தில் வழங்கிய சொல்லாகும்.

**வாரம்**

வாரம் நிலக்குத்தகைகளில் ஒரு வகை ஆகும். இது நிலக்கிழாரும் குத்தகைதாரரும் தமக்குள் ஒத்து நிலவிளைச்சலை தமக்குள் ஒரு விகிதத்தில் பகிர்ந்து கொள்வது ஆகும். 'மேல்வாரம்' என்ற சொல் நிலக்கிழாருடைய பங்கைப் பொதுவாகக் குறித்தது. அத்துடன் சார்புப் பொருளில் அது அரசுக்குச் சேரவேண்டிய பங்கையும் குறித்தது. 'குடிவாரம்' என்ற சொல் நிலத்தைக் குத்தகைக்குப் பெற்று உழும் குடிகள் விளைச்சலில் பெறும் பங்கைக் குறித்தது. 'உடன்வாரம்' மொத்த விளைச்சலைக் குறித்தது. இன்று இது உடைவாரம் எனப்படுகிறது. மேல்வாரம், குடிவாரம் என்று பிரிப்பதற்கு

Scanned with CamScanner

முன்னால் நிலத்தைப் பயிராக்க [illegible] செலவு உடன் வாரத்திலிருந்து கழிக்கப்பட்டது. சிலபோது, குறிப்பாக பிராமணர் அல்லாத நிலக்கிழார் நிலங்களைப் பொறுத்து, பயிராக்கும் செலவு குடிவாரத்தில் ஏற்றப்பட்டது. பிராமண நிலக்கிழார் பெறும் மேல்வாரம் பயிர்ச்செலவு போக வந்த விளைச்சலில் 3இல் 1 பாகம் என்றும், மற்ற நிலக்கிழார் பெறும் மேல்வாரம் பயிர்ச்செலவு கழிக்காத மொத்த விளைச்சலில் 5இல் 2 பாகம் எனவும் சில 12ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன (கஆஅ. 1918:429).

### பஞ்சவாரம்

மேலோட்டமாகப் பார்த்தால் பஞ்சவாரம் என்றால் ஐந்தில் ஒரு வாரம் என்று பொருள்படும். இரண்டில் ஒன்று செவ்வாரம் என அழைக்கப்பட்டது என்பதை இங்கு ஒப்பு நோக்கலாம். பஞ்சவார வாரியம் என்ற குழு பிரமதேய ஊர்களில் பேசப்படுகிறது. பல்லவர் காலச் சமுதாயத்தை முதலில் ஆராய்ந்த மீனாக்ஷி அம்மையார் பஞ்சகாலம் தொடர்பான காரியங்களைக் கண்காணிக்கும் குழு அது என்று கருதினார். அதற்குப்பின் இக்கருத்து அவ்வளவாக வற்புறுத்தப்படவில்லை. நீலகண்ட சாஸ்திரி தம் சோழர் வரலாற்றில் நிலவிளைச்சலில் குத்தகைதாரருக்குச் சேரவேண்டிய பங்கில் ஐந்தில் ஒரு பங்கு என்ற பொருள் கொள்ளலாம் என்று கோடி காட்டியுள்ளார் (சோழர், 2ஆம் பதிப்பு, ப.590 அடிக்குறிப்பு 58). ஆயினும் அவர் குறிப்பிடும் கல்வெட்டில் குத்தகைதாரருக்குப் பதில் உடமையாளர் என்றிருக்கவேண்டும், ஏனெனில் இங்குப் பஞ்சவாரம் செலுத்துபவர்கள் பிராமண நிலக்கிழார்களாகக் காணப்படு கிறார்கள். கே.வி. சுப்பிரமணிய அய்யர் மொத்த நில வருவாயில் ஆறில் ஐந்து பகுதியே அரசிற்குச் செலுத்தப்பட்டது. அந்த ஆறில் ஐந்து பகுதியே பஞ்சவாரம் ஆகும் என்று கருத்துத் தெரிவித்தார். (எஇ.13:ப.22-28). ஆயினும் இவர் எடுத்துக்காட்டும் கல்வெட்டுக்களில் ஒன்று 978ஐயும் ஒன்று 1246ஐயும் சேரும். காலத்தால் மிக விலகியுள்ள இவ்விரண்டின் செய்திகளையும் சேர்த்துச் செய்துள்ள இவர் முடிவு சரியானதல்ல. முதல் கல்வெட்டு சோழர் கல்வெட்டு, பஞ்சவாரம் வேலிக்கு 50 கலம் எனக் குறிக்கிறது. இரண்டாவது பாண்டியர் கல்வெட்டு, மொத்த நிலவரி வேலிக்கு 60 கலம் எனக் குறிக்கிறது. ஆகவே பஞ்சவாரம் மொத்த நிலவரியில் 6இல் 5 பங்கு (60 கலத்தில் 50 கலம்) என்பது இவர் முடிவு. ஆனால் இவர் காட்டும் இதே சோழர் கல்வெட்டு மொத்த நிலவரி வேலிக்கு 132.5 கலம் என்றும் குறிப்பிடுகிறது. இதன் அடிப்படையில் பஞ்சவாரம் ஆறில் இரண்டு (50/132.5) பங்கு என்று ஆகும். சுப்பிரமணிய அய்யர் குறிப்பிடும் பஞ்சவாரம் அளவு எவ்வளவு என்பதை ஒத்துக்கொள்ளாவிட்டாலும் பஞ்சவாரம் அரசுக்குச் செலுத்தவேண்டிய வரி என்ற அவர் கருத்து ஏற்புடையதே. பெரும்பாலும் பிராமண நிலக்கிழார்களே இப்பஞ்சவார வரியைச் செலுத்துவதாகக் கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன. சிறுபான்மை கோயில்களும் இவ்வரியைச் செலுத்தக் காண்கிறோம். பிராமணர்களுக்கும், கோயில்களுக்கும் அவர்கள் செலுத்தவேண்டிய வரியில் சலுகை அளிக்கப்பட்டதன் விளையே இப் பஞ்சவாரம். முதலில் மொத்த விளைச்சலில்/ மேல்வாரத்தில் 5இல் 1 பகுதி மட்டும் செலுத்தினால் போதும் என்றிருந்தது. பின்பு இந்த விகிதத்தில் சிறிது மாற்றம் செய்யப்பட்டாலும் மானியவரி என்ற பொருளில் இது நீடித்தது.

### கொட்டகாரம்

இச்சொல் 10, 11ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அரசப்பட்டயங்களிலேயே பெரும்பாலும் காணப்படுகிறது. இப்பட்டயங்கள் ஊர்க் கொடைகளைப் பதிவு செய்யும் ஊர்களிலுள்ள எல்லாவகை நிலங்களையும் விவரிக்கும் பகுதியில் 'குளமும் கொட்டகாரமும் இடங்கும் கேணியும்' என்ற சொற்றொடரில் வருகிறது. இச்சொல் வரும் இடத்தை மட்டும் வைத்துப் பொருள் கொள்வது அவ்வளவு சரியாக இருக்காது. ஏனெனில் இந்தச் சொற்றொடர் ஓசை நயத்தையே முதன்மையாகக் கொண்டு வரும் மரபுவழிச் சொற்றொடர். இச்சொல்லுக்கு இதுவரை பல பொருள்கள் கொடுக்கப்பட்டன: அரண்மனை, மாட்டுக்கொட்டில், யானைக் கொட்டில், கதிரடிக்கும் களம். கே.ஜி.கிருஷ்ணன் இந்தப் பொருள் எதுவும் பொருத்தமில்லையென விவாதித்து நெற்களஞ்சியம் என்பதே சரி என்றும் கருத்துத் தெரிவித்துள்ளார் (இராஜேந்திரனின் கரந்தைப்பட்டயம், ப.78).

Scanned with CamScanner

இவர் கருத்தை ஆதரிக்கும் வகையில் நெற்களஞ்சியம் அல்லது பண்டாரம் என்ற பொருள் தரும் சில 13ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுக்கள் உள்ளன (புதுக்கோட்டைக் கல்வெட்டுக்கள், 116:தெஇக. 24:272). ஆனால் இந்த 13ஆம் நூற்றாண்டுப் பொருள் 11ஆம் நூற்றாண்டுக்கு முந்திய காலத்துக்குப் பொருந்துமா என்பதைச் சிந்திக்க வேண்டும். கொட்டகாரம் களஞ்சியம் என்றால் எல்லா ஊரிலும் நெற்களஞ்சியங்கள் இருந்தன என்றும் கொள்ளவேண்டும். இது இயலக்கூடிய செய்தியேயானாலும் நேரடியாக இதற்குச் சான்றுகளில்லை. கொட்டகாரத்தைக் கோட்டகாரமாகக் கொண்டு அதனைக் கோட்டகத்தின் வேறு வடிவம் என்றும் கொண்டால் அது குளங்களில் ஒருவகையெனலாம் (தமிழ் அகராதி). திருவாலங்காட்டுச் செப்புப்பட்டயம் 'கொட்டகாரம்' இருக்கும் இடத்தில் கோட்டகம் என்ற சொல்லையே பயன்படுத்துகிறது. (கே.ஜி. கிருஷ்ணனும் இந்தச் சொற் குழப்பத்தைக் குறிப்பிடுகிறார்). ஒரு தஞ்சாவூர் மாவட்டக் கல்வெட்டு நாககோட்டகம் என்பது ஒரு குளத்தின் பெயர் என்றும் தெரிவிக்கிறது (கஆஅ. 1911:214).

**கோயிற்றமர்**

இச்சொல் கோயில்+தமர் எனப் பிரியும்; அரண்மனைக்குச் சொந்தக்காரர் என்று பொருள்படும். இது பொதுவாக அரசு அலுவலர்களைச் சுட்டியது. அரசச்சுற்றம் என்ற பழைய இலக்கிய வழக்குச் சொல்லையும் இங்கு நினைவுகூரலாம்.

திருச்சி மாவட்டத்தில் உள்ள முதல் இராஜாதிராஜனின் கல்வெட்டொன்று (தெஇக, 8:675) அரசன் தன் ஆணை ஒன்றை 'நம் தமர் எப்பேர்ப்பட்டார்க்கும்' அனுப்பியதாகத் தெரிவிக்கிறது. வேறு சில கல்வெட்டுக்களிலும் 'நம் தமர்' என்ற சொற்றொடர் வந்துள்ளது. இதற்கு முன் அரசன் தன் அலுவலர்களை விளிக்கும் போது 'நம் கருமம் ஆராயும்', 'நம் பணிமகன்', 'நம் ஓலை' என்று தனித்தனியாகக் குறிப்பிடுவது வழக்கமாக இருந்தது. ஆனால் 11ஆம் நூற்றாண்டில் சோழ அரசு உன்னத நிலையை அடைந்தபோது அரசாங்கம் பல அலுவலர்களைக் கொண்டு இயங்கியது. அந்த நேரத்தில் எல்லா அலுவலர்களையும் மொத்தமாகச் சுட்ட கோயிற்றமர் வழக்குக்கு வந்ததாகத் தெரிகிறது. நாளடைவில் இது அரசாங்கம் என்ற பொதுப் பொருளையும் கொடுக்கத் தொடங்கியது. பின்னூற்றாண்டுகளில் இச்சொல் கோமுற்றவர், கோமுற்றவம் என்ற திரிபுகளையும் பெறுகின்றது. பாண்டியர், விஜயநகர் அரசர் கல்வெட்டுக்களில் இராஜகரம் (இராஜகிருகம் என்பதன் திரிபு) அல்லது இராஜகரத்தார் என்ற சொற்களும் கோயிற்றமருக்கு இணைச்சொற்களாகப் பயன்படுத்தப்பட்டன. சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதியில் பின்வழங்கப்பட்ட கோமுற்றவர் என்ற சொல்லைச் சரியான வடிவமாகக் கொண்டு அது 'கோமுற்று' என்ற வேர்ச்சொல்லடிப்படையில் விளக்கப்பட்டிருக்கிறது. அது தவறு என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

**பேரிளமையார்**

பேரிளம்பெண் வயதான பெண்களைக் குறிக்கும். அந்த வகையில் பேரிளமை யென்றால் பொதுவாக முதியோரைக் குறிக்கவேண்டும். பெரும்பற்றப்புலியூர் நம்பி இயற்றிய திருவிளையாடல் புராணத்தில் பேரிளமை இப்பொருளில் வந்துள்ளது (தமிழகராதி). ஆனால் கல்வெட்டுக்களில் இதற்கு மாறான ஒரு பொருள் உண்டு. மேலே சுட்டப்பட்ட 'வெட்டி' ஊழியம் புரிந்த வெட்டியார், பேரிளமையார் என்ற மாற்றுப்பெயர் கொண்டிருந்தனர் என ஒரு 997 ஆம் ஆண்டுப் பாகூர்க் கல்வெட்டு செய்தி தருகிறது. 'வெட்டியாராகிய நாலூற்றுவப் பொற்சாலைப் பேரிளமையார்' என்ற சொற்றொடர் அதில் காணப்படுகிறது. 1177ஆம் ஆண்டைச் சேர்ந்த இரு திருக்கடையூர்க் கல்வெட்டுக்கள் (கஆஅ 1925:253-6) உழுகுடி வெள்ளாளரும் பேரிளமையாரும் ஒன்று என்று தெரிவிக்கிறது. பெரும்பாலும் பிராமண ஊர்களில் பேரிளமையார் சுட்டப்படுகின்றனர். பிராமணர்களுக்குக் கீழ்ப்பட்டிருந்தாலும் ஓரளவு மரியாதையான இடத்தை அங்குப் பெற்றவராக விளங்குகின்றனர். தாமே தனிநாட்டுத் தகுதிபெற்று தனியூர் என்று அழைக்கப்பட்ட பிரமதேய ஊர்களைச் சுற்றியிருந்த நாடுகள் பேரிளமை நாடுகள் எனப்பட்டன. இப்பேரிளமை நாடுகளில் இருந்த ஊர்களில் பிராமண நிலக்கிழாரின் நிலங்களை

Scanned with CamScanner

உழுத உழுகுடி வெள்ளாளரே பெரும்பாலும் வாழ்ந்து வந்தனர். அதாவது பேரிளமையாரே அதிகமாக இருந்தனர். ஆகவே இவை பேரிளமை நாடுகள் எனப்பட்டன.

## முடிவுரை

மேலே சொல்லப்பட்ட செய்திகளிலிருந்து தெரிவது கல்வெட்டுச் சொற்களுக்கு கருத்துவிளக்கம் செய்வதற்கு இலக்கிய வழக்கை மட்டும் நாடினால் போதாது, அவை பயிலும் இடம், காலம் ஆகியவற்றையும் கருத்தில் கொள்ளவேண்டும் என்பதே.

# ஆள் பெயர்கள் காட்டும் சமுதாயம்

சோழர் காலக் (கி.பி.846-1279) கல்வெட்டுக்கள் இடைக்காலத் தமிழ்நாட்டு அரசியல், சமூக மற்றும் பொருளாதார வரலாற்றுக்கு மிகவும் துணைபுரிபவை. இதுவரை ஏறக்குறைய 9,000 சோழர் கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுப் படியெடுக்கப் பட்டுள்ளன. இவற்றுள் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ள சுமார் 3,200 கல்வெட்டுக்களில் காணப்படும் ஆள்பெயர்கள் கீழே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இவைகளிலிருந்து ஏறக்குறைய 9,600 பெயர்கள் நமக்குக் கிடைக்கின்றன. இவற்றில் சில கீழே வருமாறு அமைந்துள்ளன.

**ஒரு பகுதிப் பெயர்கள்**

1. சேனை
2. தன்மப்பிரியன்
3. நாலாயிரவன்
4. உத்தமசோழமாராயன்

**இருபகுதிப் பெயர்கள்**

5. கௌசிகன்/கணவதிபட்டன்
6. கோனுழான்/கவறைமன்றாடி
7. எச்சல்/சோலை
8. கல்லன்/நக்கன்
9. பட்டன்/தானதொங்கியார் (பெண்)

**முப்பகுதிப் பெயர்கள்**

10. காப்பியன்/சேந்தன்/சோமதேவன்
11. கோவத்தக்குடியுடையான்/சிங்கன்/பாழி
12. மதுராந்தக இருக்குவேள்/(ஆன) ஆதித்தன்/ விக்கிரகேசரி
13. பராந்தகன் மாதேவடிகள்/ (ஆன) / செம்பியன் மாதேவியார் (பெண்)

**நாற்பகுதிப் பெயர்கள்**

14. விசலூர் உடையான்/பராந்தகப் பல்லவரையன்/ (ஆன) அரையன்/விளக்கன்
15. சிஞ்சல்கிழவன்/குழியன்/ஆச்சன்/(ஆன) அரிகுலாந்தகவாரணப் பேரரையன்
16. மொகிலியன்/தத்தைக்கன்று/உய்யவந்தான்/ (ஆன) அறம்பயத்தபட்டன்

**ஐம்பகுதிப் பெயர்கள்**

17. காசியபன்/நெற்குப்பையுடையான்/ ஆட்கொண்டான்/ திருச்சிற்றம்பலமுடையான்/ (ஆன) சோளேந்திரசிங்கபட்டன்
18. பெருமருதூர்/ஆத்ரேயன்/நம்பிப்பிரியன்/ பெரியஉடையான்/பஞ்சநெதிவாணபட்டன்

இப்பெயர்கள் பலவகைப்பட்டு காணப்படினும் சில நெறிமுறைகளுக்கு உட்படுத்தி வகைப்படுத்தக்கூடியனவாக உள்ளன. பெரும்பாலான பெயர்கள் ஒன்று அல்லது இரு பகுதிகள் கொண்ட பெயர்களாகவும், மற்றவை மூன்று அல்லது நான்கு பகுதிகள் கொண்டவையாகவும் உள்ளன. ஐந்துக்கு மேற்பட்ட பகுதிகள் கொண்ட பெயர்கள் மிகச்சில. இப்பெயர்களின் பகுதிகள் சில நியதிகளின் அடிப்படையில் அமைந்தவை. ஒரு பகுதி பெற்றோர் இட்ட பெயராகவும், மற்றவை முறையே ஊர், கோத்திரம் அல்லது குடி, தந்தை பெயர், பட்டப் பெயர் எனவும் இருப்பதைக் காணலாம். இப்பகுதிகளை உள்ளடக்கிய அடிப்படை வரைவை எண் குறியீட்டில் கீழ்வருமாறு அமைக்கலாம்.

| ஊர் | குடி | தந்தை | தான் | பட்டம் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |

இன்று தமிழ்நாட்டில் வழங்கும் பெயர்கள் பெரும்பாலும் தந்தையின் பெயரை முதலிலும் தன் பெயரை இரண்டாவதாகவும் வைத்து இருபகுதிப் பெயர்களாக வழங்குகின்றன. இவ்வகை மேலே காட்டிய (3,4)இல் அடங்கும். அதாவது கல்லன் மகன் சோலை என்பவரின் பெயர் கல்லன் (3) சோலை (4) என்றோ, சுருக்கமாக ஆங்கில வழக்கத்தைத் தழுவி க.சோலை என்றோ எழுதுவது இப்போதைய வழக்கம். சோழர்காலப் பெயர்களுள் பெரும்பாலானவை இந்த வகையில் அடங்கும். ஆனால் தந்தை பெயரைச் சுருக்குவது வழக்கமில்லை. பெண்கள் பெயர்களும் இதே பாங்கிலே உள்ளன. திருமணமான பிறகு கணவன் பெயரைச் சேர்த்துக் கொள்வதில்லை. அரசியர் மட்டும் 'மாதேவி' என்று முடியும் ஒரு பட்டத்தைப் பெறுவர்.

மூன்று பகுதிகள் கொண்ட பெயர்களில் ஒரு பகுதி ஊர் பற்றியதாக இருக்கும். காட்டு : 1) உலக்கையூர் உடையான் (3) ஆச்சன் (4) அங்காடி. முதல் பகுதி, ஊர்ப்பெயரோடு கிழான், கிழவன் அல்லது உடையான் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றைப் பின்னொட்டாகப் பெற்றுவரும் (பெரும்பன்றூர் கிழான் பனையூர் கிழவன்). சில பெயர்கள் குடையான், ஊழான் ஆகியவைகளில் முடிகின்றன: பருத்திக்குடையான், ஆற்றூழான். இவற்றை முறையே பருத்திக்குடி உடையான், ஆற்றூர் கிழான் என்று விரிக்கலாம்.

பிராமணர் பெயர்களில் வரும் ஊர்ப்பகுதி பெரும்பாலும் உடையான் முதலிய பின்னொட்டு இல்லாமல் வருகின்றன: (1) கோட்டையூர் (3) பூவத்தன் (4) பூவத்தனார். பிராமணப் பெயர்களில் இன்னும் ஒருவகை உண்டு. அதாவது ஒரு பகுதி ஊர்ப்பெயருக்குப் பதிலாகக் கோத்திரப் பெயரைக் கொண்டிருக்கும்:

---

1 இப்பெயர்களும் பெயர்களுக்குரியோரைப் பற்றிய பிற செய்திகளும் பற்றி விரிவாக அறிய பார்க்க : Noboru Karashima, Y. Subbarayalu & Toru Matsui, A Concordance of the Names in the Cola Inscriptions (Sarvodaya Ilakkiya Pannai, Madurai,1978).

Scanned with CamScanner

(2) காசியபன் (3) கண்ணன் (4) ராமன். பிராமணரல்லாதார் பெயர்களில் மிகச்சிலவே குடிப்பெயரைக் கொண்டுள்ளன.

நான்கும் அதற்கு மேலும் பகுதிகள் கொண்ட பெயர்களுள் ஒரு பகுதி தவறாமல் பட்டப் பெயராகக் காணப்படுகிறது. காட்டு: (1) கிளிநல்லூர் கிழவர் (3) விடங்கன் (4) தேவனார் (ஆன) (5) ஜயங்கொண்டசோழ மூவேந்தவேளார். இதில் (4), (5) க்கு இடையில் உள்ள 'ஆன' ஒரு தனிப்பகுதியல்ல, இணைப்புச் சொல்லே சில பெயர்களில் இது குறிப்பிடப்படுவதும் இல்லை.

மேலே இரண்டு, மூன்று அல்லது நான்கு பகுதிகள் கொண்ட பெயர்களின் தெளிவான, முழுமையான வகைகளைப் பார்த்தோம். ஆனால் இப்படி முழுமையான வகைகளுள் சேராத பெயர்களும் உண்டு. நீண்ட பெயர்கள் சில பகுதிகளை நீக்கிவிட்டும் வரும். பகுதிகள் முறை மாறியும் வரும்.

**எடுத்துக்காட்டாக**
**[1]கிளிநல்லூர் கிழவன் [3] விடங்கன் [4] தேவனார் [ஆன][5]ஜயங்கொண்ட சோழ மூவேந்தவேளார் என்ற பெயர்**

**[2] கிளிநல்லூர் கிழவன் [4] தேவனார் [ஆன]**
**[5] ஜயங்கொண்டசோழ மூவேந்தவேளார் என்று சிலபோதும்**
**[5] ஜயங்கொண்டசோழ மூவேந்தவேளார் என்று மட்டும் சிலபோதும்,**

**[5] ஜயங்கொண்டசோழ மூவேந்தவேளார் [ஆன]**
**[1] கிளிநல்லூர் கிழவன் [3] விடங்கன் [4] தேவனார் என்று சிலபோதும் வரலாம்.**

நீண்ட பெயர்களைச் சுருக்கியெழுதும் பொழுது எழுதப்படும் பகுதிகள் விடப்பட்ட பகுதிகளைவிட சிறப்பானவைகளாகப் பார்த்துக் கொள்ளப்பட்டன. காட்டாக, (4 5) என்ற பெயரைச் சுருக்கினால் (4) தான் விடப்படும். ஏனென்றால் இயற்பெயரை விடப் பட்டப்பெயர் சிறப்புடைய பகுதிதானே? முறை மாறும் பொழுதும் சில நெறிகள் கடைப்பிடிக்கப்பட்டன. (4 3) என்று எப்பொழுதும் வருவதில்லை (வழக்கத்துக்கு மாறானது என்பதால்). பகுதி (3) தனித்தும் வராது.

பெயர்களில் வரும் பல வகைகளாவன :
14, 15, 24, 34, 45, 51, 54,
124, 134, 145, 154, 514, 524, 534,
1234, 1245, 1345, 5124, 5134,
12345, 51234.

இவைகளில் சில வகைகள் (34, 124, 134, 1345) தான் அதிகமாகக் காணப்படுகின்றன. இவ்வகைகளில் சேராத வேறுசில பெயர்களும் உள்ளன. ஒரே ஆள் ஒன்றுக்கு மேற்பட்ட பட்டங்களை வைத்திருப்பதும் உண்டு. அப்பெயர்களில் பகுதி (5) இரண்டு முறை வரலாம்.

எந்தச் சமூகத்திலும் பெயர்கள் சில அடிப்படைக் கோட்பாடுகளை வைத்துத்தான் இடப்படுகின்றன. குறிப்பிடப்பட்ட ஆளின் பெற்றோரின் சமயநம்பிக்கை, குடிப்பெருமை முதலியவைகளைப் பிரதிபலிக்கும் வகையில் பெயர்கள் இடப்படுவது மரபு. நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில் பிறந்த 'ஜாதியும்' ஒரு அடிப்படையாக அமைகிறது. சோழர் கல்வெட்டுகளில் உள்ள பெயர்களில் (34) என்ற வகையைக் கொண்டே மேற்குறிப்பிட்டவைகளை நிரூபிக்கலாம். காட்டாக, சோழர் காலத்தில் சைவ சமயத்தைச் சார்ந்தவர்கள் (சிவனுடைய ஒரு பெயர் ஆன்) நக்கன் என்ற பெயரையும், வைணவர்கள் நாராயணன் என்ற பெயரையும் விரும்பி வைத்துக் கொண்டார்கள் எனத் தெரிகிறது.

பகுதி (2)ஐ உடைய பெயர்களில் உள்ள பிராமண கோத்திரங்களைப் பற்றிய செய்திகள் பிராமணக் குடும்பங்கள் இடம்பெயர்ந்த வரலாற்றை ஓரளவு தெரிவிக்கின்றன. இப்பகுதியை உடைய பெயர்கள் பெரும்பாலும் பிராமணர்களுக்கே உரியவை.

கிழான், உடையான் முதலிய ஒட்டுக்களையுடைய ஊர்ப்பகுதி கொண்ட பெயர் குறிப்பிட்ட ஆளின் ஊரைக் குறிக்கிறது என்று கருதப்படுவது வழக்கம். ஆனால் இப்பெயர்களையும் பெயர்களுக்குரியோரின் செயல்களையும், பதவிகளையும் ஊன்றிப் பார்த்தால் வெறும் ஊரைமட்டும்

Scanned with CamScanner

குறிப்பவையாகக் கொள்ளமுடியவில்லை. மாறாகக் குறிப்பிட்ட ஊரில் நிலக்கிழமை அல்லது உடைமை உடையவர்களே அவ்வவ்வூரின் கிழார் அல்லது உடையார்களாகலாம் என்று தெரிகிறது. மற்றவர்கள் ஊர்உடையார் அல்லது ஊர்கிழவர் எனப்படுவது இல்லை.

இனி, பகுதி (5)ஐ உடைய பெயர்களைப் பார்க்கலாம். இப்பகுதி பட்டப்பெயர்ப்பகுதி என மேலே குறிப்பிடப்பட்டது. அரசனாலும் ஊர் அவைகளாலும் சிறுபான்மை மற்றவர்களாலும் பட்டப் பெயர்கள் வழங்கப்பட்டன. அரசனால் கொடுக்கப்பட்ட பட்டப் பெயர்களே எண்ணிக்கையில் முதலிடம் பெறுவன. பட்டப்பெயர்கள் இரு கூறுகளைக் கொண்டது. முதல் கூறு அரசனின் விருதுப்பெயர் அல்லது இடப்பெயராகவும், இரண்டாம்கூறு ஒரு சிறப்புச் சொல்லாகவும் இருக்கும் (இராஜராஜ வேளான், தக்களூர் நாட்டுப் பேரரையன்). இரண்டாம்கூறை வைத்துப் பட்டப்பெயர்களைச் சில வகைகளாகப் பிரிக்கலாம். முக்கியமாக அவை வேளான், அரையன், ஜாதி அல்லது தொழில் ஆகியவைகளுள் அடங்கும்.

'வேளான்' வகையில் வேளான் அல்லது மூவேந்த வேளான் என்ற பின்னொட்டுகள் ஆளப்படுகின்றன.

காட்டு : இராஜராஜ வேளான், அருமொழி மூவேந்தவேளான்.

இப்பட்டங்கள் வேளாளக் குடியில் பிறந்து பொதுவாழ்வில் உயர்பதவிகளை வகித்தவர்க்கு அளிக்கப்பட்டவை. சங்ககால 'வேள்' என்ற பட்டம் 'வேளான்' என்பதின் முன்னோடியா என்ற கேள்விக்கு தெளிவான பதில் இன்னும் கிடைக்கவில்லை. மூவேந்தவேளான் சோழர்காலத்தில் தான் வழக்கக்கு வந்து செல்வாக்குப்பெற்றது. 907-954இல் ஆண்ட முதல் பராந்தகன் தான் முதன்முதலில் இப்பட்டத்தை வழங்கியவனாகத் தெரிகிறது.

'அரையன்' ராஜன் அல்லது அரசன் என்பதன் இன்னொரு வடிவம். இவ் வகையில் அரையன், பேர்அரையன், அதிஅரையன், மாராயன் என்ற பின்னொட்டுகள் உள்ளன. 'வேளான்' பட்டங்களுக்கும் அரையன் பட்டங்களுக்கும் ஒரு வேறுபாடு உண்டு. அரையன் பெயர்களிலும் முன்கூறாக அரசன் அல்லது இடப்பெயர் வருகிறது. இந்தக் கூறுக்கும் 'அரையன்' கூறுக்கும் இடைப்பட்ட பகுதி ஒன்று உண்டு. அது 'பிரம்ம' என்றாவது ஏதாவது குறுநிலத் தலைவர் குடிப்பெயராகவாவது, ஒரு தொழில்பெயராகவாவது இருக்கும். காட்டு : குலோத்துங்கசோழ பிரம்மப் பேரரையன், திருவிந்தளூர்–நாட்டுப் பல்லவரையன், இராஜராஜ நாடக மாராயன்.

பிராமண அரசியல் தலைவர்களையும், பரம்பரை அரசியல் தலைவர்களையும், சில தொழில் வல்லுநர்களையும் பெருமைப்படுத்த இவ் 'அரையன்' பட்டங்கள் வழங்கப்பட்டன எனலாம். பேர், அதி, மா என்ற அடைகள் சில தகுதி நிலைகளை நிர்ணயித்தன எனவும் வேண்டும். பிராமணர்க்குப் பெரும்பாலும் அதிஅரையன் அல்லது மாராயன் என்று முடியும் பட்டங்களே வழங்கப்பட்டன. மாராயன் என்ற சொல் பெருமன்னன் ராஜராஜன் (985-1014) காலத்திலேயே மிகச் செல்வாக்குப் பெற்றது. பல்லவர்கள் காலத்தில் இது வெகு அருகியே வழங்கப்பட்டது. மாராயன்என்ற இப்பட்டத்துக்கும் தொல்காப்பியம் சுட்டும் வஞ்சித்திணைத்துறையான மாராயத்துக்கும் தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை.

அடுத்து ஜாதி அல்லது தொழில்பற்றிய பட்டங்கள், இவைகளில் காணப்படும் முதல்கூறு மற்ற பட்டங்களில் உள்ளது போன்றதே. பின்னொட்டு ஜாதி அல்லது தொழில்பற்றி யெழுந்தது. இடையர்கள் 'கோன்' அல்லது மன்றாடி' என்ற பின்னொட்டைப் பெற்றார்கள் (மும்முடிச்சோழக் கோன்). வணிகர் செட்டி, மாயிலட்டி, பாலன் என்ற பின்னொட்டுகளைப் பெற்றனர். மற்ற ஜாதியினர் அல்லது தொழிலாளிகள் வேறு வகையில் சிறப்பிக்கப்பட்டார்கள். இப்பெயர்கள் 'அரச விருது+ பெரு + தொழில்/ஜாதி' என்ற பாங்கில் அடங்கும். காட்டாக, தச்சராக இருந்தால் ராஜராஜப் பெருந்தச்சன் என்று வரும். கணக்கர்

Scanned with CamScanner

பெருங்காவிதி என்ற பின்னொட்டைப் பெற்றனர் (ராஜராஜப் பெருங்காவிதி).

இதுவரை குறிப்பிட்ட செய்திகளிலிருந்து ஆள்பெயர்கள் சமுதாய வரலாற்றுக்கு எப்படித் துணைபுரியும் என்பதை ஓரளவு ஊகிக்கலாம். குறிப்பாகப் பட்டப் பகுதி கொண்டுள்ள பெயர்கள் இவ்வகையில் பெரிதும் உதவும். பட்டங்கள் சமுதாயக் தகுதியை நிர்ணயித்தன எனலாம். வேளான், அரையன் என்ற ஒட்டுள்ள பட்டங்கள் சாதாரணத்தொழிலாளிகள் பெற இயலாது என்பதை இரண்டாம் ராஜாதிராஜனின் ஒரு கல்வெட்டு (கி.பி. 1177)[1] பணிசெய்மக்கள் வேளும் அரசும் பெறாதார் ஆகவும் என்று அழுத்தமாகக் குறிப்பிடுவதிலிருந்து அறியலாம்.

மேலும் பட்டங்கள் ஜாதி அடிப்படையில் அளிக்கப்பட்டன என்பது குறிப்பிடப்பட்டது. இடைக்காலத் தமிழ்நாட்டில் ஜாதி எவ்வளவு தூரம் வேரூன்றியிருந்தது என்பதற்கு இது ஒரு சான்று. இப்பட்டங்களுக்குரியவர்கள் சமூகத்திலும் அரசியலிலும் பெற்றிருந்த பதவிகளையும் தகுதிகளையும் கல்வெட்டுகள் ஓரளவு குறிப்பிடுகின்றன. அவற்றைப் பகுத்துப்பார்த்தால் வேளாள நிலக்கிழார்களும் பிராமண நிலக்கிழார்களும் மேலிடத்தைப் பெற்றிருந்தார்கள் எனத் தெரிகிறது. அடுத்து 'அரையன்' பட்டம் பெற்ற சில குறுநிலத் தலைவர்கள் ஏறக்குறைய இத்தகைய செல்வாக்குப் பெற்றிருந்ததைக் குறிப்பிடலாம். இக்கூற்றை மூவேந்தவேளான், பிரம்மராயன்[2] ஆகிய இரு பட்டங்களுக்கும் சோழ அரசுப் பதவிகளுக்கும் உள்ள தொடர்பைக் கொண்டு விளக்கலாம்.

மேலே குறிப்பிட்ட 9600 பெயர்களில் 307 பேர் மூவேந்தவேளான் பட்டத்தையும் 94 பேர் பிரமராயன் பட்டத்தையும் பெற்றிருந்தனர். இவர்கள் பெற்றிருந்த உயர் அரசியல் பதவிகளைக் கீழேயுள்ள அட்டவணையில் காணலாம்.

1. இக்கல்வெட்டின் ஒரு படி தஞ்சாவூர் மாவட்டத்தில் சீர்காழி வட்டத்தில் உள்ள ஆச்சாள்புரத்திலும், இன்னொருபடி அதே வட்டத்தில் திருக்கருகாவூரிலும் உள்ளன (க.ஆ.அ. 1918 எண். 429, 534).
2. இதில் பிரமமராயன், பிரமாதிராயன் ஆகியனவும் அடங்கும்.

| | மூவேந்த வேளான் | பிரம்மராயன் |
|---|---|---|
| பதவி வகித்தவர் | 307 | 94 |
| அதிகாரி | 90 | 4 |
| நாயகம் | 12 | 4 |
| புரவுரித்துறை | 37 | 0 |
| சேனாபதி/தண்டநாயகம் | 0 | 7 |
| ஓலை | 39 | 8 |
| ஸ்ரீகாரியம் | 9 | 1 |
| பிறஉயர்பதவிகள் | 26 | 7 |
| பதவி வகித்தவர் மொத்தம் (பட்டம் பூண்டவருள் விழுக்காடு) | 213(69%) | 31(32%) |

இவ்வட்டவணையிலிருந்து சில சுவையான செய்திகள் கிடைக்கின்றன. அரசியலைப் பொறுத்தவரையில் வேளாளர் பிராமணரைக் காட்டிலும் அதிகச் செல்வாக்குப் பெற்றிருந்தனர். மூவேந்தவேளான் பட்டம் பெற்றவர்களில் 69 விழுக்காட்டினர் உயர்பதவிகளை வகிக்க, பிரம்மராயன் பட்டம் பெற்றவர்களில் 31 விழுக்காட்டினர் தான் அப்பதவிகளை வகித்தனர். மேலும், சில பதவிகள் மூவேந்த வேளாளர்களுக்கே உரியனவாகவும் சில பிரம்மராயர்களுக்கே உரியனவாகவும் இருப்பதைக் காணலாம். புரவுவரித்துறை (அதாவது வருவாய்த்துறை) மூவேந்த வேளாருக்கே உரியதாகவும் சேனாபதிப் பதவி பிரமராயருக்கே உரியதாகவும் இருந்தது குறிப்பிடத்தக்கது. இந்த நிலமை உருவாக என்ன காரணங்கள் என்பதைக் கண்டுபிடிக்க அக்காலச் சமூக, பொருளாதார அமைப்பினைப் பற்றிய பிற செய்திகளையும் ஆராயவேண்டும்.

-------

Scanned with CamScanner

## மாராயமும் மாராயனும்

'மாராயம்' என்ற சொல்லை முதன்முறையாகத் தொல்காப்பியம் பொருளதிகாரம் புறத்திணை இயல் 65ஆம் சூத்திரம் வஞ்சித்திணைத்துறைகளுள் ஒன்றன் பெயராகக் குறிக்கிறது. பின்னர் இது இனியவை நாற்பது (6 : 1), சிலப்பதிகாரம் (25 : 142), புறப்பொருள் வெண்பாமாலை (வஞ்சிப்படலம் : 46)ஆகியவைகளில் வழங்கக் காண்கிறோம். இனியவை நாற்பதில் கருத்து தெளிவாக இல்லை. சிலப்பதிகார வழக்கு தொல்காப்பியத்தை அப்படியே அடியொட்டிச் செல்கிறது. புதிய விளக்கம் எதுவும் இல்லை. புறப்பொருள் வெண்பாமாலையும் தொல்காப்பியத்தைப் போலவே வஞ்சித்துறைகளுள் ஒன்றாகக் குறிக்கிறது. தொல்காப்பியத்தில் வரும் 'மாராயம் பெற்ற நெடுமொழியானும்' என்னும் தொடருக்கு இளம்பூரணர் 'மாராயமாகிய உவகை பெற்ற நெடியமொழியும்' என்று பொருள் கூறுகிறார். 'மாராயம்' என்ற சொல்லுக்கு மகிழ்ச்சி, நற்செய்தி, பாராட்டுச் சொல் என்ற பொருள்கள் உண்டு என்று சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதி (ப. 3173) குறிக்கிறது. நச்சினார்க்கினியர் மேல்குறித்த தொடருக்கு 'வேந்தனாற் சிறப்பெய்திய அதனாற் றானேயாயினும் பிறரேயாயினும் கூறும் மீக்கூற்றுச் சொல்லும்' என்ற பொருள் தருவதோடு 'சிறப்பாவன ஏனாதி, காவிதி முதலிய பட்டங்களும் நாடும் ஊரும் முதலியனவும் பெறுதலுமாம்.....' என்று விளக்கிச் செல்கிறார். புறப்பொருள் வெண்பாமாலையில் மாராய வஞ்சி 'மறவேந்தனிற் சிறப்பெய்திய விறல் வேலோர் நிலையுரைத் தன்று' என்று விளக்கப்படுகிறது. இது நச்சினார்க்கினியர் உரைக்கு அரண் செய்யலாம். ஆக மாராயம் என்பது 'அரசனால் செய்யப்படும் சிறப்பு', 'அதனால் பெறும் பாராட்டு மொழி' என்று கருத வேண்டியுள்ளது. இந்தச் சொல் தொகை நூல்களில் வேறு எங்கும் காணவில்லை. 'மாராயம் பெற்ற நெடுமொழி' க்கு எடுத்துக்காட்டாகக் கொடுக்கப்படும் 'துடியெறியும் புலைய' என்று தொடங்கும் 287ஆம் புறநானூற்றுப் பாடலின் திணை கரந்தையாகவும், துறை நீண்மொழியாகவும் கொடுக்கப்பட்டுள்ளன.

மா. இராசமாணிக்கம் 'மாராயம்' என்பது ஒரு பட்டம் என்று தொல்காப்பியம் கூறுகிறது; அதனைப் பெற்றவன் ''மாராயன்'' எனப்பட்டான்' என்று எழுதியுள்ளார்.[1] நீலகண்ட சாஸ்திரி,[2] ந. சுப்பிரமணியம் போன்ற வரலாற்றாசிரியர்களும் இக்கருத்தை ஓரளவு கொள்வதாகத் தெரிகிறது. ந.சுப்பிரமணியம் எட்டி, காவிதி, ஏனாதி என்பவை மூவகையான மாராயப்பட்டங்கள் என்று கூறுவதோடு மாராயம் என்ற சொல்லுக்கும் மாராயன் என்பதனுக்கும் தொடர்பு உள்ளதாகச் சுட்டிச் சொல்கிறார்.[3] ஆயினும் மாராயம், மாராயன் என்ற சொற்களுக்கிடையே நேரடித் தொடர்பு இருக்கிறது என்பதற்கு உறுதியான இலக்கியச் சான்றுகளில்லை.

காவிதி, எட்டி, ஏனாதி பட்டங்களுக்கு இலக்கிய வழக்குண்டு. காவிதிப் பட்டம் பெற்ற சில புலவர் பெயர்கள் நற்றிணையில் உள்ளன. ஆலூர்க் காவிதிகள் சாதேவனார், இளம்புல்லூர்க் காவிதி, கிடங்கில் காவிதிப் பெருங்கொற்றனார் என்ற பெயர்களில் ஊர்ப்பெயரின் பின்னொட்டாக 'காவிதி' காணப்படுகிறது. ஆகவே காவிதி ஊரைச் சார்ந்து கொடுக்கப்பட்ட பெயராகக் கொள்ளலாம். மதுரைக்காஞ்சியில் காவிதிமாக்கள் தன்மை விவரிக்கப்பட்டுள்ளது: **நன்றும் தீதும் கண்டு ஆய்ந்து அடங்கி/அன்பும் அறனும் ஒழியாது காத்து/ பழிஒரீஇ உயர்ந்து பாய்புகழ் நிறைந்த/செம்மை சான்ற காவிதி** மாக்கள்/ (வரி: 496 : 99). ஏனாதி பட்டம் பெற்றோரும் சிலர் தொகைப்பாடல்களில் காணப்படுகின்றனர். பாண்டியன் ஏனாதி நெடுங்கண்ணன், சோழிய ஏனாதி திருக்குட்டுவன், முதலிய பெயர்களைக் குறிப்பிடலாம். இங்கு அரசன் பெயரோடு

பின்னொட்டாக வருவதைக் கவனிக்கலாம். ஏனாதியைச் சேனாபதியின் மருஉவாகக் கொண்டு சேனாதிபதிகளுக்குக் கொடுக்கப்பட்ட பட்டப்பெயராகக் கொள்வது வழக்கமாக உள்ளது. எட்டிப்பட்டம் மணிமேகலையில் தான் முதன் முதல் குறிப்பிடப்படுகிறது. இது சிறந்த வணிகர்களுக்குக் கொடுக்கப்படும் சிறப்பு என்று தெரிகிறது.

இவற்றில் காவிதி 11ஆம் நூற்றாண்டு வரை கல்வெட்டுக்களிலும் காணலாம். ஊர்க் கணக்கரின் பட்டம் என்ற வகையிலேயே கல்வெட்டுக்களில் வழங்கப்படுகிறது. ஏனாதிப் பட்டம் மிகவும் அருகியே காணப்படுகிறது. எட்டி தனித்து வழங்கவில்லை. எனினும் இலக்கிய வழக்கில் முன்பில்லாத மாராயன் என்ற பட்டம் பெரும் அளவில் கல்வெட்டுக்களில் வழங்குவதைக் காண்கிறோம்.

Scanned with CamScanner

# வைத்திய குலம்

கி.பி. 7-8ஆம் நூற்றாண்டுப் பாண்டியர் கல்வெட்டுகளில்[1] சிலருடைய பேர்கள் 'மங்கலம்' என்ற சொல்லை அடிப்படையாக வைத்து பட்டங்களைப் பெற்றிருக்கின்றன.

(பட்டம்) // (தந்தை) // (தான்)

1. பாண்டி/மங்கல/அதிஅரைசன்//சாத்தன்//ஏறன்
2. மூவேந்த/மங்கலப்/பேரரையன் (ஆகிய)//மாறன்// காரி
3. பாண்டி மங்கல/விசையரையன் (ஆகிய)//மாறன்//எயினன்
4. பாண்டி/அமிர்த/மங்கலப்/பேரரைசன் (ஆயின)//சாத்தன்//கணபதி
5. வீர/மங்கலப்/பேரரைசன் (ஆகிய)//மூர்த்தி//எயினன்
6. பாண்டி இளங்கோ/மங்கலப்/பேரரைசன் (ஆகிய)//சங்கன்//சிரிதரன்.

இவர்களின் முதலில் உள்ளவர் மலையடிக்குறிச்சியில் ஒரு குகைக்கோயிலை உண்டாக்கியவர். அவர் பாண்டிய அரசாங்கத்தில் ஓர் உயர்பதவி வகித்தவர் என்பது உறுதி. மற்ற ஐவரும் முதல் வரகுணபாண்டியன்கீழ் உயர்பதவி வகித்தவர். இரண்டாமவரும் மூன்றாமவரும் ஒருவர்பின் ஒருவர் இவ்வரசன் கீழ் உத்தரமந்திரி பதவி வகித்தனர். நாலாமவரும் ஐந்தாமவரும் மஹாசாமந்தன் என்ற உயர் பதவி வகித்தனர். ஆறாமவர் யானைப்படைத்தலைவர்.

இவர்கள் பெயர்களில் முதலில் கொடுக்கப்பட்ட பகுதி சென்ற கட்டுரையில் விளக்கியது போல் பட்டப்பகுதியாகும்.

Scanned with CamScanner

இடையில் உள்ள இரு பகுதிகள் தந்தை பெயரும் தன் பெயருமாகும். இடையில் உள்ள ஆகிய அல்லது ஆயின என்ற சொல் பட்டத்தையும் பெயரையும் இணைக்கும் சொல். இங்கே பட்டப்பகுதி மட்டும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

இப்பட்டப்பகுதிகளை மூன்று உட்கூறுகளாகப் பிரிக்கலாம். இவற்றில் இறுதிக்கூறு பேரரைசன் என்று நான்கு முறையும் அதிஅரைசன் என ஒரு முறையும் விசையரையன் என ஒரு முறையும் வந்துள்ளது. அரையன், அரைசன் ஆகியன 'அரசன்' என்ற சொல்லின் பிறவடிவங்கள். இங்கு 'தலைவன்' அல்லது 'முதல்வன்' ( chief ) என்ற பொருள் கொடுக்கும். பேர், அதி என்ற இரண்டும் பெருமை என்ற பொருளைத் தரும் அடைகளாகும். 'விசை' விஜய என்பதன் மரூஉ; வெற்றி எனப் பொருள் தரும்.

பட்டப்பகுதியில் முதல் உட்கூறு பாண்டி என இரு முறையும், பாண்டி அமிர்த, பாண்டி இளங்கோ, மூவேந்த, வீர என ஒவ்வொரு முறையும் வந்துள்ளது. இது ஆளும் அரசன் பெயர்சார்ந்து வந்துள்ளது என்பதைச் சொல்லவேண்டியதில்லை. சோழர் காலப் பட்டப்பகுதிகளையும் இங்கு ஒப்புநோக்கலாம்.

இடைப்பட்ட கூறான 'மங்கலம்' இங்குச் சிறப்பாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. இச்சொல் பிராமண ஊர்ப்பெயர்களின் பின்னொட்டாகப் பெரும்பாலும் காணப்படுகிறது (வெள்ளேற்றான் மங்கலம், கும்மணமங்கலம், சிவரமங்கலம் முதலியன). ஆகவே இக்கூறு மேற்குறிப்பிட்ட பேருக்குரியோரின் ஊர்களாகக் கருத வாய்ப்புண்டு. காட்டாக மூவேந்தமங்கலப் பேரரையன் மூவேந்தமங்கலத்தைச் சேர்ந்தவன் என்று கொள்ளலாம். ஆயினும் இப்பெயர்களை அவ்வாறு கொண்டால் உண்மையான பொருள் தவறிவிடும். சோழர் கல்வெட்டுக்களில் உள்ள பெயர்களைப் பகுத்துப் பார்த்தால் பெரும்பாலும் பட்டப்பெயரில் வரும் இந்த இடைக்கூறு ஒரு சாதி அல்லது தொழில் அடிப்படையில் ஏற்பட்டதாக நிருபிக்கலாம். ராஜராஜ பிரம்மராஜன், ராஜராஜ நாடக மாராயன் என்ற பெயர்களில் வரும் பிரம்ம, நாடக என்பவை முறையே பிராமணரையும், நாடகத்தொழில் வல்லாரையும் குறிக்கின்றன. 'மங்கல' என்ற கூறையும் இவை போன்றே கொள்ளல் வேண்டும். அது சாதி/தொழில் அடிப்படையில் எழுந்திருக்கவேண்டும் .

வடமொழியிலும், தமிழிலும் 'மங்கலம்' என்பது மகிழ்ச்சி, போர், பேறு, நற்சடங்கு என்று பல பொருள்களைக் கொண்டுள்ளது.[2] தமிழில் மங்கலன், மங்கலியன் நாவிதரையும் குறிக்கும்.[3] தெலுங்கிலும் 'மங்கலி' என்றால் நாவிதரைக் குறிக்கும்.[4] எனவே மங்கலப்பட்டமுடையோர் நாவிதர் குலத்தைச் சேர்ந்தவர் எனக் கொள்ளலாமா?

உண்மையில் மேலே உள்ளவர்களில் நால்வர் (2-5) களக்குடி அல்லது கரவந்தபுரம் என்னும் பெயர்கொண்ட ஊரினராகவும் வைத்யகுலத்தைச் சேர்ந்தவராகவும் குறிப்பிடப்படுகின்றனர். மற்ற இருவரைப் பற்றி முழுச் செய்தி கிடைக்கவில்லை. முதன்மைக் கல்வெட்டாய்வாளர் கே.ஜி.கிருஷ்ணன் வைத்யகுலத்தைச் சேர்ந்தவர்களின் பட்டப்பெயரில் 'மங்கலம்' சிறப்பாக வருவதைக் குறிப்பிட்டுள்ளார்.[5] ஆயினும் அதன் காரணத்தை அவர் ஆராய முற்படவில்லை. கே.வி.ராமன் தம் 'பாண்டியர் வரலாறு' என்ற நூலில் இச்சொல்லைப்பற்றித் தெளிவாகக் கருத்தளித்துள்ளார்.[6] அவர் வைத்தியகுலம் என்பது வேத விற்பன்னர் குலமென்று சொல்கிறார். அதாவது இவர்கள் வைதிக பிராமணர் ஆக இருக்கவேண்டும் என்பது அவர் கருத்து. வேதசாத்திரங்களை நன்கு கற்றவர் வைத்யர் என்ற சொல்விளக்கம் உண்டுதான். அகராதிகளும் இதைக் குறிப்பிடுகின்றன.

ஆயினும் வைத்தியருக்கு மருத்துவர் என்ற பொருளும் உண்டு.[7] மேற்சொன்ன வைத்ய குலத்தினர் பிராமணர் என்ற குறிப்பு கல்வெட்டுகளில் எங்கும் இல்லை. மேற்குறிப்பிட்ட எவர் பெயரிலும் 'பிரம்ம' என்ற பிராமணருக்கு உரிய அடை இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. அவர்கள் வேதத்தைக் கற்றுக் கரைபோகியவர் என்ற குறிப்புமில்லை. இரண்டாமவர் வேள்விக்குடிச் செப்பேட்டில் சமஸ்கிருதப்பகுதியில் 'சாத்திரங்கள் கற்றவர், கவி, நல்ல பேச்சாற்றல் உடையவர்' என்று பொதுப்படையாகக் குறிப்பிடப்படுகிறார். ''வாத்ய கேய சங்கீதங்களான் மலிவெய்திய வங்களந்தை வைத்தியகுலம்'' என்ற ஒரு குறிப்பும் சிவரமங்கலச்செப்பேட்டில் உள்ளது. இதிலும் வேதச்சார்பு இல்லை.

Scanned with CamScanner

இவற்றையெல்லாம் நோக்கும்போது இவர்கள் நாவிதகுலத்தைச் சேர்ந்தவர் என்பதை ஊகிக்கலாம். பெரும்பாலும் அவர்கள் மருத்துவத் தொழில் புரிந்தவர் என்றும் சொல்லலாம். நாவிதர் மருத்துவர் என்பதில் முரண்பாடு இருப்பதாகத் தோன்றலாம். ஆனால் வரலாற்று நோக்கில் பார்த்தால் அம்முரண்பாடு மேலோட்டமானதே என்று தெரியும்.

அண்மைக்காலம் வரை நாட்டுப்புறங்களில் பல இடங்களில் நாவிதர்கள் மயிர்வினைஞர்களே அல்லாமல் மருத்துவத் தொழில் புரிபவர்களாகவும் இருந்திருக்கிறார்கள். நாவிதப் பெண்கள் மருத்துவச்சிகளாக பேறுகாலங்களில் உதவுவது வழக்கமாக இருந்துள்ளது. ஒரு அரசியின் பேறுகாலத்தில் அறுவைச்சிகிச்சை செய்த ஒரு 'மங்கலை' பற்றி கொங்குமண்டலசதகம் குறிப்பிடுகிறது. உண்மையில் பழந்தமிழ்ச் சமூகத்தில் நாவிதக்குலம் ஒரு மதிப்புடைய குலமாகவே இருந்தது. கொங்குநாட்டில் இன்றும் நாவிதர் பலகூட்டத்தினருக்கு, குறிப்பாக கொங்குவேளாளருக்கு மணவினை போன்ற சடங்குகளின் போது முக்கியப் பொறுப்புக்களையேற்று நடத்துகின்றனர்.

சோழர் கல்வெட்டு ஒன்றில் தொடர்புடைய ஒரு செய்தி கிடைக்கிறது. தஞ்சாவூர் பெரிய கோயிலிலுள்ள ராஜராஜனின் கல்வெட்டு (கி.பி.1014) ஒன்றில் பஞ்சவன் மங்கலப் பேரரையன் அரையன் பவருத்திரன் என்பவர் கோலினமை என்ற தொழிலில் வல்லவர் என்ற குறிப்பு உள்ளது.[8] 'கோலினமை' என்ற சொல் எதைக்குறிக்கிறது என்பதற்கு அகராதிகளில் விளக்கம் கிடைக்கவில்லை. ஆயினும் இது மருத்துவத்தோடு தொடர்புடையது என்பதை ஊகிக்கலாம். இப்பெயருக்குப் பக்கத்தில் ராஜராஜ பிரயோகதரையன் என்ற அம்பட்டன் குறிக்கப்படுகிறார். பிரயோகம் மருத்துவசிகிச்சையைக் குறிக்கும். அம்பட்டன் என்ற சொல்லும் மருத்துவரைக் குறிக்கும்.

மேற்சொன்ன செய்தித் துணுக்குகளையெல்லாம் தொகுத்துப் பார்த்தால் மங்கலம் என்ற சொல் மருத்துவர் என்று பொருள்படும் வைத்யரோடு தொடர்புடையது என்பதை மறுக்கமுடியாது.

Scanned with CamScanner

# கல்வெட்டில் இந்து-முசுலிம் சமய ஒருமைப்பாடு

இந்தியப் பண்பாட்டிற்குத் தமிழர் வழங்கியவைகளில் இந்து-முசுலிம் சமய ஒருமைப்பாடு மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். எதிர்கால இந்தியச் சமுதாயம் சமய வேறுபாடுகளை யெல்லாம் களைந்து ஒன்றுபட்டு வாழ்ந்து முன்னேறிச் செல்லச் சமய ஒருமைப்பாடு மிகவும் இன்றியமையாததாகும். இத்தகு சிறப்பு வாய்ந்த சமய ஒருமைப்பாட்டிற்குக் கல்வெட்டுக்கள் நமக்கு மிகச் சிறந்த சான்றுகளைத் தந்து வழிகாட்டிகளாக அமைந்துள்ளன.

## சோழர் காலம்

இராசராசன் 1010இல் கட்டிமுடித்த தஞ்சைப் பெரிய கோயிலுக்குப் பலரும் கொடையளித்துள்ளனர். அவர்களில் ஒருவர் தஞ்சைப் புறம்படியில் ராஜவித்யாதரப் பெருந்தெருவில் வாழ்ந்த சோனகன் சாவூர் பரஞ்சோதி என்னும் இசுலாமியர் ஆவார்.[1] சோனகன் என்பது அராபியரை அக்காலத்தில் குறித்த சொல். சாவூர் என்பது ஜாஃபர் என்பதன் வடிவம் ஆகலாம். பரஞ்சோதி என்பது அவர் பெற்ற சிறப்புப் பெயர். இராசேந்திர சோழன் காலத்தில் இச் சோனகன் சாவூர் பரஞ்சோதி கங்கை கொண்ட சோழபுரத்தில் பெருந்தர அரசு ஊழியராகத் திருமந்திர ஓலை நாயகமாக இருந்துள்ளார்.[2]

Scanned with CamScanner

தஞ்சைப் பெருவுடையார் விமானத்தின் வடபக்கம் உள்ள தொப்பியணிந்த வெளிநாட்டவர் ஒருவர் இங்கு நினைவு கொள்ளத்தக்கது. இராசராசன் பெருவுடையார் கோயிலுக்கு அளித்த அணிகலன்களில் சோனகச் சிடுக்கு என்பதும் ஒன்றாகும்.

புகழ்வாய்ந்த சோழரின் ஆனைமங்கலச் செப்பேட்டில் மத்யஸ்தனாவும் கரணத்தானாகவும் நாகப்பட்டினத்துக்கருகில் சன்னமங்கலம் என்ற ஊரில் பணிசெய்த துருக்கன் அகமுதன் என்பவர் குறிக்கப்பெறுகின்றார்.[3]

**பாண்டியர் காலம்**

மதுரை, கோரிப்பாளையம் ஒருகோல் சுல்தான் பள்ளிவாசலுக்குக் கூன்பாண்டியன் 14 ஆயிரம் பொன் கொடுத்துச் சோளிகுடி, சொக்கிகுளம், வீவிகுளம், கண்ணானேம்பல், சிறுத்தூர், திருப்பாலை ஆகியஆறு ஊர்களை விலைக்கு வாங்கித் தானமாக அளித்தார்[4] (வீவிகுளம்-பீபிகுளம்?).

கி.பி. 14ஆம் நூற்றாண்டில் பிள்ளை என்ற பட்டமுடைய தகியுடீன் என்னும் இசுலாமியர் குலசேகர பாண்டியனுக்கு அமைச்சராக இருந்தார்.[5] சில கல்வெட்டுக்களில் இசுலாமியர் முதலியார் பட்டம் பெற்றிருந்தமையும் தெரிகிறது.[6]

சிறிய மெக்கா எனப்படும் காயல்பட்டினத்தில் கற்புடையார் பள்ளி, இரட்டைக் குளத்துப்பள்ளி ஆகிய பள்ளிவாசல்களில் 14ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தைச் சேர்ந்த குலசேகர பாண்டியனின் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.[7]

கி.பி.14ஆம் நூற்றாண்டின் இறுதியில் கேரள மன்னர் உதயமார்த்தாண்டவர்மன் காயலிலிருந்து திருசெந்தூர் செல்லும் வழியில் வீரபாண்டியன் பட்டினம் என்னும் பகுதியில் உள்ள மக்தூம் பள்ளி எனப்படும் ஜிம்மாத்துப் பள்ளியைப் புதியதாகக் கட்டி அப் பள்ளிக்கு உதயமார்த்தாண்டப் பெரும்பள்ளி என்று தன் பெயரிட்டான். அங்கு பணிபுரிந்த அபூ பக்கர் காதியாருக்கு உதயமார்த்தாண்டக் காதியார் என்றும் பெயரிட்டான். மேலும் காயல் ஆன சோணாடு கொண்டான் துறைமுகத்தில் ஏற்றுமதி

Scanned with CamScanner

இறக்குமதியாகும் பொருட்களுக்கு எல்லா மதத்தாரையும் நாலு பணத்துக்குக் கால்பணம் அப் பள்ளிக்கு மகமையாக அளிக்கும்படி ஏற்பாடு செய்தான்.[8]

### விசய நகர, நாயக்கர் காலம்

இரண்டாம் தேவராயர், இராமராயர் போன்ற பேரரசர்கள் முசுலிம். போர் வீரர்கள், முசுலிம் படைத்தலைவர்கள் தம்மை வணங்க வரும்போது தமக்கு முன்பாகப் புனிதத் திருக்குர்ஆனை வைத்திருக்குமாறு கட்டளை பிறப்பித்திருந்தனர்.[9]

கூன்பாண்டியன் கோரிப்பாளையம் பள்ளிவாசலுக்கு அளித்த கொடைஊர்கள் பற்றிப் பிற்காலத்தில் அரசு அலுவலர்கட்கும், பள்ளிவாசல் நிர்வாகிகளுக்கும் சர்ச்சை மூண்டது. வீரப்ப நாயக்கன் பாண்டியர் கால ஆவணங்களைப் பார்த்து விசாரணை செய்து முன்பு இருந்ததுபோல் கொடை அளிக்கப்பட்ட ஆறு ஊர்களும் கோரிப்பாளையம் பள்ளிவாசலுக்குச் சேர்ந்தவை எனத் தீர்ப்பளித்து அங்குக் கல்வெட்டும் பொறித்தான். சிவமயம் என்று தொடங்கும் அக் கல்வெட்டு இன்றும் அப்பள்ளிவாசலில் உள்ளது.[10]

நாயக்க அரசியர் மீனாட்சியும்,[11] மங்கம்மாளும்[13] திருச்சியிலும் மதுரையிலும் பல பள்ளிவாசலுக்கும், இசுலாமியப் பெரியார்களுக்கும் கொடையளித்தனர். மதுரைத் திருமலை நாயக்கர் ஆட்சிக்காலத்தில் தான் காயல்பட்டினம் இசுலாமியர் மணப்பெண்ணிடம் கைக்கூலி (சீதனம்) வாங்கக்கூடாது என்று முடிவு செய்தனர்.[13]

1531இல் செவ்வப்ப நாயக்கன் அதிராம்பட்டினம் கலாரத் காகா அலாவுதீன் சாகிப் தர்காவிற்குப் பெருங்கொடை அளித்தார்.[14] 1550இல் செவ்வப்ப நாயக்கர் தஞ்சை சமுசுபீரு பள்ளிவாசலுக்கு நாஞ்சிக்கோட்டை மண்ணையார்களைக் கொண்டு 7 வேலி நிலம் அளிக்கச் செய்தார்.[15] 1645இல் விசய ராகவ நாயக்கன் நாகூர் அசரத்காதிர் ஒலி தர்காவின் முதல் வாயில் அருகில் உள்ள மினார் எனப்படும் கோபுரத்தைக் கட்டினார்.[15]



### சேதுபதியின் ஆணை

தொண்டியில் ஒரு பௌத்தப் பள்ளி இசுலாமியப் பள்ளிவாசலாக மாற்றப்பட்ட தடயங்கள் இன்றும் உள்ளன. சேதுபதி அரசர் ஒருவர் எந்தக் கோயிலில் விளக்கு எரியவில்லையோ, எந்தக் கோயிலில் மணியோசை கேட்கவில்லையோ அந்தக் கோயிலை இசுலாமியப் பள்ளிவாசலாக மாற்றிக்கொள்ளுமாறு ஆணையிட்டதாகவும் செப்பேடு வெட்டித் தந்ததாகவும் அப் பள்ளிவாசல் நிர்வாகிகள் கூறுகின்றனர்.[17]

இராமேஸ்வரம் ஆயில் காவல் பள்ளிவாசலுக்கும், ஏர்வாடி சுல்தான் சையது இபுறாகீம் வலி தர்காவிற்கும் 1742, 1745 ஆகிய ஆண்டுகளில் முத்துக்குமார விசய ரகுநாதச் சேதுபதி பெருங்கொடைகள் அளித்தார்.[18]

பூலாங்கால், அபிராமம், நாரணமங்கலம், தொண்டி, புல்லுக்குடி, திருச்சுழியல், காரேந்தல், சொக்கிகுளம், நாடாகுளம், குச்சனேரி, கொக்காடி, போந்தப்புளி, காட்டுபாவா சத்திரம் போன்ற பல இடங்களில் இருந்த பள்ளிவாசல்களுக்குச் சேதுபதி அரசர்கள் கொடைகள் அளித்துள்ளனர்.[19]

### தஞ்சை மராட்டியர்

மராட்டியர் காலத்தில் படைக்காகவும், யூனானி மருத்துவத்துக்காகவும், வணிகத்திற்காகவும் தஞ்சையில் இசுலாமியர் பலர் குடியேறினர். அவர்களின் பொருட்டுத் தஞ்சையில் மட்டும் 42 பள்ளிவாசல்களும் தர்காக்களும் உள்ளன. வடக்கு அலங்கம் படே உசேன் தர்கா போன்ற பல நிறுவனங்கள் தஞ்சை மராட்டிய மன்னர் குடும்ப மேற்பார்வையில் இன்றும் உள்ளன. அல்லாப் பண்டிகைக்கு இசுலாமியப் பெருமக்களுக்கு அரசர், அரசியர் கொடுத்த கொடைகள் பற்றி மோடி ஆவணங்களில் பல குறிப்புக்கள் உள்ளன.

பிரதாப சிம்மன் நாகூர் தர்காவின் முன்பு உள்ள 11 நிலைக் கோபுரத்தை 17.2.1753இல் தொடங்கி 20.1.1755இல் கட்டி முடித்தார்.[20] நாகூர் கந்தூரியின் போது மராட்டிய மன்னர் சந்தனம்,

சாதரா ஆகியவைகள் அனுப ... குதிரையுடன் வரவேற்று அரசர் குடும்பத்தின் நலன் கருதித் தர்காவில் இசுலாமியர் பாத்தியா ஓதுவர்.

ஏறக்குறைய இதே காலத்தில் சிவகங்கையில் அரசு நிலையிட்ட முத்து வடுகநாதப் பெரிய உடையாத்தேவர் மொட்டைப் பக்கிரி சாயபு தர்காவிற்கு நிலம் அளித்தார்.[21] 1795இல் தொண்டி கைக்களான் குளம் கலிங்கு மருதுபாண்டியரால் கட்டப்பட்டது. அப்போது அப்பகுதி நிர்வாகியாக இருந்தவர் அபூப் சகா மரைக்காயர் என்பவர்.[22]

### கொங்கு நாட்டில்

திருவரங்கக் கோயிலில் இருப்பதைப் போலவே துலுக்கநாச்சியம்மன் வழிபாடு கொங்கு நாட்டில் பல பகுதிகளில் உள்ளது. இராவுத்தன்மார் சுவாமி வணக்கம் இசுலாமிய வீர வணக்கமே ஆகும். சிலர் திங்களூர் மசிரியாத்தாள் வழிபாடு இசுலாமிய வழிபாட்டின் சின்னமே என்பர்.

காங்கேய மன்றாடியார் குடும்பத்தில் முடப்பெண் ஒருத்தி பிறந்தாள். அவளுக்குச் சகோதரர்கள் தம் நிலத்தில் பங்கு அளிப்பதாகக் கூறினர். பின் என்ன காரணத்தாலோ அளிக்க மறுத்தனர். முடப்பெண் 'துலுக்க சருதார்' அவர்களிடம் முறையிடவே அவர் விசாரித்து முடப்பெண்ணுக்கு உரிய நிலம் பெற்றுத்தந்தார் என மக்கென்சி ஆவணம் ஒன்று கூறுகிறது.[23] இவ்வரலாறு கூறும் வெள்ளையம்மாள் காவியம் என்ற ஓலைச் சுவடி அண்மையில் கிடைத்துள்ளது.

### நவாப் செய்த பைசல்

திருவரங்கத்தில் கந்தாடை அண்ணங்கார் வரதாச்சாரியார் பரம்பரைக்கும் ரெங்காச்சாரியார் பரம்பரைக்கும் பத்து தலைமுறையாகச் சுமார் 120 ஆண்டுகட்கு மேல் சில உரிமைகள் பற்றிய தகராறு இருந்தது. 1797இல் ஆர்க்காடு நவாப் அசரத் சாயபு அவர்கள் கச்சேரி கூட்டித் திர விசாரித்துப் பழைய ஆவணங்களைப் பார்த்துத் தீர்ப்பளித்தார். இப் பைசல் நாமா மக்கென்சி ஆவணத்தில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

### ஐதரும் திப்புவும்

ஐதர் அலி கொங்கு நாட்டில் பாளையக்காரர் மாளிகைக்கு வந்து பருப்புச் சாதம் சாப்பிட்டுக் குதிரை வாங்கிச் சென்றார் என்று ஒரு ஆவணம் கூறுகிறது. கொங்குப் பாளையக்காரர் முடிசூட்டு விழாவில்

'போர்வீர ராம் ஐதர்அலி சர்க்காரின்
புலிபோன்ற தாசீல்களும்
புனிதமுள சிரஸ்துகளும்'

பங்கேற்றனர் என ஒரு நாட்டுப்பாடல் கூறுகிறது.[24] கோவை, குறிச்சி செல்லாண்டியம்மன் கோயிலுக்குத் திப்புசுல்தான் கொடையளித்துள்ளார்.[25] சேலம், மின்னக்கல் கோபால கிருட்டிணர் கோயிலுக்குத் திப்பு சுல்தான் 575 ராஜகோபால வராகன் சோடிகை மானியமாகத் தந்தார். தமக்கு ஆதரவு அளித்த பாளையக்காரர்களைப் 'பெத்த பிள்ளைபோல மரியாதையாய்' நடப்பிவிக்கச் சொல்லித் திப்பு சுல்தான் தம் அலுவலருக்கு ஆணை வழங்கினான்.[26]

### காஞ்சி வரதராசரும் கருநாடக நவாப்பும்

1688ஆம் ஆண்டு காஞ்சி வரதராசப் பெருமாள், தாயார் ஆகியோர் பாதுகாப்பின் பொருட்டு உடையார்பாளையம் காட்டுப் பகுதிக்கு வந்தனர். அவைகளின் அழகில் ஈடுபட்ட உடையார்பாளையம் பாளையக்காரர் அவற்றைக் காஞ்சிக்கு அனுப்ப மறுத்தார். ஆத்தான் திருவேங்கட ராமானுஜ ஜீயர் வேண்டுகோளை ஏற்றுக் கர்நாடக நவாபு சாதத்துல்லாகான் 1710ஆம் ஆண்டு காஞ்சிபுரத்தற்கு வரதராசர் மீண்டும் வர ஏற்பாடு செய்தார்.

### இந்தக் கோயிலுக்கு இசுலாமியர் கொடை

9.6.1758 அன்று தஞ்சை மேலவீதி கொங்கணீசுவரர் கோயிலுக்குப் பதினெட்டுப்பட்டடை வணிகர் மகமை வசூல் செய்து தந்தனர். இந்துக்களுடன் பாசிக்கடை, சந்தைப்பேட்டை,

மூக்குப்புறி இசுலாமிய வணிகா முகம்மது ராவுத்தன், மீரா லெப்பை உட்பட 13பேர் மகமை தந்தனர்.[27] விரிஞ்சிபுரம் சிவன் கோயில் தேர் அவ்வூர் மசூதி முன்னர்ச்செல்லும்போது மசூதியின் சார்பில் சிறப்புப் பூசை நடைபெறுகிறது. நெல்லையப்பர் கோயிலில் இன்றும் வழிபாட்டில் உள்ள உமாமகேசுவரர் அன்வருதீன் என்பவரால் செய்தளிக்கப்பட்டது. பனைமலை தாலபுரீசுவரர் கோயில் மண்டபம், படிகள் ஆகியவைகளை அமைத்தவர் நவாபு சடெல்லேகான் சாயபு ஆவார்.[28] இலுப்பூர் பெருமாள் கோயில் கொடிக்கம்பம் செய்து கொடையாக அளித்தவர் சையத் அலிகான்.[29] சந்தா சாயபு சிங்கிகுளம் கைலாசநாதர் கோயிலுக்குக் கொடையளித்தார்.[30] ஆர்க்காடு நவாப் அசராம்கான் பல சைவ வைணவக் கோயில்கட்குக் கிணறு வெட்டித் தந்தார்.[31] அகத்தீசுவரர் கோயிலுக்கு இலுப்பைத் தோப்புக்கு நிலம் அளித்தவர் ஹசரத்குப்ளேகான்.[32] உத்தரகோச மங்கைக்கு உலோகத் திருவாசி செய்தவர்கள் சில இசுலாமியர். பல்லாவரம் அக்கிரகாரத்திற்குக் கிணறு வெட்ட இடம் வாங்கி அளித்தவர் சேகு அலாவுதீன் மகன் சேகு முசாமியார்.[33]

இவ்வாறு கல்வெட்டுக்கள் பல இந்து முசுலிம் ஒருமைப்பாட்டை விளக்குகின்றன. அதனை அறிந்து அவ்வாறே நடப்பது நம்மவர் கடமையாகும்.

Scanned with CamScanner

## சேலம் மாவட்டக் கல்வெட்டுக்கள்

சேலம் மாவட்டக் கல்வெட்டுக்கள் வரலாற்றுக்கு எந்த அளவுக்குத் துணை நிற்கின்றன என்பதை அம்மாவட்டக் கல்வெட்டுச் சான்றுகளின் வாயிலாக அறியலாம். இம்மாவட்டத்தில் 90க்கும் மேற்பட்ட இடங்களில் கல்வெட்டுக்கள் பொறிக்கப் பெற்றுள்ளன. சில ஊர்களில் அதிக எண்ணிக்கையிலுள்ள கல்வெட்டுக்களும் பல ஊர்களில் ஒன்றிரண்டு கல்வெட்டுக்களும் கிடைத்துள்ளன. பெரும் பான்மையான கல்வெட்டுக்கள் கோவில்களில் பொறிக்கப் பெற்றுள்ளன. சில கல்வெட்டுக்கள் மலைக்குகைகள், பாறைகள் தூண்கள், ஊர் வயல்பகுதி ஆகியவற்றில் பொறிக்கப் பெற்றுள்ளன.

இம்மாவட்டத்தில் இதுவரை 330 கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. அவற்றுள் பெரும்பான்மை தமிழ்க் கல்வெட்டுக்களேயாகும். சில கல்வெட்டுக்கள் வடமொழி, கன்னடம் ஆகிய மொழிகளில் பொறிக்கப்பெற்றுள்ளன. கோவில்களில் சுண்ணம் பூசியும், சுவர் எழுப்பியும், கல் பொரிந்தும், சிதைந்தும் காணப்பெறுதலால் சில கல்வெட்டுக்கள் நன்முறையில் படியெடுக்க இயலாத நிலையில் அமைந்துள்ளன.

கால வரிசையில் கீழ்க்கண்டவாறு கல்வெட்டுக்களின் எண்ணிக்கை உள்ளன.

| | |
|---|---|
| 10, 11, 12ஆம் நூற்றாண்டுகள் | 63 |
| 13ஆம் நூற்றாண்டு | 115 |
| 14--17ஆம் நூற்றாண்டுகள் | 117 |

கி.பி. 13ஆம் நூற்றாண்டில் தமிழக அரசியலில் பல்வேறு மாற்றங்களும் குழப்பங்களும் நிலவிய காலமாகும். அக்காலச்சூழலில் அனைத்து நாட்டு அரசர்களின் மேலாண்மை மிக்கிருந்தது. அந் நூற்றாண்டில் மட்டும் அதிக எண்ணிக்கையில் கல்வெட்டுக்கள் காணப்படுவன குறிப்பிடத்தக்கதாகும்.

1888இல் டாக்டர் ஹல்சு அவர்களின் கண்காணிப்பில் இம்மாவட்டத்தில் முதல் முதலாக கல்வெட்டுக்களைப் படியெடுக்கும்பணி தொடங்கப்பெற்றது. சேலம் சுகவனேசுவரர் கோவில், கோட்டை சௌந்திரராசப்பெருமாள் கோவில், உத்தமசோழபுரம், கரபுரநாதர்கோவில் முதலிய இடங்களில் இருந்த கல்வெட்டுக்கள் படியெடுக்கப்பெற்றன. அவை தென்னிந்தியக் கல்வெட்டுத்தொகுதி நான்கில் 1923ஆம் ஆண்டில் வெளியிடப்பெற்றுள்ளன. 1888 முதல் 1980 வரையிலான காலத்தில் இம்மாவட்டத்தில் 267 கல்வெட்டுக்கள் இந்தியத் தொல்லியல் அளவீட்டுத்துறையின் கல்வெட்டியல் பிரிவினால் படியெடுக்கப்பெற்றுப் பாதுகாத்து வரப்பெறுகின்றன. இவற்றுள் 71 கல்வெட்டுக்கள் இதுவரை பாடங்களோடு வெளிவந்துள்ளன.

இம்மாவட்டத்தில் சோழ அரசர்களின் ஆட்சிக்காலங்களில் 86 கல்வெட்டுக்களும், பாண்டிய அரசர் ஆட்சிக்காலங்களில் 53 கல்வெட்டுக்களும் , விஜயநகர ஆட்சியின்போது 54 கல் வெட்டுக்களும், போசளர் ஆட்சியில் 10 கல்வெட்டுக்களும், கொங்குச் சோழர்களின் 4 கல்வெட்டுக்களும், கொங்குப் பாண்டியர்களின் 2 கல்வெட்டுக்களும் இடம் பெற்றுள்ளன. சோழர்களில் முதல் இராசேந்திரன் (கி.பி. 1012-1044) மற்றும் மூன்றாம் குலோத்துங்கன் (கி.பி. 1178-1218) ஆகிய இரு அரசர்களின் ஆட்சிக்காலத்தில் மிகுதியான கல்வெட்டுக்கள் பொறிக்கப்பெற்றுள்ளன.

சேலம் மாவட்டத்திலுள்ள கல்வெட்டுக்களில் காலத்தால் முற்பட்டதாகக் கருதப்பெறுவது ஓமலூர் வட்டம் அம்மன்கோயில்பட்டி என்னும் ஊரிலுள்ள கல்வெட்டாகும். அதன் பாடம் வருமாறு :

"பரம்பன் கோசவர் கிழார் மகன் வியக்கன் கோபன்
கணதேவன் தொட சுனை".

இக்கல்வெட்டு பிராமி அல்லது பழந்தமிழ் எழுத்தில் பொறிக்கப்பெற்ற கி.பி.4ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். தமிழ் எழுத்துவளர்ச்சியின் நிலையை எடுத்துக்காட்டுவதாக இக்கல்வெட்டு அமைந்துள்ளது. நாமக்கல் அரங்கநாதர் குடைவரைக்கோவிலிலுள்ள கல்வெட்டுக்கள் தனிச்சிறப்பும் பெருமையும் உடையனவாகும். இக்கல்வெட்டுக்கள் கி.பி.7,8 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தனவாகும். அதியமான் மரபினர் சிலர் இக் கல்வெட்டில் குறிக்கப்பெறுகின்றனர். பல்லவ கிரந்த எழுத்தில் - பொறிக்கப்பெற்றுள்ள இக்கல்வெட்டுக்கள் அக்கோவில் கொடையாளர் சிலருடைய பெயரையும் சிறப்புப்பட்டப் பெயர்களையும் குறிப்பிடுகின்றன. கி.பி. 8ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஓமலூர் வட்ட கேத்தநாயக்கன்புதூர் ஏரியின் மதகு அருகில் வட்டெழுத்துக் கல்வெட்டு ஒன்று உள்ளது. அதில் 'கிடங்கில் புலியார்மகன் நல்லி' என்பவன் மதகு ஒன்றை ஏரிக்கு வைத்துக் கொடுத்த செய்தியைக் குறிப்பிடுகிறது.

சோழர் கால ஆட்சியைச் சார்ந்த முதல் கல்வெட்டு முதலாம் பராந்தகனின் பத்தாம் ஆட்சியாண்டில் (917) பொறிக்கப்பெற்ற கூளிப்பட்டி நடுகல் கல்வெட்டாகும். இதையடுத்து அதே ஊரில் இரண்டாம் ஆதித்த கரிகால சோழனின் நான்காம் ஆட்சியாண்டுக் (960) கல்வெட்டொன்றும் காணப்பெறுகிறது. அடுத்துக் கொல்லிமலைப் பகுதியில் உத்தமசோழனின் பத்தாம் ஆட்சியாண்டு முதல் பதினாறாம் ஆட்சியாண்டு வரையிலான நான்கு கல்வெட்டுக்கள் பொறிக்கப்பெற்றுள்ளன. பிற சோழ அரசர்களுடைய மெய்க்கீர்த்திகள் அடங்கிய கல்வெட்டுகள் கதிராநல்லூர், மல்லசமுத்திரம், கொக்கராயன் பேட்டை முதலிய ஊர்களில் கிடைக்கின்றன.

பாண்டியர் ஆட்சியின் கல்வெட்டுகளில் பழைய கல்வெட்டு இடைக்காலப் பாண்டியரில் முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியனின் (1250-84) ஆறாம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பெற்றுள்ள திருச்செங் கோட்டிலுள்ள கல்வெட்டாகும். இவ்வரசன் இருபத்தேழாம் ஆட்சியாண்டுவரை ஆட்சிபுரிந்துள்ள காலத்தில் பொறிக்கப் பெற்ற பதினைந்து கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. அடுத்து இரண்டாம் சடையவர்மன் வீரபாண்டியனின் பதினான்காம் ஆட்சியாண்டு முதல் இருபத்திரண்டாம் ஆட்சியாண்டு வரை பொறிக்கப்பெற்றுள்ள நான்கு கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. இரண்டாம் சடையவர்மன் சுந்தரபாண்டியனின் இரண்டாம் ஆட்சியாண்டு முதல் பதினெட்டாம் ஆட்சியாண்டு வரையிலான பதினாறு கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. பாண்டியர் காலக் கல்வெட்டுக்கள் பதினேழு ஊர்களில் உள்ளன.

### நாட்டுப்பிரிவுகளும் ஊர்களும்

சேலம் மாவட்டம் சோழர் ஆட்சிக்காலத்தில் இரு பிரிவுகளாக வழங்கப்பெற்றன. நாமக்கல், இராசிபுரம், திருச்செங்கோடு, சேலம் ஆகிய வட்டங்களைச் சார்ந்த பகுதி 'வடகரை இராசாசிரியவளநாடு' என்றும், ஆத்தூர் வட்டப்பகுதி 'மகதை மண்டலத்துச் சனநாதவளநாடு' என்றும் குறிப்பிடப் பெற்றுள்ளன. வடகரை இராசாசிரயவளநாடு' பிற்காலத்தில் வீரசோழ மண்டலம் என்று வழங்கப்பெற்றது. "முஞ்சவல்லவரையர் நாடு'' என்ற ஒரு நாட்டுப்பிரிவும் சேலம் மாவட்டத்தில் இருந்துள்ளது. காலப்போக்கில் பல்வேறு நாட்டுப்பிரிவுகள் இந்தப்பகுதியில் வழக்கில் இருந்தன. நாடாழ்வார் நாடு, கொல்லிமலை நாடு, மின்னாமொழி நாடு, மழ நாடு, ஏழூர் நாடு, கீழ்கரைப்பூந்துறை நாடு, பருத்திப்பள்ளி நாடு, தென்பூவாணிய நாடு, தூசூர் நாடு, வஞ்சிநாடு, வெள்ளாறை நாடு, சேல நாடு, இராசிபுர நாடு என்ற பல பிரிவுகள் இருந்தன.

### நடுகற்கள்

சேலம் மாவட்டத்தில் மிகச்சில நடுகற்களே உள்ளன. கூளிப்பட்டியில் இரண்டும், செந்தாரப்பட்டியில் ஆறும், இராசிபுரத்தில் ஒன்றும், விலாரிபாளையத்தில் ஒன்றும், திருச்செங்கோட்டில் இரண்டும் ஆக 12 நடுகற்கள் இம்மாவட்டத்தில் கிடைக்கின்றன. இவற்றுள் கூளிப்பட்டி நடுகற்கள் ஆதித்த கரிகால சோழன் காலத்தைச் சார்ந்ததாகும்.

Scanned with CamScanner

## மகதைவாணர்கள்

ஆறகளூரைத் தலைநகராகக்கொண்டு சோழ அரசரின் கீழ் ஆட்சிபுரிந்த குறுநில மன்னர்கள் மகதைவாணர்கள் ஆவர். இராசராச வாணகோவரையன் என்றும் பொன்பரப்பினான் மகதைப்பெருமாள் என்றும், மகதேசன் உலகம் காத்த பெருமாள் என்றும் அவ்வாணர்கள் கல்வெட்டுக்களில் குறிப்பிடப் பெறுகின்றனர். ஆறகளூர், தியாகனூர், வீரகனூர், தடாவூர், ஆத்தூர் ஆகிய இடங்களில் இவர்களுடைய கல்வெட்டுக்கள் காணப்பெறுகின்றன. இவர்களுடைய காலத்தில் காஞ்சிக்குச் செல்லும் பெருவழி ஒன்று இருந்தது. 'மகதேசன் பெருவழி காஞ்சிபுரம்' என்ற பெருவழிக்கல் ஒன்று ஆறகளூரில் உள்ளது. தென்னார்க்காடு மாவட்டத்தன் மேற்குப் பகுதியும், சேலம் மாவட்டத்தின் கிழக்குப் பகுதியும் இவர்களின் ஆட்சியின் கீழ் இருந்த பகுதியாகும். அப்பகுதி மகதை மண்டலம் எனப்பெற்றது.

## சோழகங்கதேவர்கள்

சேலம், இராசிபுரம் வட்டப்பகுதியில் சோழர் ஆட்சிக் காலத்தில் குறுநிலத் தலைவர்களாக இருந்தவர்கள் சோழகங்க தேவர்கள் ஆவர். இராசேந்திர சோழனின் ஏழாம் ஆட்சியாண்டில் இராசிபுர வட்டம் காக்காவேரியிலுள்ள சிவன்கோவிலில் பொறிக்கப்பெற்றுள்ள கல்வெட்டொன்றில் 'சேலநாட்டு அஞ்சாத பெருமாளான சோழகங்கதேவர் பொன் பரப்பினான்' என்பவன் குறிப்பிடப்பெற்றுள்ளான். இச் சோழகங்கதேவர் என்னும் பட்டப்பெயர் இரண்டாம் இராசேந்திரன் தன் உடன்பிறந்தாரில் மூன்றாமவரான மதுராந்தகனுக்குச் சூட்டப் பெற்றதாகும். இச்செய்தி அவனுடைய 'திருமாது புவியெனும்' என்று தொடங்கும் மெய்க்கீர்த்தியில் குறிப்பிடப் பெற்றுள்ளது.

> **'வான்வலித் தடக்கை மதுராந் தகனைச்**
> **சோழ கங்க னென்றும்'**

என்று மெய்க்கீர்த்தி குறிப்பிடுகிறது. சேலம் நாட்டு அஞ்சாத பெருமாள் என்று குறிப்பிடப்பெற்றுள்ளமையால் மதுராந்தக சோழன் என்ற பட்டப்பெயரில் சேலம் நாட்டை ஆண்ட ஒரு குறுநிலத் தலைவனாக இருந்திருக்க வேண்டும் என்பதை அறியலாம்.



சேலம் நாட்டு சிரகப்பாடியில் மாணிக்கன் என்பவன் தான் கட்டிய மன்றீசுவரமுடைநாயனாருக்குப் பூசைக்கும் திருப்பணிக்கும் முதலாக அவனால் கட்டப்பெற்ற உட்பிறப்பழகியான் என்றும் ஏரியின் கீழ் நீர்பாய்ந்த நிலத்தைப் பொன்பரப்பின சோழகங்கதேவரிடம் பொன் கொடுத்து விலைக்கு வாங்கிய செய்தி ஒரு கல்வெட்டில் குறிப்பிடப்பெற்றுள்ளது. இராசிபுரம் வட்டம் கூனவேலம்பட்டி அழியா இலங்கையம்மன் கோவிலில் மூன்றாம் குலோத்துங்க சோழனின் பதினைந்தாம் ஆட்சியாண்டைக் சார்ந்த கல்வெட்டில் 'அழகிய சீயனான சோழகங்க தேவன்' என்று குறிப்பிடப் பெற்றுள்ளார்.

வாழக்குட்டப்பட்டி என்னும் ஊரிலுள்ள கல்வெட்டில் 'எல்லாம் தலையான சோழகங்கதேவ முதலி' என்று குறிப்பிடப்பெற்றுள்ளார். இவர் கீழ்ப் பணிபுரிந்த திருநீற்றுப் பல்லவராயன் என்பவர் இடபதேவரை எழுந்தருளுவித்துக் கோவிலையும் கட்டிப் பூசைச் செலவினங்களுக்கு நிலத்தையும் கொடையாக அளித்த செய்தி குறிப்பிடப் பெற்றுள்ளது. இவ்வூரிலுள்ள மற்றொரு கல்வெட்டு சோழகங்கதேவர் என்னும் தன் தலைவனுக்கு நன்மை உண்டாகும்பொருட்டுச் சோழக்கோன் என்பவர் மூங்கில்பள்ளம் என்னும் ஏரியின் கீழ் இருந்த நிலத்தைப் பொன்பரப்பீசுவரமுடைய நாயனார்க்குத் தேவதான இறையிலியாக அளித்த செய்தி குறிப்பிடப் பெற்றுள்ளது. எனவே சோழகங்கதேவர் என்பவர் ஒரு குறுநிலத்தலைவர் என்பதும் அவர் பொன்பரப்பிய கோவில் வாழக்குட்டப்பட்டியிலுள்ள பொன்பரப்பீசுவரமுடைய நாயனார் கோவில் என்பதும் இச்சான்றுகளால் அறியலாம். இச் சோழகங்கதேவர் என்னும் பட்டப்பெயரை மரபுவழியில் பலர் பெற்றிருக்கலாம். அழகிய சீயனான சோழகங்கதேவன, எல்லாம் தலையான சோழகங்கதேவன், அஞ்சாத பெருமாளான சோழகங்கதேவன் எனப் பலர் கல்வெட்டுக்களில் குறிப்பிடப் பெற்றுள்ளனர். இவர்களுடைய தலைநகரம் மல்லூரை அடுத்துள்ள பொன்பரப்பி என்னும் ஊராகும். மூன்றாம் குலோத்துங்கசோழன் காலம் தொடங்கிச் சோழப் பேரரசு முடிவுறும் வரையில் இவர்கள் குறுநிலத்தலைவர்களாக இருந்துள்ளனர்.

Scanned with CamScanner

### சேந்தமங்கலம் இராமச்சந்திர நாயக்கர்

சோழர் காலத்துக்குப்பின் விஜயநகர ஆட்சிக்காலத்தில் மதுரை நாயக்கரால் தோற்றுவிக்கப்பெற்ற பாளையப்பட்டு வழிமுறையில் உருவானதே சேந்தமங்கலம் என்னும் பாளையமாகும். நாமக்கல், இராசிபுரம் வட்டப்பகுதிகளுக்குப் பாளையக்காரர்களாக இருந்தவர் இராமச்சந்திர நாயக்கர் வழியினர் ஆவார். இவருடைய தலைநகரம் நாமக்கல் வட்ட சேந்தமங்கலம் ஆகும். இராமச்சந்திர நாயக்கர் என்ற பெயரில் கல்வெட்டுக்களில் நால்வர் காணப்பெறுகின்றனர். இவர்களைப் பற்றிய பத்துக் கல்வெட்டுக்கள் உள்ளன. 'கோனூர் தலமலை இம்முடி இராமச்சந்திர நாயக்கர்' என்றும், 'நாயக்கர் காரியத்துக்குக் கர்த்தரான இம்முடி இராமச்சந்திர நாயக்கர்' என்றும் கல்வெட்டுக்கள் இவரைப்பற்றிக் குறிப்பிடுகின்றன.

### சேலம் சின்னமநாயக்கன்

வரலாற்றில் இதுவரை அறியப்பெறாத புதிய பாளையக்காரன் ஆவான். சேலம் சின்னபூபாலன் என்றும் சின்னமகிபன் என்றும் இவன் கல்வெட்டுக்களில் குறிப்பிடப் பெற்றுள்ளான். செக்கடிப்பட்டியில் உள்ள கல்வெட்டொன்று இச்சின்னமநாயக்கனைப்பற்றியும், இவனுடைய மக்கள் அறுவரைப் பற்றியும், இவனுடைய ஆட்சிச்சிறப்பு மற்றும் பரப்பு பற்றியும் குறிப்பிடுகிறது.

இவனுடைய மகன் இலட்சுமிநாயக்கன் என்பவன் ஆத்தூரின் கல்கோட்டை கட்டியவர் என்பதும், வசிஷ்ட நதியில் பல இடங்களில் அணைகளைக்கட்டி நீரைத்தேக்கி 'சாமை விளையும் காடெல்லாம் சம்பா விளைவிக்கச் செய்தான்' என்பதும் அக்கல்வெட்டால் அறியலாம். பேளூரில் உள்ள இவனுடைய மற்றொரு கல்வெட்டு, ''திருச்சிராப்பள்ளி முற்றுகைக்கு உதவ வேணுமென்று திருமலை நாயக்கர் ஓலை அனுப்ப, அதன்படி இவன் மகன் வெங்கடப்பநாயக்கன் படையுடன் சென்று பகைப்படையை அழித்தான்'' என்றும் குறிப்பிடுகிறது. அதில், ''மதுரை, தஞ்சாவூர், செஞ்சி, நாலாம் படைவீடு சேலம்'' என்று இவனுடைய பாளையம் குறிப்பிடப் பெற்றுள்ளது. இவனைப்பற்றிஐந்து கல்வெட்டுக்கள்கிடைத்துள்ளன.

### கட்டிமுதலிகள்

தாரமங்கலப் பகுதியைக் கட்டிமுதலிகள் என்னும் மரபினர் ஆண்டனர். அன்றைய அரசர்களாகிய போசளர்களுக்கும், பாண்டியர்களுக்கும் பணிந்து சிற்றரசாக ஆட்சிபுரிந்தனர். போசளரும் பாண்டியரும் வீழ்ச்சியுற்ற பின்னர் விசயநகரப் பேரரசர்க்குப் பணிந்து ஆட்சி புரிந்தனர்.

காரமங்கலம் கி.பி. 13ஆம் நூற்றாண்டில் கொங்கான வீரசோழ மண்டலத்து வடபூவாணிய நாட்டைச் சார்ந்திருந்தது. இச்செய்தியை அவ்வூர்க் கயிலாயநாதர் கோவிலில் காணப்பெறும் கல்வெட்டில் 'கொங்கான வீரசோழ மண்டலத்து வடபூவாணி நாட்டுத் தாரமங்கலம்' எனும் தொடர் தெரிவிக்கிறது.

இப்பூவாணி நாடு கொங்கு மண்டலத்தின் இருபத்து நான்கு பிரிவுகளுள் ஒன்று என்பதைக் 'கொங்கு மண்டல சதகம்' குறிப்பிடுகிறது. இக் கல்வெட்டுகள் அச்சுதராயர், சதாசிவராயர் ஆட்சிக்காலத்தில் வெட்டப்பெற்றுள்ளன. இவற்றில் 'வணங்காமுடிக் கட்டிமுதலி' என்பவர் குறிக்கப் பெறுகிறார். விசயநகர ஆட்சியினரின் கல்வெட்டுகளில் வணங்காமுடி பற்றிய செய்தி அறியப்பெறுவதால் இவ்வணங்காமுடி முதலி விசயநகர ஆட்சியின்கீழ் ஒரு சிற்றரசனாக ஆட்சி புரிந்துள்ளமை தெளிவாகிறது. கி.பி. 1541ஆம் ஆண்டின் அச்சுதராயர் கல்வெட்டும், கி.பி. 1568ஆம் ஆண்டின் வேங்கடன் கல்வெட்டும் வணங்காமுடி முதலி இருபத்தாறு ஆண்டுகள் தாரமங்கலத்தை ஆட்சிபுரிந்ததாகத் தெரிவிக்கின்றன. கல்வெட்டுக்களில் 'வண்ணத்தடுக்கும் புலிக்கொடியுமுள்ள வணங்காமுடி முதலியார் நல்லுடையப்பர் கோட்டை முதலியார் இம்முடி கட்டிமுதலியார்' என்று குறிப்பிடப் பெற்றுள்ளனர்.

கயிலாயநாதர் கோவில் கல்வெட்டுக்கள் 'மஸ்தகுடோரி மகுடசூடாமணி மன்னர் வணங்கிலும் வணங்காத முடியான் முதலியார்' எனச் சிறப்பித்துக் கூறுகின்றன. இவ்வூரிலுள்ள இளமீசுவரர் கோவில் கல்வெட்டுக்கள். 'மஸ்தகுடோரி மகுடசூடாமணி வண்ணத்தடுக்கும் வாடாமாலையும் புலிக் கொடியுமுள்ள வணங்காமுடி முதலியார்' எனக் குறிப்பிடுகின்றன.

Scanned with CamScanner

இவை அவர்களுடைய வலிமையையும் பெருமையையும் விளக்குகின்றன. வண்ணத்தடுக்கு, வாடாதமாலை ஆகியவை அவர்களுடைய அரச சின்னமாகவும், புலி அவர்களுடைய கொடியின் சின்னமாகவும் இருந்துள்ளன.

வணங்காமுடி கட்டிமுதலி தாரமங்கலத்துக் காவேரிப் பட்டணத்தைக் 'கோட்டை சமுத்திரம்' எனப்பெயர் மாற்றம் செய்து பிராமணரின் குடியிருப்பாக வழங்கியதை இளமீசுவரர் கோவிலுள்ள கல்வெட்டு குறிப்பிடுகிறது. தாரமங்கலத்து இராமகூடலுக்கு 'வணங்காமுடி சமுத்திரம்' எனப் பெயரிட்டு அதையும் பிராமணர்களின் குடியிருப்பாகக் கொடுத்ததைச் சதாசிவராயர் கல்வெட்டு குறிப்பிடுகிறது. தாரமங்கலத்துத் திருத்தோன் பட்டினத்தை 'இளமசமுத்திரம்' எனப் பெயர் மாற்றம் செய்து கயிலாயநாதர் கோவிலுக்கும், இளமீசுவரர் கோவிலுக்கும் தேவதான இறையிலியாக வழங்கப்பெற்ற செய்தியும் குறிப்பிடப் பெற்றுள்ளது. இக் கட்டிமுதலி சிதம்பரத்தில் தன்னுடைய பெயரில் 'வணங்காமுடி' என்னும் சைவ மடத்தை நிறுவியுள்ளார். அதனைப் பேணும் பொருட்டு ஏழுகரை நாட்டுப் பகுதியில் பல்வேறு வரிகளின் வாயிலாக வந்த வருவாய் அனைத்தையும் கொடையாக வழங்கியுள்ளார். இச் செய்தியை இளமீசுவரர் கோவில் கல்வெட்டு குறிப்பிடுகிறது. இக் கட்டிமுதலி காலத்தில் கயிலாயநாதர் கோவில் திருப்பணி செய்து முடிக்கப்பெற்றுள்ளது.

கயிலாயநாதர் கோவில், இக் கட்டிமுதலிகளின் குலதெய்வக் கோயிலாகக் கருதப்பெறுகிறது. தாரமங்கலத்தை அடுத்த இலவம்பட்டி என்னும் ஊரிலுள்ள கல்வெட்டு 'இம்மடி கட்டி முதலியாரோம் தேவஸ்தான தர்மம் ... நம்முடைய குல ஸ்வாமியான தாரமங்கையின் சிவன் க்ஷேத்திரத்தில் வாழும் கைலாசநாத சுவாமியார்க்கு' என்னும் கல்வெட்டுத் தொடரால் இதனையறியலாம். இக் கட்டிமுதலிகள் விசயநகர ஆட்சியின் போது பாளையக்காரர்களாக இருந்துள்ளமை சாலிவாகன சகாப்தம் 1400 மேல் (கி.பி. 1478) அமரகுந்திக்குச் சேர்ந்த பாளையப்பட்டுக் குடையோன் கெட்டி என்ற பேர் பெற்று வெள்ளாள சியாத்தியானபடியாலே கெட்டி முதலியார் என்று பெயர் வந்து பாளையக்காரனாயி சீர்மை அனுபவிச்சுக் கொண்டு வரும் காலத்தில்' என்னும் அவர்களுடைய வமிசாவளிப் பகுதியால் அறியலாம். 'கெட்டி' என்பது அவருடைய பட்டம் என்பதையும் 'வெள்ளாளர்' என்பது அவரது இனத்தையும் குறிப்பிடுகின்றன.

### மோரூர்க் காங்கேயர்கள்

அரசியல் பொறுப்பிலிருந்து ஒதுங்கி சமுதாய நலனுக்காக வாழ்ந்த மோரூர்க் காங்கேயர்கள் பற்றித் திருச்செங்கோட்டுக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இவர்கள் கொங்குவேளாளர் பெருமக்களின் தலைவர்களாகவும் புலவர்களைப் புரந்த புரவலர்களாகவும் இருந்தனர். திருச்செங்கோட்டில் இவர்கள் செய்துள்ள திருப்பணிகளைப்பற்றி அங்குள்ள கல்வெட்டுக்களும் திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலையும் சிறப்பாக குறிப்பிடுகின்றன.

### சில முக்கிய ஊர்க் கல்வெட்டுக்கள்

ஆத்தூர் வட்ட ஆறகளூர் என்ற ஊரில் 48 கல்வெட்டுகள் உள்ளன. இங்கு திருக்காமீசுவரமுடைய நாயனார் கோவிலில் 37 கல்வெட்டுகளும், கரியவரதராசப்பெருமாள் கோவிலில் 9 கல்வெட்டுகளும், சோழீசு வரமுடைய நாயனார் கோவிலில் இரு கல்வெட்டுகளும் உள்ளன. சோழர் காலம் முதல் விஜயநகர காலம் முடிய உள்ள இவற்றுள் பெரும்பான்மையான கல்வெட்டுகள் கோவிலுக்குக் கொடையாக வழங்கிய பொன், நிலம், கிராமங்கள் ஆகியவை பற்றிக் குறிப்பிடுகின்றன. பிராமணர்களுக்கும் நிலம் இறையிலியாக வழங்கப்பெற்றுள்ளது. கொடைகள் அரசு மரபைச் சார்ந்தோராலும், தனிப் பட்டவர்களாலும் வழங்கப் பெற்றுள்ளன. இவற்றுள் காலத்தால் முந்தையது மூன்றாம் குலோத்துங்க சோழனின் கல்வெட்டுக் களாகும்.

### உடன்படிக்கை

இவற்றுள் இரு கல்வெட்டுகள் அவ்வரசர் காலத்தில் குறுநிலத் தலைவர்களுக்கிடையே நிகழ்ந்த உடன்படிக்கையைத்

Scanned with CamScanner

தெளிவுபடுத்துகின்றன. இதேபோன்று இம்மன்னர் காலத்தில் குறுநில மன்னர்களிடையே நடந்த உடன்படிக்கைகள் பற்றிய கல்வெட்டுகள் பல திருவண்ணாமலையில் இடம் பெற்றுள்ளன. இவ் இருவிடங்களிலுள்ள கல்வெட்டுகள் ஒன்றோடொன்று தொடர்புடையனவாக உள்ளன. குலோத்துங்க சோழனின் 35-ஆம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பெற்றுள்ள கல்வெட்டில் செங்கேணி அம்மையப்பன் அழகிய சோழனான எதிரிலி சோழச் சம்புவராயர் என்பவர் பொன்பரப்பின வாணகோவரையர்க்கும் குலோத்துங்க சோழ வாணகோவரையர்க்கும் அவர் மைத்துனர் காடவராயர்க்கும் உடன்பட்டு எழுதிக் கொடுத்த அடர் முறைமை உடன்படிக்கையைக் குறிப்பிடுகிறது. இம் மன்னனின் பன்னிரண்டாம் ஆட்சியாண்டில் குலோத்துங்க சோழ வாணகோவரையர்க்கும், திருக்கோவிலூரிலுள்ள மலைய மானுக்கும் தங்கள் நாட்டெல்லைகள் பற்றிக் கருத்து வேறுபாடும் பூசலும் நேர்ந்தபோது இருவரும் உடன்பட்டு ஆள்வினையாற்றின் தென்பகுதி வாணகோவரையனுக்கும், வட பகுதி மலையமானுக்கும் உரியவை என்றும், இருவரும் தங்கள் அரசனான குலோத்துங்க சோழரின் அரசுச் செயல்களுக்கு ஒத்துநின்று வேண்டிய உதவி புரியக் கடவர் என்றும் உடன்படிக்கையை மேற்கொண்டனர். திருவண்ணாமலையிலுள்ள கல்வெட்டில் குறுநிலத்தலைவர்கள் பதின்மர் சேர்ந்து அரசுக்குக் கேடு சூழக் காரணமாக இருந்த வாணகோவரையனுடன் பகைத்துச் செய்து கொண்ட உடன்படிக்கை இடம் பெற்றுள்ளது.

மற்றொரு கல்வெட்டில் மலையன் ஆடையூர் நாடாழ்வானுக்கும் விக்கிரம சோழச் சம்புவராயர்க்கும் விடுகாதழகிய பெருமாளான இராசராச அதிகைமான் உடன்பட்டு எழுதிக்கொடுத்த உடன்படிக்கை இடம்பெற்றுள்ளது. இன்னும் சம்புவராயனும் மலையமானும் செய்துகொண்ட உடன் படிக்கையும் இராசராச நீல கங்கரையன் என்பான் சம்புவராயன், காடவராயன், மூவேந்தரையன் என்ற மூவரோடு செய்து கொண்ட உடன்படிக்கைகளும் இடம்பெற்றுள்ளன. எனவே இவ்விரு ஊர்களிலுள்ள கல்வெட்டுகள் ஒரே அரசர் காலத்தில் பொறிக்கப் பெற்றுள்ளன. இருவிடங்களிலும் அதே குறுநிலத் தலைவர்கள் இடம் பெற்றுள்ளனர் என்பதும் கருதத்தக்கது. இதனால் சோழ அரசின் பிற்பகுதியில் குறுநிலத் தலைவர் பலர் தத்தம் நாடுகளில் தனித்தன்மையோடு ஆட்சிபுரிந்து வந்தனர் என்றும் அவர்கள் அனைவரும் சோழ அரசனின் ஆணைக்கு ஒருவாறு கட்டுப்பட்டு உதவினர் என்பதும் தெரிகிறது.

### கொடைகள்

திருக்காமீசுவரமுடைய நாயனார் கோவிலில் அவ்வூரில் இருந்த சிறுத்தொண்டன் என்பவன் அப்பர், சுந்தரர், சம்பந்தர் ஆகிய எம்பெருமானடிகளை எழுந்தருளச் செய்தார். அத் திருமேனிகளுக்குத் திருமஞ்சனம் பூசவும் திருவிளக்கு எரிக்கவும் திருப்பள்ளித்தாமம் சூட்டவும் மற்றும் கோவில் செலவினங்களுக்கும் ஐயாயிரம் காசுகள் கொடையாக கோவில் கருவூலத்தில் சேர்க்கப்பெற்றுள்ளது. குலோத்துங்க சோழனின் பதின்மூன்றாம் ஆட்சியாண்டில் திருக்காமீசுவரமுடைய நாயனார் கோவிலுக்கு மலையனுடையான் செம்பை ஆழ்வான் என்பவன் தன் காணியான இலத்திப்பாடி நிலத்தை 135 பொன்னுக்கு விற்ற செய்தி ஒரு கல்வெட்டில் குறிப்பிடப் பெற்றுள்ளது. இரண்டாண்டுகள் கழித்து வெட்டப்பெற்றுள்ள வேறொரு கல்வெட்டு அந்நிலத்தின் மீதான வரிகளை அரசன் நீக்கி ஆணை பிறப்பித்த செய்தியைக் குறிப்பிடுகிறது. அக் கோவில் அமுதுபடிக்காகத் தொண்டைமான் தங்கை நாச்சியார் நாள் ஒன்றுக்கு இருநாழி அரிசி கொடுத்ததையும் நந்தாவிளக்கெரிக்கக் காவிரிப்பாக்கத்துக் கவுசிகன் ஒற்றிகொண்டான் என்பவனிடமிருந்து கோவில் முப்பது வட்டத்துச் சிவபிராமணர் ஈராயிரம் காசுகளைப் பெற்ற செய்தியையும் ஏழு திருநந்தா விளக்குகளை எரிக்க நாற்பத்தொன்பது பசுக்களைக் கொடையாகப் பெற்ற செய்தியையும் குறிப்பிடுகிறது. அந்நாளில் ஒரு நந்தாவிளக்கு நாள்தோறும் எரிய ஏழு பசுக்கள் வீதம் கொடையாக அளிக்கப் பெற்றுள்ளமை இதனால் அறியலாம்.

கோவில் பூசைநாள் உரிமையைப் பெற்றிருந்த ஒரு பெண் கோவில் அணிகலன்களைத் திருடிய காரணத்தால் அவளைச் சிறை வைத்து அவளுடைய பூசை உரிமையையும் அவளுடைய மருமகள் பூசை உரிமையையும் பறித்தனர். அவ்வுரிமையைத்



Scanned with CamScanner

திருஞானசம்பந்த பண்டிதர் என்பவர் 250 பணம் கொடுத்து விலைக்கு வாங்கிக் கோவில் முப்பது வட்டத்துக்காணி உடைய சிவபிராமணர்க்கு விற்றுள்ளார். கோவில் பூசை செய்த பொன் பரப்பினான் திருஞானசம்பந்த பிரமராயர் உள்ளிட்ட மூவர் தங்கள் கோவில் பூசை உரிமையை 'காணிவிலைப் பிரமாணம்' பண்ணி விலைக்கு விற்றுள்ளனர். அந்நாளில் ஒருவர் தன் பூசை உரிமையைப் பிறர்க்கு விற்கும் உரிமை பெற்றிருந்தமையை இது காட்டுகிறது.

**கொல்லிமலை**

கொல்லிமலையிலுள்ள அறப்பள்ளி ஈசுவரர் கோவிலில் கோப்பரகேசரிவர்மரான உத்தம சோழனின் பத்தாம் ஆட்சியாண்டில் (கி.பி. 980) பொறிக்கப்பெற்றுள்ள பல கல்வெட்டுகளில் அக்கோவிலில் கார்த்திகை விழா நிகழ்த்தச் சாலைப்புறநிலம் விட்ட செய்தி காணப்பெறுகிறது. மேலும் பன்னிரண்டு ஊராரிடம் நூறு கழஞ்சு பொன் கொடுத்து அதன் வட்டி வருவாயைக் கொண்டு அக்கோவில் பூசை நடத்தப் பெற்றுள்ளமையைப் பல கல்வெட்டுகள் விளக்குகின்றன. ஒரு கழஞ்சுப் பொன்னுக்கு ஆறு திங்களுக்கு ஐங்குறுணி நெல் வட்டியாகவும், மற்றொரு கல்வெட்டில் ஒரு கழஞ்சுப் பொன்னுக்கு ஆறு திங்களுக்கு நான்கு குறுணி நெல் வட்டியாகவும் குறிப்பிடப்பெற்றுள்ளது. ஒரே காலத்தில் வேறுபட்ட வகையில் வட்டி வாங்கியுள்ளமையை அறியலாம்.

அறப்பள்ளி ஈசுவரர்க்குக் கொல்லிமலை நாட்டினரும் கோவில் தானத்தாரும் பலமண்டலத்து மாகேசுவரர்களும் சேர்ந்து வணலூராரிடமிருந்து நான்குகல நெல் விதைப்பு அளவிலான நிலவருவாயை அறப்பள்ளி இறைவர்க்கு உரிமையாக்கியுள்ள செய்தி ஒரு கல்வெட்டில் குறிப்பிடப் பெற்றுள்ளது. நெல் விதை அளவைக்கொண்டு நிலத்தின் அளவு கணிக்கப்பெற்றுள்ளது. கொல்லிமலை நாட்டு மலையாளர்கள் தங்கள் நிலத்தின் கடமையை ஒன்பதாவது ஆண்டு முதல் செலுத்த உறுதியளித்துக் கோவிலில் கல்வெட்டிக் கொடுத்துள்ளனர். எனவே முன்னர் எட்டாண்டுகள் வரை அம்மலையாளர்கள் தங்கள் நிலத்திற்கு வரிவிலக்குப் பெற்றிருந்தமையை அறியலாம்.

**தம்மம்பட்டி**

தம்மம்பட்டி என்னும் ஊரில் நரசிங்கப்பெருமாள் கோவிலில் நான்கு கல்வெட்டுக்கள் பொறிக்கப் பெற்றுள்ளன. அவை கி.பி. 15ஆம் நூற்றாண்டின் விசயநகர ஆட்சிக்காலத்தைச் சேர்ந்தவையாகும். அக்கோவிலுக்குத் தேவர்மறி, புளியங்குறிச்சி, பூடிதிபறுகு, ஆருளம்பள்ளி, மாறாடி சீர்மைக்குட்பட்ட மங்கைவார்ப்பட்டி, மண்மலைச் சீர்மைக்குட்பட்ட செங்கிணறு ஆகிய கிராமங்களைத் திருவிடையாட்டமாக அளிக்கப் பெற்றதாக அம் மூன்று கல்வெட்டுகளின் செய்தி குறிப்பிடுகிறது. ஒரு கல்வெட்டு திம்மயநாயக்கர் என்பவர் கோவிலுக்குக் கொடையாக நிதியைச் சேர்க்க வழி செய்த முறையை விளக்குகிறது. நான்கு திசைகளுக்கும் சென்று வாணிகம் புரிந்த செட்டி வியாபாரிகள் அவ்வூருக்குள் கொண்டு வந்த பொருள்களுக்கும் வெளியில் கொண்டு சென்ற பொருள்களுக்கும் தலைச்சுமையாகக் கொண்டு வந்த பொருள்களுக்கும் விதிக்கப்பெற்ற வரியின் வருவாயில் பாதியை அக்கோவில் கருவூலத்தில் கொடையாகச் சேர்க்கப் பெற்ற செய்தியைக் கூறுகிறது.

**திருச்செங்கோடு**

திருச்செங்கோட்டில் 38 கல்வெட்டுக்கள் பொறிக்கப் பெற்றுள்ளன. இவற்றில் திருச்செங்கோட்டுக் கோவில் திருஏகாதசி கணப்பெருமக்கள், திருவாதிரை கணப்பெருமக்கள், திருவோணக் கணப்பெருமக்கள், துவாதசி கணப்பெருமக்கள் ஆகியோர் குறிப்பிடப்பெற்றுள்ளனர். இக் கணப்பெரு மக்களிடம் 'காசெட்டாங்கல்' என்னும் அளவினால் நிறுக்கப் பெற்ற பொன்னைக் கொடுத்து அதனின்றும் வந்த வட்டியால் கோவில் பிராமணர்களுக்கு உணவு படைத்துள்ள செய்தி குறிப்பிடப்பெற்றுள்ளது. இவ் வறச்செயலுக்குப் பலர் கொடை அளித்துள்ளனர். இவ்வாறு பல்வேறு கொடையாளர்கள் அளித்த பொன்னைப் பெற்ற கணப்பெருமக்கள் அதை வட்டிக்கு விட்டு அதனின்றும் வந்த வருவாயைக் கொண்டு இருகலம் வீதம் பிராமணர்களுக்கு உணவு ஊட்டுவதாக உறுதியளித்த செய்தி ஒரு கல்வெட்டில் உள்ளது. இரண்டாம்சடையவர்மன்சுந்தர பாண்டியனின்

காலத்தைச் சார்ந்த மூன்று கல்வெட்டுகளுள் ஒன்று உலகம் காத்த கண்ணையன் என்பவருக்கு அவருடைய சிறப்பைப் போற்றி நடுகல் எடுத்த செய்தி குறிப்பிடுகிறது. விஜய நகர அரசர் கிருஷ்ணதேவராயர் ஆட்சியின் போது (கி.பி.1522) பொறிக்கப் பெற்றுள்ள கல்வெட்டில் அலுவலர்கள் பலரை நியமித்துள்ள செய்தியுடன் உழவுக்குடிக்கு ஏர் ஒன்றுக்கு ஐந்து பணம் வீதமும் கைக்கோளருக்கு முதலிரண்டாண்டுகளுக்கு வரிநீக்கம் செய்யப் பெற்றுப் பின்னர்த் தறிக்கு இரண்டு பணமும் மனை ஒன்றுக்கு ஒரு பணமும் ஆக மூன்று பணம் வரி விதிக்கப்பெற்ற செய்தி விளக்கப்பெற்றுள்ளது.

திருச்செங்கோட்டுக் கைலாயநாதர் கோவில் தெற்குச் சுவரின் அடித்தளத்தில் பொறிக்கப்பெற்றுள்ள கல்வெட்டொன்று விஜயநகர அரசர் சதாசிவராயர் (1561) காலத்தைச் சார்ந்தது. அக் கல்வெட்டு ஆசிரிய விருத்தப்பாவால் அமைந்தது. இப்பாடல் கி.பி.1685இல் சதாசிவ பண்டிதரால் எழுதப்பெற்ற 'திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை' என்னும் நூலில் சதாசிவராயரின் சிறப்பைப் போற்றும் பாடலாக இடம் பெற்றுள்ளது.

**சீரார்ச காப்தத்தி லாயிரமு நானூறு செல்கவெழு**
**பத்துமூன்றின்**
**திரமான துன்மதிச் சித்திரைத் திங்களைச் சேர்ந்துவிரு**
**பத்தைந்தினில்**
**பூராய பூர்வபட் சந்திக ளுந்தசமி பூசமாம் மேனாவிலே**
**புவியாள் சதாசிவ மகாராயர்ஜெகதேவு பூபால னுக்குதவவே**

**வீராக மப்பிரபுட நரசிங்க ராமாஞ்சி மிகுகொங்கு நாடாளுனாவ்**
**விப்ரகுல சர்வயன் தேவசா யாதிபன் வீறா வனந்தபூபன்**
**ஏரானசெங்கோட்டில்மேவு கைலாயர்முன் எழிலான கற்கம்பமே**
**இன்பொடு நிறுத்தினன் கீர்த்திப் பிரதாபமது விமசேத ளவுநிற்கவே**

என்பது அப்பாடலாகும்.

1664 இல் மதுரையில் விசுவநாத சொக்கலிங்க நாயக்கர் ஆட்சி புரிந்தபோது அவர் தலைமையின் கீழிருந்த சேஷாத்திரி பிள்ளை என்பவர் திருச்செங்கோட்டுத் திருக்கைலாய நாதருக்குக் கோபுரம் ஒன்றைக் கட்டுவித்துக் காசிவிசுவநாதர் ஆலயக்



கற்றளியை எடுப்பித்த செய்தி பாடல் கல்வெட்டாக இடம் பெற்றுள்ளது. அப்பாடல் கல்வெட்டுக்கு முன் 'ஸ்வஸ்தி ஸ்ரீ சகாப்தம் 1585 இதன்மேற் செல்லாநின்ற சோபகிருது வருஷம் ஆவணி மாதம் ஸ்ரீமது விசுவநாத சொக்கலிங்க நாயக்கரவர்கள் ராஜ்ஜிய பரிபாலனம் பண்ணுகையில்' என்ற செய்திக்குப்பின் இவ் வெண்பா வடிவில் கல்வெட்டு இடம் பெற்றுள்ளது.

**நணிய கயிலாய நாதருக்குப் பூசை**
**அணிகிளரும் கோபுரமுண் டாக்கிப் – பணிமலைமேற்**
**காசிவிசுவ நாதருக்குக் கற்கோ யிலும்பணித்தான்**
**தேசருணற் சேஷாத் திரி**

இப்பாடல் பகுதி மட்டும் திருச்செங்கோட்டுத் திருப்பணி மாலையில் சேஷாத்திரிபிள்ளையின் பெருமையை உணர்த்தும் ஏழு பாடல்களில் ஈற்றுப் பாடலாக இடம் பெற்றுள்ளது.

விஜயநகர ஆட்சியில் அத்தப்ப நல்லதம்பி காங்கேயன் என்பவரால் கல்மண்டபம் ஒன்று 1600இல் கட்டப்பெற்ற செய்தி பொறிக்கப்பெற்றுள்ளது. அக் காங்கேயன் சுப்பிரமணியர் கோவிலின் முன்பண்டபத்தைக் கட்டுவித்த செய்தி வேறொரு கல்வெட்டில் குறிப்பிடப்பெற்றுள்ளது. மீண்டும் அவரால் 1619இல் குமாரசாமியார் மண்டபத்திற்கும் பெரியாண்டார் சன்னதிக்கூடத்திற்கும் சிங்கக்கால், குதிரைக்கால், தூண்கள் இருபத்திரண்டும், சக்கரம், கண்டக்கால் பன்னிரண்டும், தளவரிசையும் அமைத்துத் திருப்பணி செய்வித்த செய்தி குறிப்பிடப்பெற்றுள்ளது.

1912இல் திருச்செங்கோடு வட்டக் குமாரமங்கலம் என்னும் சிற்றூரான மேட்டுப்பாளையத்தில் வசித்த தோட்டிகள் பதினால்வர் ஓர் உடன்படிக்கையைச் செய்து கொண்டனர். அக்கிராமத்தில் அத்தோட்டிகள் அனைவர்க்கும் அரசாங்கத்தால் ஊதியம் வழங்கப்பெற்ற பின்னர் அவர்களுக்குள் ஊதிய வேறுபாடு இருப்பின் அவ்வேறுபாட்டைக் களைந்து அனைவரும் சமமாகப் பங்கிட்டுக் கொள்ளுதல் வேண்டுமென்று அவர்களுக்குள் உடன்பட்டுக் கல்வெட்டிக் கொண்டனர். ஊழியத்தில் ஏற்றத்தாழ்வு இருப்பினும் ஊதியத்தில் சமபங்கிடு செய்து கொண்ட முறை போற்றத்தக்கது.

Scanned with CamScanner

ஆறகளூர் திருக்காமீசுவரமுடையநாயனார் கோவில் முப்பது நாள் பூசை வட்டமும் திருஞானசம்பந்த பண்டிதர்க்கு உரிமையாக இருந்தது. பசுபதி பண்டிதர் என்பவர் நம்பியார் அழகியார்க்குரிய அப்பூசை உரிமையில் பதினைந்து நாள் உரிமை தனக்கு உண்டு என்றும் அதற்கான கோவில் ஆணை ஓலை உண்டென்றும் கூறி உரிமை கொண்டாடினார். பின்னர் அவர்க்கு ஏழரைநாள் பூசை உரிமை அளிக்கப்பெற்றது. அதை மறுத்து அவர் பத்தெட்டுத்தலைமுறையாக அப்பதினைந்து நாள் உரிமையைத் துய்த்து வருவதாகவும் கூறி அம்முடிவை ஏற்க மறுத்தார். பின்னர் ஊரைவிட்டு வெளியில் சென்றிருந்த நாட்டார் திருஞானசம்பந்தரை ஓலை கொடுத்து வரவழைத்தனர். வழக்கை எடுத்துரைத்தனர். பின்னர் அந் நாட்டார் முற்றுப்பெறாத நிலையிலிருந்த அவ்வழக்கைக் கேட்டுத் திருமலை நாயக்கரிடம் எடுத்துரைத்து அவருடைய தலையீட்டின் பேரில் அவர்தம் ஆணையின்படி அனைவரும் கூடி வழக்கைக் கேட்டுக் காலம் காலமாகத் தொடர்ந்து பூசை உரிமையைத் துய்த்து வந்த திருஞானசம்பந்த பண்டிதர்க்கு முப்பதுநாள் பூசை உரிமையை அளித்துத் தீர்ப்பு வழங்கினர்.

மகதை மண்டல நாட்டார் பல்வேறு வரிச்சுமையின் காரணமாகத் தங்கள் குடிகளின் நலம் குறைந்ததாகக் கூறித் தியாகணநாயக்கர் புதிய அடையோலை (வரிநிர்ணய ஓலை) கொடுத்து மிகுந்திருந்த வரிச்சுமையை (அடர்ந்தேற்றம்) தளர்த்திக் குடிமக்களைக் காப்பதாக உறுதியளித்த செய்தி கல்வெட்டில் இடம் பெற்றுள்ளது.

இராசிபுரத்து ஊர்ச்சபையாரும் நாட்டாரும் சேர்ந்து கயிலாயநாதர் திருமடைவளாகத்தில் குடியேறிய நெசவாளர் குடும்பத்திற்குத் தறிக்கு மூன்று பணம் வீதமும், வெள்ளாளர் குடியேறியமைக்காகக் குடிக்கு இரண்டு பணம் வீதமும் வரியும், எவரேனும் இவ்வெல்லையில் குற்றம்புரிந்தால் அக் குற்றத்திற்காகப் பத்துப்பணம் தண்டனையும் விதித்து அவ்வருவாயை கோவில் கருவூலத்திற்கு அளித்தனர்.

இராசிபுரத்துப் போதமலை என்னும் ஊரிலுள்ள இராசகேசரி வீரபாண்டியன் (1286) கல்வெட்டொன்று அன்றைய வரி செலுத்த இயலா நிலைமையைத் தெரிவிக்கிறது. கருங்காலி மலையின் மேல் சுக்கம்பூண்டி என்னும் ஊரில் வாழ்ந்த மலைவாசிகள் கடமை என்னும் வரி செலுத்த இயலாமையால் ஊரை விட்டுக் குடிபெயர்ந்தனர். அந்நிலையறிந்த அவ்வூர் நாட்டவரும் நகரத்தவரும் கூடி இனிவரும் நாளில் கொல்லிமலைவாசிகள் ஆண்டொன்றுக்குத் குடிக்கு ஒருபணம் வீதம் கடமைவரி செலுத்தி வந்ததைப்போல இம் மலைவாசிகளும் அதே முறையில் குடிக்கு ஒரு பணமாகச் செலுத்த ஆணை பிறப்பித்துக் கல்வெட்டினர்.

ஏழூர் நாட்டுத் திருவாரைக்கல் என்னும் ஊரில் வாழ்ந்த பதினேழு கம்பளத்தாரும் சுக்காடர் என்பவருக்கு இசைந்து இசைவுமுறி கொடுத்த செய்தி ஒரு கல்வெட்டில் இடம் பெற்றுள்ளது. எறமாஞ்சி அய்யன் அவர்கள் காலத்தில் கீழ்க்கரைப் பூந்துறை நாட்டைச் செகதேவராயர் என்பவர் ஆட்சிசெய்து வந்தார். அவருடைய காரியகர்த்தரான தம்மரசையன் அவர்கள் மரபினரும் பூந்துறை நாட்டு நாலுகவுண்டர்களும் பருத்திப்பள்ளி நாட்டுக் கொண்டரசக் கவுண்டர்களும் இராசிபுர நாட்டுத் துலுக்கண கவுண்டர்களும் காரையூரைச் சேர்ந்த நல்ல நாயனாரும் மற்றும் குடியானவர்களும் கூடியிருந்து அவ்வழக்கைக் கேட்டு நீதி வழங்கினர். சுக்காட நாயனார்க்கு அவர்கள் நாள்தோறும் சூடிவந்த மாலை உரிமை இல்லையென்று மறுக்கப்பட்ட நிலையில் இவ் வழக்கு நிகழ்ந்துள்ளது. கல்வெட்டுச் சிதைந்துள்ளமையால் செய்தி தொடர்ந்து அறிய இயலவில்லை.

### புதுமையான செய்திகள்

மூன்றாம் இராசராச சோழதேவர் காலத்தில் இராசிபுரத்தில் வாழ்ந்த வணிகர்க்குப் பல மண்டலத்து வணிகர்கள் கூடி வீரபட்டணம் ஒன்று அமைத்துக்கொடுத்துள்ள ஒரு கல்வெட்டு விளக்குகிறது. வீரபட்டணம் என்பது வணிகர்கள் தங்களுக்குரிய அனைத்து உரிமைகளையும் பாதுகாப்பினையும் கொண்ட வாணிக நகரத்தைக் குறிக்கும். இன்று அவ்வூர் இராசிபுரத்தை யடுத்துப் பட்டணம் என்று வழங்கப்பெறுகிறது.

Scanned with CamScanner

இராசிபுரத்துக் கயிலாயநாதர் கோவிலுக்கு உற்சவம் நடத்த இராசிபுர நாட்டைச் சேர்ந்த பாச்சல், குருசாமிபாளையம் முதலிய ஏழு ஊர்களில் வாழ்ந்த கைக்கோளர்க்கு மட்டும் உரிமை இருந்தது.

மல்லூர் அருகில் எருமைநாயக்கன் பாளையம் என்ற ஊரில் அம்மன்மலை எனப்பெறும் பொன்சொரிமலை ஒன்றுள்ளது. அங்குள்ள தாமரைப்பாழியின் மேற்பாறையில் புலால் மறுக்கும் திருக்குறள் ஒன்று பொறிக்கப்பெற்றுள்ளது. சமண முனிவர்கள் அம்மலையில் வாழ்ந்திருக்கலாம் என்று கருத இடமுள்ளது.

நாமக்கல் வட்டம் எருமைப்பட்டியிலுள்ள கல்வெட்டொன்றில் தேவன் என்பவர் அரச ஆணையால் நல்லூர் என்னும் ஊரில் நன்செய் புன்செய் நிலத்தின் பாதி உரிமையைப் பெற்றார் என்று தெரிவிக்கிறது. அக்கல்வெட்டில் 'ஐவர் இராசாக்கள் ஆணை' என்று குறிப்பிடப்பெற்றுள்ளது. இது இரண்டாம் சடையவர்மன் சுந்தரபாண்டியனின் ஏழாம் ஆட்சியாண்டில் (கி.பி. 1284) பொறிக்கப் பெற்றுள்ளது. இங்குக் குறிப்பிடப்பெற்றுள்ள ஐவர் இராசாக்கள் பாண்டியர்களாவர். இக்கல்வெட்டில் 'அடுத்தூண்' என்னும் இலக்கியச் சொல் ஆளப்பெற்றுள்ளது.

ஏழூரில் பாவடிப் பிள்ளையார் கோவில் ஒன்றுள்ளது. அக்கோவில் மேடையில் கி.பி. 10ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டொன்று பொறிக்கப் பெற்றுள்ளது. 'படைபிடித்த பல்லாயிரவர்க்கும் ஐம்பெருங்குழுவிற்கும் அடைக்கலம் இவை' என்னும் தொடர் குறிப்பிடப்பெற்றுள்ளது. பழைய இலக்கியங்களில் குறிப்பிடப்பெறும் ஐம்பெருங்குழுவிற்கும் இங்குக் குறிப்பிடப்பெறும் ஐம்பெருங்குழுவிற்கும் ஏதேனும் தொடர்புண்டா? என்பதை ஆராயவேண்டும்.

ஏழூர் நாட்டிலிருந்த வானவன் மாதேவி என்னும் சிற்றூரை மருத்துவர் ஒருவருக்கு இறையிலியாக அரசன் அளித்த ஆணை ஒன்று பொறிக்கப்பெற்றுள்ளது. நாங்கூரைச் சார்ந்த அறுவை மருத்துவர் (அங்க வைத்தியர்) சுவர்ணன் பாராசிரியன் ஆதித்ததேவன்என்பவருக்குஅவ்விறையிலலி நிலம் வழங்கப்பெற்றது. நாங்கூர் மக்களால் அம்மருத்துவர் 'வைத்தியபுரந்தரன்' என்னும் பட்டம் சூட்டிச் சிறப்பிக்கப் பெற்றுள்ளார். இக் கல்வெட்டுகள் சுந்தரபாண்டியன் காலத்தில் பொறிக்கப்பெற்றதாகும்.

நாமக்கல் நரசிங்கப் பெருமாள் கோவில் தானிகர் மணியக்காரர், கணக்கப்பிள்ளை, பாளையக்காரர் ஆகியோர் சேர்ந்து 'மரியாதைமுறி ஆவணம்' என்ற ஒன்றை அளித்துள்ளனர். அக்கோவில் திருமடைப்பள்ளியில் இறைவர்க்குப் பூசை செய்து படைக்க சர்க்கரைப் பொங்கல் அமுது முதலியன செய்யாமல் இருந்ததாகவும் அவற்றைப் பூசைக்குப் படைக்காமல் யாரேனும் வாங்கினாலும் விற்றாலும் பாவம் அடைவர் என்னும் செய்தியையும் அக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. இக்கோவிலிலுள்ள கல்வெட்டுகள் அனைத்தும் கொடை பற்றிய செய்தியையே கூறுகின்றன.

திருச்செங்கோடு வட்டம் மதியம்பட்டி மாரியம்மன் கோவில் அருகில் உள்ள கல்வெட்டு மல்லசமுத்திரத்தில் இருக்கும் இராசேந்திர சோழீசுரர்க்கு உதிரப்பட்டி நிலமாக இருந்த திரியம்பகபுரம் என்னும் ஊர் திருவிடையாட்டமாக விடப்பெற்ற செய்தியைத் தெரிவிக்கிறது. திருமாலுக்கு விடப்பெறும் நிலம் மட்டுமே திருவிடையாட்டம் எனப்பெறும். இங்கு சிவபெருமான் கோவில் நிலமும் திருவிடையாட்டம் என்றே குறிப்பிடப்பெற்றுள்ளது. சங்ககிரி வட்டம் மருதூரில் பொறிக்கப் பெற்றுள்ள கல்வெட்டில் சிற்றூர் குளக்குரிச்சி முதலிய கிராமங்களைக் காணி உரிமையாகப் பெற்றிருந்த வெங்கச்சி வேட்டுவரான திருவாலப்பிள்ளை என்பவர் மருதூரில் (காணி உடைய) காளியை எழுந்தருள்வித்தார். மருதூர்க்காளி என்பது இன்று மதுரகாளி என மருவி வழங்கப்பெறுகிறது.

# விடுகாதழகிய பெருமான்

## சங்க காலத்திற்குப்பின் அதியர் மரபு

சங்க கால அதியர் குடியினர் வாழையடி வாழையெனப் பிற்காலத்தும் தொடர்ந்து வாழ்ந்து வந்துள்ளனர். இதனைச் செங்கம், தகடூர் நடுகற்களும்,[1] சிவரமங்கலச் செப்பேடும்,[2] நாமக்கல் குகைக் கல்வெட்டுக்களும்,[3] ஒட்டபட்டி மேலைக்கங்கர் கல்வெட்டும்[4] தெளிவாகச் சுட்டுகின்றன.

சில இலக்கியங்களும் பிற்கால அதியர் பற்றிய குறிப்புகளைத் தருகின்றன. பெரியபுராணத்தில் புகழ்ச்சோழ நாயனாரின் காலத்தில் கருவூருக்கு அண்மையில் அதிகன் ஆட்சிபுரிந்த குறிப்புக் கூறப்படுகிறது.

> ''அதிகன்; அவன் அணித்தாக
> ஓங்கு எயில்சூழ் மலையரணத்து உள்உறைவான்''

என்பது பெரியபுராணப் பகுதி.[5]

முதலாம் குலோத்துங்களின் கலிங்கப்போரில் அதிகனும் போரிட்டான் என்று விக்கிரமசோழன்உலாக் கூறுகிறது.

> ''ஓட்டிய
> மான அரசர் இரிய வடகலிங்கத்
> தாணை துணித்த அதிகனும்''

என்பது உலா வரிகளாகும்.[6]



தொடர்ந்துவரும் அதியர் குடியில் 12ஆம் நூற்றாண்டில் இறுதியில் விடுகாதழகிய பெருமாள் என்ற பெயருடையவன் வாழ்ந்து வந்தான். இவன் மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தவன்.

ராஜராஜ அதிகமான்,[7] பிறந்த பெருமாள்[8] என்ற பெயர்கள் இவனுக்கு வழங்கின . 'ஆண்டார்' அதியமானார்' என்ற மரியாதையுடன் கல்வெட்டுக்களில் இவன் குறிக்கப்பட்டுள்ளான்.[9] அதிகேசன், அதிகேந்திரன் எனவும் இவன் அழைக்கப்பட்டான்.[10]

இவன் குறுநில மன்னராகத் தகடூரில் விளங்கினாலும் தேவைப் பட்டபோது சோழருக்குப் படைத்தலைமைபூண்டு பணிகள் ஆற்றியுள்ளான். கல்வெட்டுக்களில் இவன் 'சாமந்தன் அதியமான்' என்றும் குறிக்கப்பெறுகிறான்.[11] 'கார் அனைய கையான்' 'விரை மருவும் தார்மார்பன்' என்றெல்லாம் புலவர் விடுகாதழகிய பெருமாளைப் பாடல்களில் புகழ்கின்றனர்.[12] விடுகாதழகிய பெருமாள் 'தகடையர் காவலன்'[13] 'தகடை மன்னன்' எனக் கல்வெட்டுக்களில் குறிக்கப் பெறுகின்றான் 'விலங்காமொழி' என்று பட்டப்பெயரும் இவனுக்கு வழங்கியது.[15]

## தகடூர்

முதலாம் இராசராசன் கங்கபாடியைக் கைப்பற்றிய பின் பெரும்பாலும் கங்கநாடு சோழருக்கு உட்பட்ட பகுதியாகவே இருந்தது.[16] குவளாலபுரம் (கோலார்) உட்பட்ட கங்கநாட்டுப் பகுதி தகடூருக்கு அண்மையில் இருப்பதால் அதையும் தங்கள் பகுதியோடு இணைத்து அதியர் ஆட்சிபுரிந்தான். ஒரு கல்வெட்டு

> 'நிகரிலி சோழ மண்டலத்துக் கங்கநாட்டுத்
> தகடூர் நாட்டுத் தகடூர்'

என இப்பகுதியை அழைக்கிறது.[17] 'தென்தகடை' என்றும்,[18] 'திரை மருவும் தடங்கமலத் தகடை' என்றும்[19] புலவர்கள் புகழ்கின்றனர். தகடூர்த் தலைவன் ஒருவன் 'தகடாதிராயன் எனப்பட்டான்.[20]

## சேரர் மரபு

விடுகாதழகிய பெருமாளின் திருமலைக் கல்வெட்டின் தமிழ்ப் பகுதியில்

**'சேரவம்சத்து அதிகைமான் எழினி'**
**'வஞ்சியர் குலபதி எழினி'**

என்றும், வடமொழிப் பகுதயில்

**'ஸ்ரீமத் கேரளபூபிரிதா யவநிகா நாம்நா'**

என்றும் குறிக்கப் பெறுவதைக் காணுகிறோம்.[21] சித்தூர் மாவட்டப் பகுதிகளில் காணப்படும் விடுகாதழகிய பெருமாளின் கல்வெட்டுக்களில் இருபுறமும் சேரருக்குரிய வில் சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது.[22] லட்டிகம் கல்வெட்டில் தன்னையே சேரவம்சத்து அரசர் என்று விடுகாதழகிய பெருமாள் குறித்துக் கொள்ளுகின்றான்.[23]

## ஆட்சி எல்லை

விடுகாதழகிய பெருமாள் பாலி, டெண்ணை, பொன்னி மூன்று ஆறுகட்கும் தலைவன் என்று குறிக்கப்படுகின்றான்.[24] பாலாறு, தென்பெண்ணை, காவிரி மூன்று ஆறுகட்கு உட்பட்ட பகுதியை அவன் ஆட்சி புரிந்திருக்க வேண்டும்.[25] தருமபுரி மாவட்டம், வடஆர்க்காடு மாவட்டம், சித்தூர் மாவட்டம் பகுதிகளில் விடுகாதழகிய பெருமாள் கல்வெட்டுக்கள் கிடைக்கின்றன. அகஸ்திய கொண்டாமலைக் கல்வெட்டில் விடுகாதழகிய பெருமாள் தனக்குக் காடவர், மகதர், கங்கர் ஆகியோர் பகைவர் என்பதைத் தெளிவாகச் சுட்டுகின்றான்.[26] இப்பகுதிக் குறுநில மன்னர்களின் ஆட்சிப் பகுதிகளுக்கு இரண்டாம் ராசராசன் காலத்தில் எல்லைகள் நிர்ணயம் செய்யப் பட்டதாக ஒரு கல்வெட்டுக் கூறுகிறது.[27]

## சமயப்பணி

வாணியம்பாடியில் சிவாலயம் ஒன்று விடுகாதழகீச்சுரம் எனப் பெயர் பெற்றுள்ளது.[28] இம் மன்னனின் உடல் நலத்துக்காகத் தகடூர்க் கோயிலுக்குக் கொடை அளித்த பணியாளர் பெயர்



'பம்மர்க்கூத்தன் புலியூர் கிழவன் தம்பிரான தோழன்' என்பது.[29] இவன் காலத்தில் காளத்தி மலையிலிருந்து 'வண்ணானைக் கும்பிட்டார்' என்னும் அடியார் தகடூர் வந்து திருப்பணிக்கு உதவினார்.[30] 12ஆம் நூற்றாண்டில் தகடூர்க் கோயில்கள் சிதைந்து பூசையின்றிக் கிடந்தன. விடுகாதழகிய பெருமாள் காலத்தில் அவை திருப்பணி செய்யப்பெற்றுப் 'புதுக்குச் சாந்தும்' பெற்றன. தில்லையிலிருந்து சிவப்பிராமணர் வரவழைக்கப்பட்டுப் பூசை செய்ய ஏற்பாடு செய்யப்பெற்றது.

திருமலையில் தன் முன்னோனான அதிகைமான் எழினி செய்வித்த சமண இயக்கர், இயக்கிகளைப் புதுப்பித்தான். அந்தச் சமணப் பள்ளிக்கு எறிமணி அளித்தான். அப்பள்ளியின் கொடை நிலத்தில் உள்ள கடப்பேரி பாசன வசதி பெறும் பொருட்டுக் கால்வாய் அமைத்தான்.

## கூட்டணி

மூன்றாம் குலோத்துங்க சோழனுக்குப் பின் வலிமையான சோழ அரசர் எவரும் இல்லாத காரணத்தால் சோழ நாட்டின் வடபகுதிச் சிற்றரசர்கள் தம் எல்லைகளையும் அதிகாரத்தையும் விரிவாக்கிக் கொள்ள முற்பட்டபோது தங்களுக்குள் சதா பூசலிட்டுக் கொண்டனர். அதன் விளைவாகக் கூட்டணி ஒன்றை ஏற்படுத்திக் கொண்டனர்.

முதலில் மலையமானும், சம்புவராயருள் ஒருபிரிவினரும் ஒன்றாக இணைந்தனர். இவர்கட்கு எதிரிகள் யாதவராயர், செய்யகங்கர், குலோத்துங்க சோழச் சம்புவராயர் ஆகிய மூவர். அப்போது விடுகாதழகிய பெருமாள் முதலிருவரோடு சேர்ந்து கொண்டு ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ளுகிறான். பிற்கால அரசு ஒப்பந்தங்களுக்கெல்லாம் வழிகாட்டும் வகையில் அழகிய நடையில் அவ்வொப்பந்தம் அமைந்துள்ளது.[31]

## பெயர்க்காரணம்

நாமக்கல் கல்வெட்டில்கூட அக்கால அதியமான் 'உத்பல கர்ணிகன்' (அழகான காதுடையவன்) என்று கூறப்பெறுகின்றான். எனவே காதழகுப் பெயர் அதியர் பரம்பரைப் பெயர் போலும்.'

# எழுத்துப் பொறிப்புப்பெற்ற தீர்த்தங்கரர் திருமேனி

அண்மையில் முதல் இராச ராசசோழனின் கல்வெட்டு பொறிக்கப்பட்ட சமணத் தீர்த்தங்கரர் சிற்பம் ஒன்று பந்தல்குடி என்ற ஊருக்கு அருகில் கண்டறியப்பட்டுள்ளது. பந்தல்குடி விருதுநகர் மாவட்டம் அருப்புக் கோட்டையிலிருந்து எட்டையாபுரம் செல்லும் நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. இவ்வூரின் தென்கோடியில் நெடுஞ்சாலைக்கு மேற்காக அமைந்த நெடுங்கரைப்பட்டி என்ற பகுதியில் பாலவரதவிநாயகர் என்ற பிள்ளையார் கோவில் ஒன்று உள்ளது. இது பந்தல்குடிக் கண்மாயின் கரையில் அமைந்துள்ளது. அண்மைக்காலத்தில் எடுத்துக் கட்டப்பெற்ற இவ்விநாயகர் கோவில் வாயிலின் வெளிப்புறத்திலேயே இத்தீர்த்தங்கரரின் கற்சிற்பம், கிழக்கு நோக்கி அமர்ந்த நிலையில் காணப்படுகின்றது. இத்தீர்த்தங்கரரின் சிற்பம் முன்பு இக்கோயிலுக்கு அருகில் பந்தல்குடிக் கண்மாயின் கரையிலமைந்த ஆலமரத்தடியில் இருந்ததாகவும் திடீரென அடித்த காற்றால் ஆலமரம் இதன் மீது சாய்ந்தமையால் இரண்டாக உடைந்த நிலையில் தற்போது விநாயகர் கோவிலின் முன்பாக எடுத்து வைக்கப்பட்டதாகவும் இப்பகுதி மக்கள் கூறுகின்றனர். ஒரு காலத்தில் இத்தீர்த்தங்கரர் இப்பகுதியிலமைந்த ஒரு சிறிய கோவிலில் (சமணப் பள்ளியில்) இருந்திருக்க வேண்டும். அதற்கான சான்றுகள் இன்னும் பந்தல்குடி கண்மாயின் கரையில் காணப்படுகின்றன.

இத்தீர்த்தங்கரரின் சிற்பம் இரண்டரை அடி உயரமுள்ளது. இருபுறமும் இரு சிங்கங்கள் நிற்கும் இணையரியாசனத்தில் வலக்கால் பாதத்தினை இடக்காலின் மீது போட்டு அர்த்தபரியங்காசனத்தில் முக்குடையின் கீழே அமர்ந்த நிலையில் வடிக்கப்பட்டுள்ளது. அரியணையின் இருபுறமும், பின்புறத்தில் இரண்டு மகரவாய்கள் எளிய முறையில் காணப்படுகின்றன. தீர்த்தங்கரரின் பின்புறத்தில் சாய்வதற்கென்று அமைத்த திண்டும், தலையைச் சுற்றி ஒளிவட்டமும் உள்ளன. தலைக்கு மேல்புறம் உள்ள முக்குடையின் பக்கவாட்டில் அசோகமரத்தின் கிளைகள் இரண்டு மலர்களுடனும் மணிகளுடனும் காட்சியளிக்கின்றன. மேலும் தீர்த்தங்கரர்க்கு இருபுறமும் சாமரங்களுடன் இருவர் இடையில் கைவைத்து நிற்கின்றனர். இச்சிற்பத்தினுடைய பீடத்தின் முன்புறமும் பக்கவாட்டிலும் வட்டெழுத்தில் அதனைச் செய்வித்தவர் பற்றி ஏழுவரிகளில் கல்வெட்டு காணப்படுகின்றது.

தமிழ்நாட்டில் காணப்படும் சமணப்பள்ளிகள் அமைந்த குன்றுகளில் புடைப்புச் சிற்பங்களாக சமணத்திருமேனிகள் பல அவற்றைச் செய்வித்தோர் பெயருடன் கூடிய கல்வெட்டுகளுடன் காணப்படுகின்றன. ஆனால் இதுபோன்று கல்வெட்டுப் பொறித்த நிலையில் தனித்த முறையில் அமைந்த சிற்பமாகக் காணப்படுவது மிகவும் அரிதாகும். 'கிடங்கில்' என்ற இடத்தில் கல்வெட்டுப் பொறித்த தீர்த்தங்கரரின் செப்புத் திருமேனி ஒன்று கிடைத்துள்ளது.[1] புதுக்கோட்டைக்கு அருகிலுள்ள ஊர் ஒன்றில் சோழர்கால இயக்கி சித்தாக்கியாவின் கற்சிற்பம் ஒன்று கல்வெட்டுப்பொறித்த நிலையில் கிடைத்துள்ளது.[2] இதுபோன்று தனித்த நிலையில் சமணத்திருவுருவங்களைச் செய்து அவற்றின் அடியில் அவற்றைச் செய்வித்தோர் பெயரைக் கல்வெட்டாகப் பொறித்து வைக்கும் வழக்கம் வடநாட்டில் மதுரா போன்ற இடங்களில் காணப்படுகின்றது. தமிழ்நாட்டிற்கு அண்மையிலுள்ள கர்நாடகத்திலும் இவ்வழக்கம்காணப்படுகின்றது. இம்முறையைப் பின்பற்றி இப்பந்தல்குடிச் சிற்பம் செய்யப்பட்டு அதில் அதனைச் செய்வித்தார் பெயர் கல்வெட்டாகப் பொறிக்கப் பட்டிருக்கவேண்டும்.

பாண்டிநாட்டுச் சமணத்தலங்களில் அமைந்த குன்றுகளில் காணப்படும் புடைப்புச் சிற்பங்களின் அடியில் சிலவற்றைத் தவிர அரசனது ஆட்சியாண்டுடன் அவற்றைச் செய்வித்தோர் தானமளித்தோர் பற்றித் தெரிவிக்கும் கல்வெட்டுகளைக் காண்பதும் அரிதாக உள்ளது. இந்நிலையில் முதல் இராசராச சோழனின் பெயரும் அவனது ஆட்சியாண்டும் பொறித்த நிலையில் தீர்த்தங்கரரின் கற்சிற்பம் கிடைத்திருப்பது இதுவே முதல் முறையாகும். இச்சிற்பம் மிகுந்த கலைச்சிறப்புடன் அமைந்த சிற்பம் என்று கூறமுடியாவிட்டாலும் தீர்த்தங்கரர் திருமேனிக்குரிய இலக்கணத்துடன் எளியமுறையில் வடிக்கப் பெற்றுள்ளது. முற்காலப்பாண்டியர் காலத்தில் பாண்டி நாட்டில் சிறப்புடன் விளங்கிய சமணசமயம் தொடர்ந்து பாண்டி நாட்டில் சோழரின் ஆட்சியின் போதும் சிறப்புடன் விளங்கியிருப்பதை இச்சிற்பம் காட்டுகின்றது.

**கல்வெட்டுச் செய்தி**

முதல் இராசராசசோழனின் 22ஆம் ஆட்சியாண்டில் (கி.பி.1007) இத்தீர்த்தங்கரரின் திருமேனி செய்து வைக்கப்பட்டிருக்கின்றது. இதனை வெண்புநாட்டு நாலூரில் இருந்த சமணப்பள்ளிக்குப் புகழ்சடையன் என்பவன் தனது பாட்டனார், பாட்டி ஆகியோரது நினைவாக (சார்த்தி) செய்து வைத்ததாக கல்வெட்டு தெரிவிக்கின்றது. இக்கல்வெட்டில் அவனது இச்செயல் அவனது தந்தை வழியுடன் தாய்வழி வழிமுறைப்பெயர் பட்டியலுடன் விளக்கமாக எடுத்துக் கூறப்பெற்றிருப்பது இக்கல்வெட்டின் மற்றொரு சிறப்பாகும். பொதுவாக முற்காலப் பாண்டியர் காலக் கல்வெட்டுகளிலும், அதன் பின்னர் வந்த கல்வெட்டுக்களிலும் இவ்வகைச் சிற்பங்கள் செய்வித்தோரின் தந்தைவழிமுறையே குறிப்பிடப்படுகின்றது. இங்கு தாய்வழிமுறைப்பட்டியலும் சிறப்பித்துக் குறிப்பிடப்படுகின்றது. இவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பதற்குக் காரணம் தாய்வழியின் சிறப்புமிக்க தலைமுறை கருதியே எனலாம்.

**கல்வெட்டுப்பாடம்**

1. ஸ்ரீஇராச இராச தேவர்க்குயாண்டு இருபத்தி[ரண்]டாவது
   வெண்புணாட்டு நா

Scanned with CamScanner

2. ஓாரவி சேரிபள்ளிக்கு இவ்வூர் மாறஞ்சடையன் மகன்
சடையசங்கையன் ம

3. கன்சங்கையஞ்சடையன்மகள்சடையநற்சக்கி[யை][3]
இந்நாட்டு வெண்புரை திணை

4. வழுவிலி மகன் வழுவிலிசாத்தன் பெற்ற சடையநற்சக்கி
மகன் சாத்

5. தம்புகழ் மகன் புகழ்சடயேன் எம்மூத்தப்பன் வழுவிலி
சாத்த

6. ணையும் எம்மூத்தம்மை சடையன்நற்சக்கியையுஞ் சாத்தி

7. இட்ட [கற்திரு]மேனி.

இக்கல்வெட்டில் குறிக்கப்பெறும் அரசன் முதல் இராசராச சோழன் என்று கொள்வதற்குக் காரணம் இக்கல்வெட்டு வட்டெழுத்தில் பொறித்துள்ளமையே ஆகும். இரண்டாம், மூன்றாம் இராசராசசோழன் காலத்துக் கல்வெட்டுக்கள் பாண்டி நாட்டின் தென்பகுதிகளில் கிடைக்கவில்லை. சோழவந்தான், தென்கரை போன்ற சில இடங்களைத் தவிர்த்துப் பல இடங்களில் முதல் இராசராசனின் கல்வெட்டுக்கள் வட்டெழுத்திலேயே எழுதப்பெற்றுள்ளன. மேலும் இச்சிற்பம் காணப்படும் பகுதியிலேயே திருச்சுழியல் என்ற ஊரில் வட்டெழுத்தில் எழுதப்பெற்ற முதல் இராசராசனின் இரண்டு கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.[4]

## நாலூர் அவிசேரிப்பள்ளி

இச்சிற்பம் கிடைத்துள்ள பகுதி வெண்புநாடு என்ற உள்நாட்டுப் பிரிவைச் சார்ந்த பகுதியாகப் பாண்டியர் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகின்றது. பாண்டியர் காலத்தில் இந்நாட்டுப்பகுதியில் சமண சமயம் சிறப்புடன் விளங்கி உள்ளதை இப்பகுதியில் கிடைக்கும் சமணத் தீர்த்தங்கரரின் சிற்பங்கள், கல்வெட்டுக்கள் ஆகியவை உணர்த்துகின்றன.[5] வெண்புநாட்டுப் பகுதியிலேயே புகழ்பெற்ற சமணப்பள்ளியான 'குறண்டி திருக்காட்டாம்பள்ளி' சிறப்புடன் விளங்கி இருக்கிறது.[6] பாண்டிநாட்டுக் கழுகுமலை சமணப்பள்ளியில் செய்தளிக்கப் பட்டிருக்கும் சமணசிற்பங்கள் பலவற்றையும் செய்வித்தோரில் முன்னிற்பவர்களில் ஒருவராக வெண்பு நாட்டு ஊர்களைச் சார்ந்தவர்கள் விளங்குகின்றார்கள்.[7] வெண்பு நாட்டைச் சார்ந்த 'நாலூர்' என்ற பெயர் கழுகுமலைக் கல்வெட்டில் குறிப்பிடப்படும் வெண்புநாட்டு நாலூராக இருக்கவேண்டும்.[8] ஆனால் தற்போது இப்பெயர் இச்சிற்பம் காணப்படும் ஊருக்கு வழங்கப்படவில்லை. இவ்வூர் முற்காலப் பாண்டியர் காலத்திலும் சிறப்பு வாய்ந்த சமணத்தலமாக விளங்கி தொடர்ந்து கி.பி.11ஆம் நூற்றாண்டில் சோழர்காலத்தில் சிறப்புற்று விளங்கியிருக்க வேண்டும் என்பதை கழுகுமலைக் கல்வெட்டுக்களும் புதியதாகக் கண்டறியப்பெற்ற இராசராசன் கல்வெட்டும் உறுதிப்படுத்துகின்றன. நாலூரைச் சார்ந்த 'ஏனாதி மாகணக்குரத்தி' என்ற சமணப்பெண்துறவி ஒருவர் கழுகு மலையில் தீர்த்தங்கரர் திருமேனி ஒன்று செய்வித்துள்ளதைக் கழுகுமலைக் கல்வெட்டு தெரிவிக்கின்றது.[9] இச்சமணப் பெண்துறவி தோன்றிய நாலூரில் இராசராசன் காலத்தில் அவிசேரிப்பள்ளி என்ற பெயரில் சமணப்பள்ளி ஒன்று சிறப்புடன் விளங்கியதை தீர்த்தங்கரர் உருவத்தில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டு தெரிவிக்கின்றது. தற்போது இது முற்றிலும் அழிந்து போய் அதில் செய்து வைக்கப்பட்டிருந்த தீர்த்தங்கரரின் உருவம் மட்டும் எஞ்சிய நிலையில் காணப்படுகின்றது. இப்பள்ளி நாலூரில் 'அவிசேரி' என்ற பகுதியில் இருந்தமையால் அவிசேரிப்பள்ளி என்று அழைக்கப்பட்டிருக்க வேண்டும். அவிசேரி என்பது வேள்வித்தொழில் செய்யும் அந்தணர் குடியிருப்புப் பகுதியாக இருக்க வேண்டும். தொழில் அடிப்படையிலும் பிறவகையிலும் பாண்டி நாட்டிலிருந்த ஊர்கள் சேரிகளாகப் பிரிக்கப் பட்டிருந்ததற்கு இக்கல்வெட்டு ஒரு சான்றாகும். முற்காலப்பாண்டியர் காலத்தில் கூத்தன்குடி என்ற ஊரில் அறுவைவாணிபச்சேரி[10] என்றும் வெண்பைக் குடியில் வெட்டஞ்சேரி[11] என்றும், களக்குடியில் மங்கலச்சேரி என்றும்[12] இருந்திருப்பதைப் பாண்டியர் கல்வெட்டுக்கள் தெரிவிப்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

## புகழ்சடையனின் தலைமுறையினர்

இத்தீர்த்தங்கர் திருமேனியைச் செய்வித்த புகழ் சடையனின் முன்னோர்கள் பாண்டியர் காலத்தில் தாய்வழியில் பாண்டியரது அரசியல் அதிகாரிகளாகவும் தந்தைவழிகளில் ஊர்களில் பணிபுரிந்த நில வருவாய் தொடர்பான அதிகாரிகளாகவும்

Scanned with CamScanner

தொடர்பான அலுவலராகப் (கணக்கர்) பணிபுரிந்திருக்கின்றான். இவன் கல்வெட்டில் வெண்புரை திணை என்று அவனது ஊரையும் சேர்த்து குறிப்பிடப்படுகின்றான். முற்காலப் பாண்டியர் காலத்தில் ஒவ்வொரு ஊரிலும் அவ்வூருக்கென்று நிலவரி போன்ற வரிகளை மக்களிடமிருந்து வாங்கவும் கணக்கிடவும் திணைக்களத்து அதிகாரிகள் பணி புரிந்திருக்கின்றார்கள். முற்காலப் பாண்டியர் கல்வெட்டுகளில் இவர்கள் 'திணைக்களத்தான்' என்று குறிப்பிடப்படுகின்றனர். அம்பாசமுத்திரம் கல்வெட்டில் வெண்புநாட்டைச் சார்ந்த நால்கூர் திணைக்களத்தானாகிய சாத்தன் என்பவன் குறிப்பிடப்படுகின்றான்.[18] கி.பி. ஐந்தாம் நூற்றாண்டுப் பூலாங்குறிச்சி கல்வெட்டிலும் பெருந்திணை என்ற வருவாய்த்துறை அலுவலர் குறிக்கப்படுகின்றனர். நான்கு வகையான திணைகளையும் அக்கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது. மேற்குறிப்பிட்ட 'திணை' அலுவலர் சோழர்கால கல்வெட்டுகளில் விரிந்த அளவில் திணைக்களம், திணைக்களநாயகம், திணைக் களக்கண்காணி என்று அழைக்கப்படுகின்றனர்.

## முடிவுரை

புதியதாக கண்டறியப்பெற்ற இத்தீர்த்தங்கரர் சிற்பம் பாண்டிய நாட்டு அரசியல், சமயம், சமுதாய வரலாற்றில் ஓர் இன்றியமையாத இடத்தைப் பெற்று விளங்குகின்றது என்பதை மேற்கண்ட செய்திகள் உணர்த்துகின்றன. மேலும் அக்காலத்தில் ஆள்பெயர் மற்றும் உறவுப்பெயர்கள் எவ்வாறு அமைந்திருந்தன என்பதையும் அறியவுதவும் புதிய கல்வெட்டாகவும் இது விளங்குகின்றது.

Scanned with CamScanner

# அழுந்தூரும் அழிந்தியூரும்

கி.பி. எட்டாம் நூற்றாண்டில் பல்லவர் மேலாண்மையை ஏற்றுக் கொண்டு 'முத்தரையர்' என்னும் சிற்றரச மரபினர் சோழநாட்டுப் பகுதியில் ஆட்சி புரிந்தனர். நாலடியார் இவர்களைப் 'பெருமுத்தரையர்' என்று கூறும்.[1]

முத்தரையர் நியமம், செந்தலை, வல்லம், தஞ்சை போன்ற பகுதிகளில் தங்கள் ஆட்சியை நிறுவினர். அம்முத்தரையர் தலைவர்களில் ஒருவர் பெரும்பிடுகு முத்தரையனான சுவரன் மாறன் என்பவர். அவர் தம் பகைவர்களான பாண்டியரையும், சேரரையும், மணலூர், கொடும்பாளூர், காரை, காந்தளூர், கண்ணனூர், செம்பொன்மாரி, மறங்கூர், அண்ணல் வாயில், அழிந்தியூர் ஆகிய ஊர்களில் வென்றதாகப் புலவர்கள் பாடியுள்ளனர். அப்பாடல்கள்தாம் புகழ்வாய்ந்த செந்தலைப் பாடல் கல்வெட்டுக்கள் ஆகும்.[2]

அழிந்தியூரில் பெரும்பிடுகு முத்தரையனாயின சுவரன்மாறன் ஆற்றிய போர் பற்றிப் பாடிய புலவர் பாச்சில்வேள் நம்பி என்பவர். அப் பாடல்,

வெங்கண் பொருகயல்சேர் வெல்கொடியோன் வான்மாறன்
செங்கண் கரும்பகடு சென்றுழக்க–அங்குலந்தார்
தோ்அழுந்தி மாவழுந்திச் செங்குருதி மண்பரந்த
ஊர்அழிந்தி யூர் என்னும் ஊர்

என்பதாகும்.[3]

முத்தரையர் போரில் பகைவரை எதிர்த்துப் போரிட்டுப் பெரு வெற்றிபெற்ற 'அழிந்தியூர்' தஞ்சை மாவட்டத்தில் மயிலாடுதுறை வட்டத்தைச் சேர்ந்த 'தேரழுந்தூர்' என இன்று வழங்கும் ஊர் என்று மு.இராகவையங்கார் அவர்கள் எழுதியுள்ளார்.[4] அழுந்தூர்-திரு அழுந்தூர் என்பதே தேரழுந்தூர் என மாறியது. அழுந்தியூர் பற்றிய வேறு கருத்துக்களும் உள்ளன.

தஞ்சை மாவட்டத் திருவழுந்தூர் 11ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உய்யக்கொண்டார் வளநாட்டில் திருவழுந்தூர் நாட்டைச் சேர்ந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.[5]

இக் திருவழுந்தூர் கம்பர் வரலாற்றோடு தொடர்புடையது.

கம்பன் பிறந்தஊர் காவேரி தங்கும்ஊர்
கும்பமுனி சாபம் குறைந்தஊர்–செம்பதுமத்
தாதகத்து நான்முகனும் தாதையும்தே டிக்காணா
ஓதகத்தார் வாழும்அழுந் தூர்

என்பது ஒரு பழம்பாடலாகும்.[6] ஒரு இராமாயண ஏட்டில்

ஆனின் கொடைச்சகரம் ஆயிரத்து நூறொழித்துத்
தேவர் திருவழுந்தூர் நன்னாட்டு–மூவலூர்த்
சீரார் குணாதித்தன் சேய்அமையப் பாடினான்
காரார்கா குத்தன் கதை

என்ற பாடல் காணப்படுகிறது.[7]

அழுந்தூர் - திருவழுந்தூர் என்றே எல்லா இடங்களிலும் குறிக்கப்பெறும் கம்பர் பிறந்த சிறப்புடைய இவ்வூர் முத்தரையர் போரிட்ட அழிந்தியூர் ஆகுமா? என்பது கேள்வி.

திருச்சிக்குத் தெற்கில் 18 கி.மீ. தொலைவில் அழுந்தூர் என்ற தொன்மையான ஊர் ஒன்று உள்ளது. அவ்வூரின் வரகுண ஈச்சுரம் என்ற பழம்பெரும் சிவன்கோயில் சிதைந்த நிலையில் உள்ளது. அங்குள்ள கல்வெட்டு அவ்வூரை 'அழிந்தியூர்' என்றே குறிக்கிறது. முற்காலப் பாண்டிய மன்னர் பெயரால் அமைந்த

Scanned with CamScanner

வரகுண ஈச்சுரம் என்ற அக்கோயிலில் உள்ள கல்வெட்டுக்கள் முதன்முறையாகத் தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டியல் துறையினரால் படியெடுக்கப்பட்டன.[8] அங்குள்ள முதல் குலோத்துங்க சோழனின் 48 ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் 'இரட்டபாடி கொண்ட சோழவளநாட்டு உறத்தூர்க் கூற்றத்துத் திருஅழிந்தியூர்' என்றும், மாறவர்மன் குலசேகர பாண்டியனின் 38ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் 'வடகோனாட்டு அழிந்தியூர்' என்றும் அவ்வூர் குறிக்கப்படுகிறது.

மற்றொரு கல்வெட்டில், அவ்வூரில் வாழ்ந்த காடையான் வலையன் குற்றிச்சேந்தன் ஆன பெரியநாட்டு முத்தரையன் என்பவன் அவ்வூர்க்கு உரிமையுடைய காணியாளனாகக் குறிக்கப்பெறுகின்றான். முத்தரையர் வெற்றிபெற்ற அவ்வூரில் முத்தரையத் தலைவர்கள் நிரந்தரமாகக் குடியேறினர் போலும். இக் கல்வெட்டில் அழிந்தியூர் எனக் குறிக்கப்பெறுகிறது.

முத்தரையர் பல்லவர்களின்கீழ்ப் பாண்டிய நாட்டு எல்லையில் காவல் புரிந்தனர். முத்தரையர் படையெடுப்புக்கள் அனைத்தும் பாண்டிய நாடு உள்ள தென்திசை நோக்கியே இருந்தன என்பது அறிஞர் கருத்து.[9] காரை, கண்ணனூர், கொடும்பாளூர், மணலூர், செம்பொன்மாரி, அண்ணல்வாயில் போன்று முத்தரையர் போரிட்ட பிற ஊர்களும் மேற்கண்ட திருச்சிக்குத் தெற்கேயுள்ள அழிந்தியூரைச் சுற்றியே உள்ளன.

எனவே முத்தரையர் பகைவருடன் போரிட்டது சோழ நாட்டுத் திருஅழுந்தூர் (தஞ்சை மாவட்டம்) அல்ல ; பாண்டியநாட்டு எல்லையின் அருகே உள்ள (திருச்சி மாவட்டம்) அழிந்தியூரே என்பது பெறப்படுகிறது.

தஞ்சையின் வடகிழக்கே 60 கி.மீ. தொலைவில் உள்ளது கம்பரோடு தொடர்புடைய அழுந்தூர் ; அழிந்தியூரோ தஞ்சையின் தென் மேற்கில் 60 கி.மீ. தொலைவில் உள்ளது.[10]

## அழிந்தியூர் வரகுண ஈச்சுரக் கல்வெட்டுக்கள்

### அ. வடக்குச் சுவர்க் கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீகோமாற பன்மராந திரிபுவநச் சக்கரவத்திகள் ஸ்ரீகுலசேகர தேவற்கு யாண்டு 38வது பங்குனிமாதம் 10 தேதி வடகோனாட்டு அழிந்தியூராராக இசந்த ஊரவரோம் நாயநார் மன்னற்கு பிரமாணம் பண்ணிக்குடுத்த பரிசாவது எங்கள் பக்கல் இவர் விலைகொண்டு நாங்கள் உடையார் வரவுணீசுரமுடைய நாயநாற்கு குடிநீங்காதேவதாநமாகத் திருச்சூலத். தாபநம் பண்ணிக்குடுத்த குடிக்காடு தட்டான்குள

2. மும் கணக்கன்குளமுமாந வரவுணப் பெருமாள் நல்லூற்கு கடமை நிச்சயித்தபடி இக்குடிகாடு நான்கெல்லைக் குட்பட்ட வயலில் பயிரேறின நிலம் பயிர் பார்த்து பயிர்கண்ட நிலத்துக்கு மாத்தால் அஞ்சுகலமாக வந்த நெல் நாயனார் திருக்கொட்டாரத்தே தேவதாநம் கோயில் கணக்கந் சீகாரியம் செய்வாரோமே அளக்கக் கடவாராகவும் இவ்வயலில் எள்ளு வரகு தினை விளைஞ்சபயிருக்கு மாத்தாலிரண்டு பணம் கொள்ள்க் கடவ தாகவும் இப்படிக்கு சந்திராதித்தவரை செ

3. ல்லக்கடவதாகக் கல்லும் வெட்டிப் பிரமாணம் பண்ணிக்குடுத்தோம் நாயநார் மன்நற்கு வடகோநாட்டு அழிந்தியூர் ஊரவரோம் கோநாட்டுவேளாந் எழுத்து அணுக்கநம்பி எழுத்து பிள்ளைவேளாந் எழுத்து இராசவேளாந் எழுத்து அழகியசோழவேளாந் எழுத்து திருநீற்றுச்சோழ வேளாந் எழுத்து அணுக்கிவேளாந் எழுத்து அழகர்மூவேந்தவேளாந் எழுத்து விக்கிரமசோழவேளாந் எழுத்து.

### ஆ. மேற்குச் சுவர்க் கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ இக்கல் ஒன்றும் அழிந்தியூரில்
2. வண்ணான் அழிவில்லாததேவன் மொண்ணை தன்மம்

## இ. கிழக்குச் சுவர்க் கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ புதழ்மாது விளங்க ஜயமாது விரும்ப நிலமகள் நிலவமலர்மகள் புணர உரிமையிற் சிறந்த மணிமுடிசூடி மீநவர் நிலைகெட வில்லவர் குலைதர ஏனை மன்னவ ரிரியலுற்றிழிதர திக்கனைத்தும் தந் சக்கர நடாத்தி வீர ஸிம்ஹாஸனத்து உலகுடையாளொடும் வீற்றிருந் தருளிய கோவிராஜகேசரி பந்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழதேவற்கு யாண்டு 48ஆவ்து இரட்டபாடி கொண்ட சோழவளநாட்டு உறத்தூர் கூற்றத்துந் திருவழிந்தியூராக இசந்த ஊரோம் எங்களிலிசைந்த பரிசாவது இவ்வூர் வரகுண ஈஸ்வரமுடைய மகாதேவற்கு திருமண்டபமும் எடுப்பித்து திருமேனியும் எழுந்தருளிவித்து மற்றுமுள்ள திருப்பணிகளும் செய்விக்கக் கடவோமாகவும் இத்திருப்பணிகளுக்கு உடலாக புந்செயிலும் மெந்செயிலும் அளந்து முதலான தானியத்தில் கலத்துவாய் னாழி தானியம் அளக்கக் கடவோம்...'